# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 006 வள்ளுவர் ஆண்டு: 2044 கார்த்திகை 16, திங்கள் 02.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




இடியுடன் கூடிய மழை

28°C 24°C




பக்கம் 03

கொட்டும் மழையின் மத்தியிலும் நிலாவரையில் பாதீனியம் அழிப்பு



பக்கம் 06

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி அளிக்கும்



பக்கம் 07

தளர்த்தப்பட்டன ஈரான் மீதான தடைகள்



பக்கம் 23

அதிக சதங்கள் அடித்த இந்திய அணி


# அவசரமாக டில்லிக்கு பயணமாகிறார் பஸில்

### 13 ஆவது திருத்தம், அரசியல் தீர்வு குறித்து உறுதிமொழி வழங்குவார்



கொழும்பு, டிசெம்பர் 2

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியின் விசேட தூது வராக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ டில்லிக்குச் செல்லவுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தையும், பிரதமர் மன்மோகன் சிங்கின் யாழ். வருகையையும் டில்லி இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று உறுதிப்படுத்தின.

வடக்கு முதலமைச்சரின் அழைப்பின் பிரகாரம் பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குத்திட்டமிட்டுள்ளார் என்றும், ஆனால், அதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லை என்றும் தமிழக காங்கிரஸின் தலைவர் ஞான தேசிகன் நேற்றுத் தெரிவித் தார். அதேவேளை, இந்திய மத் திய நிதியமைச்சரான ப.சிதம் பரமும் பிரதமரின் யாழ். பயணத்தை உறுதிப் படுத்தியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டைப் புறக்கணித்த இந்தியப் பிரதமர், கடுந்தொனியிலான செய்தியுடன் இலங்கை வருவதற்கு திட்டமிட்டுள்ள நிலையிலேயே அவரை சாந்தப்படுத்தும் நோக்

21 ஆம் பக்கம் பார்க்க

## றெக்ஷயன் கொலைச் சம்பவம்: இதுவரை யாரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.02

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷயனின் படுகொலை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

றெக்ஷயனின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று நேற்றுத் தகவல்கள் வெளியாகின. இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

"படுகொலை தொடர்பில் புலனாய்வுத் துறையினர் பல்வேறு கோணங்களில் விசாரணை

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா விரும்புவதைப் போன்று '13' ஐ நடைமுறைப்படுத்த முடியாது

### சொல்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண



கொழும்பு, டிசெ. 2

"இந்தியாவின் விருப்பத்திற்கேற்ப 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த முடியாது. அதில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தே அரசு நடைமுறைப்படுத்தும்."

இவ்வாறு சிரேஷ்ட அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான திஸ்ஸ விதாரண நேற்றுத் தெரிவித் தார்.

இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் நேற்றுமுன் தினம் 13 ஆவது திருத்தத்தை இலங்கை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். இவ்விடயம் குறித்து வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து அரசும் கலந்தாலோசித்துக் கொண்டு தான் வருகிறது. ஆனால், இந்தியா கூறுவதைப் போன்று அதை அப்படியே நடைமுறைப் படுத்தி விடமுடியாது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட காலத்திற்கும் தற்போதைய காலத்திற்கும் பல மாற்றங் கள் உள்ளன. அதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அத்தோடு, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டின் எந்தவொரு

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்த வருடத்தில் முதலாவது மலேரியா நோயாளி யாழில்

யாழ்ப்பாணம், டிசெ.02

இலங்கையில் இந்த வருடத்தில் முதன்முதலாக மலேரியா நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணத்தில் இனங் காணப்பட்டுள்ளார். யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு மலேரியா நோயால் பாதிக் கப்பட்டுள்ளார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த நபர் தென்னாபிரிக்க நாட்டுக்குச் சென்று வந்த நிலையிலேயே அவர் மலேரியா நோயால் பாதிப்புற்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரை மலேரியா நோயினால் எவரும் பீடிக்கப்பட்டிருக்கவில்லை என்று அண்மையில் சுகாதாரத் திணைக்களம் அறிவித்திருந்த நிலையில் யாழ்ப் பாணத்தில் ஒருவர் மலேரியா நோயால் பாதிப்புற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-4)

## யாழ். மாவட்டத்தில் மீண்டும் டெங்குத் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.02

மழை காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை யாழ்.மாவட்டத்தில் திடீரென அதிகரித்துள்ளது. கடந்த மாதம் மாத்திரம் 36 பேர் டெங்குத் தொற்றுக் குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்கு நோயால் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் இதனால் எந்தப் பகுதியில் டெங்குநோயின் பரவல் தீவிரமாக உள்ளது என்பதை இனங்காண முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு தொற்றுக்கு உள்ளாகி நேற்றைய தினமும் ஒருவர் ச்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கிலிருந்து பாதீனியத்தை விரட்டுவோம்



வடமாகாணத்தில் பெருமெடுப்பில் பரவி விவசாய நடவடிக் கைகளுக்கும் பொது மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக வுள்ள பாதீனியத்தை ஒழிக்கும் நடவடிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கொட்டும் மழைக்கு நடு விலும் நேற்று ஆரம்பித்து வைத்தனர். (விரிவான செய்தியும் படங்களும் 2,3 ஆம் பக்கங்களில்) (ங-14)

## இன்றும் கடும் மழை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ.02

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இன்று காலை 6 மணியிலிருந்து 22 மணித்தியாலங்களுக்கு தொடர்ந்து இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்திய முள்ளதாக யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

எனவே கடும் காற்று மற்றும் இடி மின்னலில் இருந்து மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

"வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் இவ் வாறு கடும் மழை வீழ்ச்சி பதிவாகச் சாத்தியமுள்ளது.

பிற்பகல் அல்லது இரவில் அதிக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில இடங்களில் 75 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ங-4)

## நவாலிச் சிறுமி திடீர்ச் சாவு

### நாய்க்குட்டியின் நகம் கீறியமையே காரணம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், டிசெ.02

காய்ச்சல் என்று கூறி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி மறு நாள் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சிவ நேசன் துஷாயினி (வயது-10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரது காலில் மூன்று மாதங்களுக்கு முன்னர் நாய்க்குட்டி ஒன்று கால் நகத்தினால் கீறியிருந்ததாகவும் அதனாலேயே சிறுமி உயிரிழந்திருக்கலாம் எனவும் அவரது பெற்றோர் சந் தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும்

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் பாதீனியம் திட்டமிட்டு விதைப்பு

## வடக்கு முதல்வர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.02

வடக்கில் விவசாயச் செய்கையை திட்டமிட்டு முடக்கும் வகையில் பாதீனியச் செடியை பரவலடையச் செய்ய சதித்திட்டம் தீட்டப்படுகிறது. தென்னிலங்கையில் இருந்து இவை வடக்குக்கு நகர்த்தப்படுகின்றன. இவ்வாறு குற்றம் சாட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வட மாகாண விவசாயத் திணைக்களத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பாதீனிய ஒழிப்பு மாதத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நிலாவரையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது கூறியதாவது:-

தானியப் பயிர்களை அழிப்பதற்கு இன்னொரு களையாக ஊடுருவி பாதீனியம் வளர்ச்சியடைகிறது. இதனை அழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எங்காவது பாதீனியம் காணப்பட்டால் அதனை அழிப்பதற்கு மக்கள் முன்வர வேண்டும்.

ஆயுள்வேத மருந்துகளாக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் இவை பயிர்களுக்கு ஆபத்தான களையாக கருதப்படுகின்றன. இதன்வளர்ச்சியும் வேகமானதாக இருக்கிறது.

எனவே விவசாயத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி பாதீனியத்தை அழிக்க வேண்டும் - என்றார். (ஐ-14)

# இலங்கைப் படைக்கு இந்தியா பயிற்சியா?

## கொதிக்கின்றார் தமிழக முதலமைச்சர்

சென்னை, டிசெ.2

"இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியக் கடற்படை இராணுவப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது என்று வெளியாகியுள்ள தகவல் பெரும் அதிர்ச்சியளிக்கின்றது. இந்திய மத்திய அரசின் இந்த நடவடிக்கையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.



இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

"இந்தியக் கடற்படை மூலம் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதையறிந்ததும் நான் பெரும் அதிர்ச்சியடைந்தேன். இவ்வாறு இந்திய மத்திய அரசு செயற்படுவது தமிழர்களுடைய உணர்வுகளுக்கு எதிரானது.

இலங்கைப் படையினருக்கு இந்தியக் கடற்படையால் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகின்றன என்று அறிந்தேன்.

தமிழர்களின் உணர்வுகளை மதிக்காமல் இந்திய மத்திய அரசு இது போன்று தொடர்ந்து நடந்து வருகிறது. இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவது குறித்து நான் பல முறை தங்களுக்கு அறிவுறுத்தியிருந்தேன். ஆனால் இந்திய மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தியா இலங்கைக்கு எந்த வித இராணுவப் பயிற்சிகளையும் வழங்கக் கூடாது. அவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காது செயற்படும் இந்திய மத்திய அரசுக்கு எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றுள்ளது. (ற)

# இராணுவத்தால் கைதான மூவருக்கும் விளக்கமறியல்

மன்னார், டிசெ. 02

மன்னார் முருங்கன் பகுதியில் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட்ட 3 பேரையும் தொடர்ந்து 14 நாள்களுக்கு வவுனியா பயங்கரவாத தடுப்புப்பிரிவு பொலிஸில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் முருங்கன் பகுதியில் உள்ள வீதி மதில்களில் கடந்த புதன்கிழமை மாவீரர் தினம் என எழுதிக்கொண்டிருந்ததாக சந்தேகத்தின் பேரில் மூவரை இராணுவத்தினர் கைது செய்து முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

முருங்கன் பொலிஸார் விசாரணைகளின் பின் குறித்த மூவரையும் மறுதினம் வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதன் போது மன்னார் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த வவுனியா பயங்கரவாத தடுப்புப்பிரிவு பொலிஸார் குறித்த 3 சந்தேக நபர்களையும் தங்களுடைய தடுப்பில் வைத்து 72 மணித்தியாலங்கள் மேலதிக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என மன்னார் பதில் நீதிவானிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் தடுத்து வைத்து விசாரிக்க மன்னார் மாவட்ட பதில் நீதவான் அனுமதி வழங்கினார்.

இந்த நிலையில் குறித்த 3 பேரும் நேற்று ஞாயிற்றுக் கிழமை மதியம் மன்னார் பதில் நீதிவான் முன்னிலையில் மீண்டும் முற்படுத்தப்பட்டனர்.

இதன் போது குறித்த மூன்று பேரையும் எதிர்வரும் 14 தினங்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளவும் எதிர்வரும் 14ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் சந்தேக நபர்களை முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

### வைப்புப் பணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்தினால், மணல் ஏற்றி இறக்கும் நடவடிக்கைக்காக மகேஸ்வரி நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்ட பணம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் மீள வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களாக மணல் ஏற்றி இறக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டதால் பாரவூர்திகளின் உரிமையாளர்கள் தாங்கள் வைப்புச் செய்திருந்த பணத்தை மீளப் பெற்றுத் தருமாறு சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் மகேஸ்வரி நிதியம் பணத்தை மீள வழங்க ஒப்புக்கொண்டுள்ளதால், இன்று தொடக்கம் அவற்றை உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-14-86)

# வடக்கில் நில ஆக்கிரமிப்பு பற்றி முதல்வர் - மன்னார் ஆயர் பேச்சு

## மன்னார் மக்கள் பிரச்சினை குறித்து

மன்னார், டிசெ.02

வட மகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகைக்கும் இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.



"அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபை விரைந்து நடவடிக்கை களை எடுக்கவேண்டும்

இந்தச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன், வடமாகாண சுகாதார, சுதேச வைத்திய அமைச்சர் பி.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா, வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், அயூப் அஸ்மின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைகள், இராணுவத் தலையீடு, இராணுவத்தின் பிரசன்னம் அதிகரிப்பு, அமைச்சர் ஒருவரின் தன்னிச்சையான செயற்பாடுகள், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீள் குடியேற்ற கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன் மன்னரார் மாவட்டத்துக்கு வெளியிலுள்ள வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் இராணுவ ஆக்கிரமிப்பினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சொல்லொணாத் துயரங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது மன்னார் ஆயர் எடுத்துரைத்தார்.

இந்த அவலங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபை விரைந்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் மன்னார் ஆயர் இதன் போது வலியுறுத்தினார். (ஐ-12)

# டில்லியுடன் விரைவில் பேச்சு

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.02

போர்க்குற்ற விசாரணை, 13 ஆவது திருத்தம், வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு மற்றும் இந்தியப் பிரதமரின் வடக்கு வருகை தொடர்பில் இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ள நிலையில், டில்லியுடன் இது தொடர்பில் விரைவில் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியாவின் நிலைப்பாட்டை மத் திய அமைச்சர் சிதம்பரம் தெளிவாகக் கூறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இனப்படு கொலைகள் நடந்தேறின என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அவை குறித்து சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளக விசாரணை நடத்தப்பட வேண்டும். இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் அடையாளம் காட்டப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

அத்துடன், 13 ஆவது திருத்தத்தையும், ஈழத் தமிழர்களையும் இந்திய மத்திய அரசு ஒருபோதும் கைவிடாது. ஈழத்தமிழர் நிலைப்பாடு குறித்து பிரதமர் மன்மோகன்சிங் விரைவில் யாழ்ப்பாணம் சென்று வடமாகாண முதலமைச்சருடன் பேச்சு நடத்துவார். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க மத்திய அரசு தொடர்ந்து பாடுபடும் என்று இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்திருந்தார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற 'இலங்கைத் தமிழரின் வாழ்வுரிமையும், இந்திய அரசின் நிலையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசின் இந்தக் கருத்துகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று மாலை 'உதயன்' வினவியது.



இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

இப்போதைக்கு இது தொடர்பில் வெளிப்படையாகக் கருத்துக்கள் எதனையும் கூற விரும்பவில்லை. எனினும், இலங்கை தொடர்பிலும், வடக்கு, கிழக்குத் தமிழர் தொடர்பிலும் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை மத்திய அமைச்சர் சிதம்பரம் தெளிவாகக் கூறியுள்ளார். இதனை நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளோம். இது தொடர்பில் இந்திய மத்திய அரசுடன் விரைவில் பேச்சு நடத்தத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது - என்றார். (சி)

"நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு ஆல்சிலோனின் மாபெரும் மலிவு விற்பனையும் பரிசுக் குலுக்கலும்"

முதலாம் பரிசு புறஜெக்ரர்

2ஆம் பரிசு L.E.D. TV 32``

3ஆம் பரிசு L.E.D. TV 29``

மேலும் ரூபா 10,000/= பெறுமதியான 10 ஆறுதல் பரிசுகள்

11-25 வரை ரூபா 3000/= பெறுமதியான ஊக்குவிப்புப் பரிசுகள்

ஆய்வுகூட உபகரணப் பொருள்கள், பாட நூல்கள், ஓவர்கெட், புறஜெக்ரர்கள் பைண்டிங் மெசின், லெமினேற்றிங் மெசின் என அனைத்து வகை சில்லறை மொத்த வியாபாரங்களுக்கும் நம்பமுடியாத விலைக் கழிவுகள்.

பாட நூல்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பிரபல நூல்கள் மருத்துவ, காமிக்ஸ், பாடநூல்கள் 10% - 50% வரையான விலைக்கழிவுகள் (நிபந்தனைக்குட்பட்டது)

வாடிக்கையாளர் நலன்கருதி டிசெம்பர் 8ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதி வரை வாரத்தின் 7 நாள்களும் வாடிக்கையாளர் சேவை இடம் பெறும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல. 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 5542, 021 567 1527 Fax : 021 222 7983

Email - acdil@ymail.com

(சி/14217) (7.6.3)


## மாற்று வலுவுடையோர் தினவிழா

வடமராட்சி, டிசெ.2
'தடைகளை வெற்றிகொண்டு உள்ளீட்டு சமூகத்தினை நோக்கிப் பிரவேசிப்போம்' என்னும் தொனிப் பொருளில் வடமராட்சி கல்விவலயம் நடத்தும் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு பருத்தித்துறை ஓராங்கட்டைச்சந்தியில் உள்ள வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுகுமாரனும், சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கமும் கலந்து கொள்வார்கள். (8)



# கொட்டும் மழையின் மத்தியிலும் நிலாவரையில் பாதீனியம் அழிப்பு

### முதலமைச்சரும் விவசாய அமைச்சரும் நேற்று ஆரம்பித்து வைத்தனர்



யாழ்ப்பாணம்,டிசெ.2
வடக்கு மாகாணத்தில் பாதீனியம் ஒழிப்பு மாதம் நேற்று புத்தூர் நிலாவரைப் பகுதியில் மழைக்கு மத்தியிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
வடமாகாண விவசாயத் திணை களத்தினால் டிசெம் பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதி பாதீனிய ஒழிப்பு மாத மாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்கமைவாக நேற்று நிலாவரைப் பகுதியில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபாலசுந்தரம், வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் உட்பட விவசாயிகளும் கலந்து கொண்டனர். (ஒ-14-86)

## கல்வியமைச்சரின் வீட்டருகே ராணுவ நடமாட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் வீட்டைச் சுற்றிக் கடந்த சில தினங்களாக படையினரின் நடமாட்டம் அளவுக்கு அதிகமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சி, தருமபுரத்தில் உள்ள அவரது வீட்டின் சுற்றுப்புறச் சூழலிலே இராணுவ நடமாட்டங்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படு கின்றது.
கடந்த மாவீரர் தினத்தன்று மரம் நடுகை நிகழ்வு மாகாணக் கல்வியமைச்சரின் யாழ். இல்லத்தில் இடம்பெற்றிருந்தது.
அன்று இரவு கிளிநொச்சி வீட்டில் அமைச்சர் தங்கியிருந்த வேளையில் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் அதிகளவில் நடமாடியுள்ளனர்.
இரவு 10 மணியளவில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வீட்டு மின் விளக்குகளைப் போட்டு விட்டு வந்த போது 30 தொடக்கம் 40 இராணுவத்தினர் இராணுவ சீருடையில் நின்றிருந்தனர்.
"அப்போது அங்கு நின்ற இராணுவ அதிகாரிஒருவர் என்னை வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாது என்று தெரிவித்தார் " எனக் கல்வி அமைச்சர் குருகுலராஜா கூறினார்.
நேற்றுமுன்தினம் இரவும் இராணுவத்தினர் தனது வீட்டுப் பகுதியில் நடமாடியதாக அவர் தெரிவித்தார். (த-5-86)

"_"

மாவீரர் தினத்தன்று மரம் நடுகை நிகழ்வு மாகாணக் கல்வியமைச்சரின் யாழ். இல்லத்தில் இடம்பெற்றிருந்தது.

# வடக்கின் விவசாயத்துக்கு புத்துயிரூட்டுவது அவசியம்

### பாதீனிய ஒழிப்பு நிகழ்வில் விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2
'வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் சகல துறைகளிலும் அபிவிருத்தி காண வேண்டிய தேவை உள்ளது. அதிலும் வடக்கின் பொருளாதாரமாகக் கருதப்படும் விவசாயத்தை மீள் எழுச்சி அடையச் செய்யவேண்டியது கட்டாயமாகும்' என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
வடமாகாண விவசாயத் திணைக் களத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட பாதீனிய ஒழிப்பு மாதம் நேற்று நிலாவரைப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
மரநடுகை எங்களுக்குரியது - ஆனால் இப்போது பாதீனியத்தை அழிக்க முற்பட்டுள் ளோம். ஒன்றுக்கொன்று முர ணான இரண்டு நிகழ்ச்சி களை நாம் முன்னெடுத்து வருகிறோம். இந்த நிகழ்ச்சி கள் அத்தியாவசியமானதும் அவசரமானதும் அவசியமா னதும் ஆகும்.
மரநடுகை நிகழ்வை நாங்கள் முன்னெடுத்தது எங்களது வீரமறவர்களது நினைவாக ஒரு புறம், அடுத்ததாக தமிழ் இனத்தின் மீள் எழுச்சியின் குறியீடாக ஒருபுறம், அதே நேரம் சுற்றுச் சூழல் பாதுகாப்பின் ஒரு அங்கமாகவும் மரநடுகை நிழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம்.
அதே போன்று அதற்கு மேலான நோக்கத்துடன் பாதீனியத்தை அழிக்கத் திட்டமிட்டுள்ளோம். பாதீனியம் எங்களுடைய மண்ணுக்கு உரித்தான சுதேசிய இனம் அல்ல. இந்தியாவில் இருந்து இராணுவம் இலங்கைக்கு வந்த போது கொண்டு வரப்பட்ட அல்லது பரப்பப்பட்ட ஒரு இனம்.
மற்றைய பயிர்களை ஊடுருவி மிக விரைவாக பயிர்களை அழிக்கிறது. இதனால் மிகப் பெரிய விவசாயப் பொருளாதாரத்தை இழக்கவேண்டியுள்ளது. மனிதனும், கால்நடைகளும் ஒவ்வாமையை எதிர் கொள்ள நேரிடுகிறது.
எங்களுடைய நிலங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றச் சொல்லும் நாம் பாதீனியத்தையும் அழிப்பதற்கு முன்வரவேண்டும். இந்த ஒழிப்பு நடவடிக்கையில் விவசாயிகள் மட்டுமல்லாது சகல தரப்பினரும் ஒன்றிணைந்து வடக்கு மாகாணத்தின் விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும் - என்றார். (வ-14)

## எயிட்ஸ் தினத்தையொட்டி விழிப்புணர்வு ஊர்வலம்




யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்.சிறைச்சாலையின் ஏற்பாட்டில் சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுக்காலை யாழ்.நகரில் இடம்பெற்றது. இந்த ஊர்வலத்தில் சிறைச்சாலையில் புனர்வாழ்வுபெறும் கைதிகள் விழிப்புணர்வு பதாகைகளைத் தாங்கிய வண்ணம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து யாழ். நகர் வழியாகச் சிறைச்சாலையை சென்றடைந்தனர். (வ-14-17)

## தியாகி அறக்கொடை ஸ்தாபகரின் பிறந்தநாள் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ். தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமாகிய வாமதேவன் தியாகேந்திரனின் 62 ஆவது பிறந்த தின நிகழ்வு நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ். மாவட்ட சமூக அலுவலர் ஆறுமுகம் ஞானவேல், யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் வி.தியாகராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.
இன்றைய பிறந்த நாள் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பல லட்சம் ரூபா உதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஒ-எ)

## பெண்கள் வன்முறைக்கு எதிரான நிகழ்வு

வலி.வடக்கு, டிசெ.2
தேவை நாடும் அமைப்பின் யாழ்.மாவட்டக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எந்த வகையிலும் சகித்துக் கொள்ளாமை' என்னும் தலைப்பிலான பெண்கள் வன்முறைக்கு எதிரான நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-86)

# கல்விக் கலங்கரை மண்ணோடு மண்ணாகியது

## வடக்கு கல்வி அமைச்சர் குருகுலராஜா ஆதங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.2

காங்கேசன்துறை மக்களுக்கு கல்வியில் கலங்கரை விளக்காக அமைந்த நடேஸ்வராக் கல்லூரி இன்று மண்ணோடு மண்ணாக்கப்பட்டுள்ளது. ஒரு புறம் எமது வர லாற்றுச் சின்னங்கள் இடிபட மறுபுறம் எமது இளைய சமுதாயத்துக்கு சின்னஞ்சூட்டிக் கௌரவிக்கும் பணியையும் மறக்காமல் செய்கிறோம் என்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுல ராஜா தெரிவித்தார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாணத்தின் நான்காவது வர்ண இரவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் குருகுலராஜா அங்கு மேலும் கூறியதாவது:-

காங்கேசன்துறையில் புகழ்பூத்த பாடசாலையான நடேஸ்வராக் கல்லூரியும் அதனை அண்மித்த ஆலயங்களும் இடிக்கப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது நடேஸ்வராக் கல்லூரி, தன் மாணவர்களுடன் இடம் பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயவில் தஞ்சம் புகுந்தது. 23 வருடங்களுக்கு முன்னதாகவே 1,100 மாணவர்கள் கல்வி கற்ற நடேஸ்வராக் கல்லூரி இன்று மண்ணோடு மண்ணாக்கப்பட்டுள்ளது.

நடேஸ்வராவின் மாணவர்கள் இன்று வர்ண இரவில் கௌரவிக்கப்படும் மாணவர்களுக்கு பயிற்றுவிப்பாளராக இருக்கலாம். அத்துடன் பரிசில் பெறும் மாணவர்களின் பெற்றோராகவும் நடேஸ்வராவின் பழைய மாணவர்களாக இருக்கலாம். வரலாற்றுச் சின்னங்கள் ஒருபுறம் இடித்தழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நெருக் கடியான சூழ்நிலையில் தமது விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றிக்காக மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டுத் துறையினரைக் கௌரவிக்கும் முகமாக 2010 இலிருந்து தேசியமட்டம், சர்வதேசமட்டம், பாடசாலை ரீதியாக மற்றும் விளையாட்டுகழகங்கள் மூலம் வெற்றிவாகை சூடியவர்களுக்காக உயரிய விருது வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு பதக்கம், சான்றிதழ், பணப்பரிசில் போன்றவை வழங்கிக் கௌரவிக்கும் இந்த நிகழ்வுக்கு போட்டியாளர்கள் தமது சாதனைகளைவிண்ணப்பம்மூலம் தெரியப்படுத்தி வடக்கின் வர்ணத்தை தமதாக்கலாம்.

ஆசிய பசுபிக் போட்டியில் பங்குபற்ற கோண்டாவில் சிவபூமி மாணவர்கள் ஆஸ்தி ரேலியா பயணமாகியுள்ளனர். அவர்கள் வெற்றியோடு வடபுலம் திரும்ப இந்நாளில் அனைவரும் வாழ்த்த வேண்டும் -என்றார்.

**இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கருத்து**

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாணத்திலுள்ள வீர, வீராங்கனைகளை ஊக்குவிப் பதன் மூலம் எதிர்காலத்தில்வடபுலவிளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டும்என்பதேவர்ணஇரவு நிகழ்ச்சி யின் நோக்கமாகும்.

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகள், பதிவுசெய்யப்பட்டவிளையாட்டுக் கழகங்கள், தேசிய மட்ட சாதனையாளர்களுக்கு கௌரவம் வழங்கும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது. வடமாகாணத்துக்கு பெருமை, புகழ் பெற்றுத் தந்தவர்களே கௌரவிக்கப்படும் விளையாட்டு வீர, வீராங்கனைகள். வடக்கிலிருந்து சர்வதேச மட்டப் போட்டிகளுக்குச் சென்று தமது சாதனைகளைப் படைத்த 5 பேர் உட்பட தேசிய மட்டத்தில் தமது தடங்களைப் பதித்த 254 பேர் இன்று கௌரவிக்கப்படுகின்றனர்.

விளையாட்டுத்துறையில் சிறந்த அடைவு மட்டத்தை எட்டிய 10 பேருக்கு "வடக்கின் வர்ணம்" விருது வழங்கப்படவுள்ளது. இதுவே விளையாட்டுத்துறையில் வடமாகாணத்தால் வழங்கப்படும் அதியுயர் விருதாக அமைகின்றது. 2010 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 8 ஆம் இடத்தைப் பெற்ற வடபுலம் 2011இல் 7 ஆம் இடத்தினையும், 2012 மற்றும் 2013 இல் 6 ஆம் இடத்தையும் பெற்றது. எதிர்காலத்தில் நாம் இன்னும் முன் னேறுவோம்-என்றார்.(வ-10-20-23)

# அச்சுவேலி பஸ்நிலையத்தின் வசதியீனங்களை விரைவில் தீர்த்து வைக்க உரிய நடவடிக்கை

அச்சுவேலி, டிசெ. 2

அச்சுவேலி பஸ் நிலையத்தை உரியமுறையில் பயணிகள் மற்றும் போக்குவரத்துச்சபை பஸ்கள் பயன்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்தவேண்டும் என வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டம் வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. அச்சுவேலி-கோப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள் கிராம அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் பொதுமக்கள் வசதியான முறையில் தங்கி நின்று பயணம் செய்வதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தனியார் சிற்றூர்தி நடத்துநர்கள் - சாரதிகள் நடந்து கொள்ளல்.

போக்குவரத்துச்சபை பஸ்கள் பஸ் நிலையத்தில் உரிய முறையில் தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு இடையூறாக மினிபஸ்களை நிறுத்தி வைத்தல்.

பஸ் நிலையத்தில் பொது நிலைப்படுத்தப்பட்ட வகையில் குடிதண்ணீர் வசதி, மலசல கூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமையால் பயணிகள் மற்றும் பஸ்சாரதிகள் நடத்துநர்கள், பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

பஸ் நிலையத்தில் காணப்படும் குறைபாடுகள், வசதியீனங்கள் சீர் செய்யவேண்டும் என்ற எண்ணக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு "எதிர்காலத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் - செயலாளர் மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தின் நிர்வாகிகளை பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் அழைப்பது" என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-11)

## ஆலய புனிதத்தைப் பேண பிரார்த்தனை வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 02

ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெறாதிருக்கவும், ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதற்குமான சிவ ஆராதனையும் பிரார்த்தனையும் நாளை மறுதினம் புதன்கிழமை சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒன்றியத் தலைவர் சிவ ஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வு காலை 8 மணிக்கு வேத பாராயணத்துடன் ஆரம்பமாகி மாலை 4.15 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் குடா நாட்டின் பிரசித்தமான ஆலயங்களிலும் நாளை திரவிய அபிஷேகம் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-14)

# நலிவுற்ற குடும்பத்துக்கு சுய தொழில் கொடுப்பனவு



கிளிநொச்சி, டிசெ.2

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வதியும் நலிவுற்ற குடும்பங்களுக்கு 'யுனிசெப்' நிறுவன அனுசரணையுடன் சுய தொழில் உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலர் கே.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குறித்த பிர தேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 குடும்பங்களுக்கு தலா 36 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (வ-9)

## ஒதியமலை படுகொலை நினைவுதினம் இன்று

நெடுங்கேணி, டிசெ.02

நெடுங்கேணி ஒதியமலையில் 1984ஆம் ஆண்டு படுகொலைசெய்யப்பட்ட 32பேரின் 29 ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட 32 பேரின் ஆத்ம சாந்திக்கென ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுவதோடு அன்னதான நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1984ஆம் ஆண்டு இப் பகுதியைச் சேர்ந்த 32 பேர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்யப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (சு-435)

# புனரமைப்பு இன்றி காணப்படும் நீர்வேலி- கரந்தன் வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.2

நீர்வேலி- கரந்தன் வீதி கடந்த பல வருடங்களாக புனரமைப்பு இன்றி சேதமடைந்து காணப்படுவதால் இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பருத்தித்துறை வீதியில் நீர்வேலி கந்தசுவாமி ஆலயச் சந்தியில் இருந்து செல்லும் குறித்த பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் வீதியால் பயணிக்கும் மக்கள் மற்றும் வாகனங்கள் சிரமத்தின் மத்தியிலேயே போக்குவரத்தில் ஈடுபட வேண்டிய நிலைமை காணப்படுகிறது. குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரைக்கும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இந்த வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

# போதைப்பொருள் விற்பனை தமக்கு தெரியாது என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ.02

யாழ். நகரில் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகளில் போதைப் பொருள் விற் பனை செய்யப்படுவது தொடர் பில் பொலிஸாருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் எம்.எம். ஜிவ்றி தெரிவித்துள் ளார்.

யாழ். நகரிலுள்ள பாடசாலை ஒன்றை அண்மித்துள்ள கடையில் போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்ட நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தக் கடைக்கு அனுப்பப்பட்டு போதைப் பொருள்கள் மீட்கப்பட்டதோடு அந்தக் கடையும் நீதிமன்ற உத்தரவின் பேரில் 'சீல்' வைத்து மூடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதே குற்றச்சாட்டில் யாழ். நவீன சந்தையில் உள்ள கடை ஒன்றும் நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்து மூடப்பட்டது. இந்த நிலையில் போதைப்பொருள், அதனுடன் இணைந்த பொருள்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்ட போதே இவ்வாறு தெரிவித் தார்.

போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவது தொடர்பில் தமக்கு எந்தத் தகவலும் கிடைக்க வில்லை. பொது சுகாதார பரிசோதகர்களே அவை விற் பனை செய்யப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். 'பாபுல்' விற்பனை செய்த குற்றச்சாட்டிலேயே இரண்டு பேரை அண்மையில் கைது செய்துள்ளோம்- என்றார். (4)

## மரண அறிவித்தல்

### கந்தையா சரவணமுத்து



யாழ்ப்பாணம் வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரிக்குளம் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரவணமுத்து (29.11.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்புபுதல்வரும் அப்புத்துரை மாணிக்கம் தம்பதயரின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும் குணசீலனின் அன்புத் தந்தையும் பரமசுவாமி (மகாலிங்கம்), பாக்கியம், நாகம்மா ஆகியோரின் சகோதரரும் யசோதாவின் மாமனும் ஹரிஷன், ஹபினாஷ், கிரிஷ்ணா ஆகியோரின் அன்புபூட்டனாரும் கனக சுப்பிரமணியம், சொர்ணலட்சுமி, செவ்வந்திநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2013 இன்று திங்கட் கிழமை பண்டாரிகுளம் அம்மன் கோயலடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சநாதன் குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் கோயிலடி பண்டாரிக்குளம், வவுனியா**

**தகவல்:** கனகசுப்பிரமணியம், சொர்ணலட்சுமி (கனடா)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை பூதத்தம்பி



சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமிப் பிள்ளை பூதத்தம்பி நேற்று (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூதத்தம்பியின் அன்புமனைவியும் வள்ளிப்பிள்ளை காலஞ் சென்ற பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் மயில்வாகனம், விஜயலட்சுமி, கணேசலிங்கம் (சுவிஸ்) , காலஞ்சென்ற வேதநாயகி, வேல்முருகன் (சுவிஸ்), அருணாச்சலம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சத்தியலோகநாயகி, நாகலிங்கம் (சுவிஸ்), தவமலர் (சுவிஸ்), காலஞ்சென்ற அருணகிரிநாதர், றமணி (சுவிஸ்), தர்சா (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு மாமியும் குமரேசன், காலஞ்சென்ற சரவணன், விக்னேஸ்வரன், காசிசர்வேஸ்வரன் , பிரசன்னா (சுவிஸ்), அர்ச்சனா (சுவிஸ்), லண்டனில் வசிப்பவர்களான சயனன், பிரவீன், சஞ்சய், யதுர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2013) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்லப்பிள்ளையார் கோவிலடி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.**

**தகவல்:** குடும்பத்தினர்

# 19 ஆயிரம் லீற்றர் பால் ஒரு நாளில் விநியோகம்

*யாழ். மாவட்டத்திலிருந்து வடமாகாணத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு*

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு நாளைக்கு 19 ஆயிரம் லீற்றர் பால் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் விலங்கு வேளாண்மை உற்பத்தி நடவடிக்கைகள் போதுமான அளவில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக பால் உற்பத்தியாளர்கள் அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவையான பாலை விநியோகித்து வருகின்றனர்.

தனி நபர்கள் மட்டுமல்லாது நெஸ்லே, மில்கோ போன்ற நிறுவனங்களும் பாலைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக உற்பத்தியாளர்களிடம் இருந்து பால் கிடைத்து வருகிறது. யாழ்.மாவட்டத்தில் இருந்து வடக்கு மாகாணத்துக்குள் நெஸ்லே நிறுவனம் 14 ஆயிரம் லீற்றர் பாலையும், மில்கோ நிறுவனம் 5 ஆயிரம் லீற்றர் பாலையும் கொள்வனவு செய்து வருகின்றன.

"_"

**யாழ்.மாவட்டத்தில் இருந்து வடக்கு மாகாணத்துக்குள் நெஸ்லே நிறுவனம் 14 ஆயிரம் லீற்றர் பாலையும், மில்கோ நிறுவனம் 5 ஆயிரம் லீற்றர் பாலையும் கொள்வனவு செய்து வருகின்றன.**

பால் உற்பத்தியாளர்களால் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்ட அதே பாலில் உற்பத்தி செய்யப்பட்ட பால் மாவைக் கூடிய விலைக்கு உள்ளூர் நுகர்வோர் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனைவிட சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறைதினம் என்பதால் பால் விற்பனை அதிகளவில் நடைபெறாத காரணத்தால் உற்பத்தியாளர்கள் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கு மாற்று நடவடிக்கையாக பாலைப் பதப்படுத்தி மாற்று உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டத்தை மிக விரைவில் மேற்கொள்ளவுள்ளோம்.

அதனூடாக பால் உற்பத்தியாளர்கள் நன்மையடைவர். - என்றார். (வ-14)

# பாவனையின்றிய கிணற்றை மூடுக

*புலோப்பளை மக்கள் கோரிக்கை*



பளை, டிசெ.2

நீண்டகாலமாகப் பாவனையின்றிக் காணப்படும் பொதுக் கிணற்றை மூடுமாறு புலோப்பளை பிரதேசமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிணறு புலோப்பளை கிராம சபையினால் 50 வருடங்களுக்கு முன்னர் மாட்டு வண்டில் பாவனையாளர்கள் மற்றும் பளை நகர்ப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களுக்கென அலுவலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டது.

தற்போது மாட்டுவண்டில் பாவனை இல்லாததாலும் அயலில் உள்ள குடியிருப்புக்களில் வசிப்போர் பயன்படுத்தாததாலும் நீண்ட காலமாக பாவனையின்றிக் காணப்படுகிறது. பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு போன்றவற்றால் கிணற்றின் கட்டடம் வெடிப்புகள் ஏற்பட்ட நிலையில் காணப்படுகிறது.

எனவேபாவனையின்றிகாணப்படுவதால் டெங்கு நுளம்பின் உற்பத்திக்கு ஏதுவாக கிணறு உள்ளதால் இதனை மூடுமாறு கோரியுள்ளனர். (வ-9)

# பெற்றோரைப் பராமரிக்க பிள்ளைகளிடம் பண அறவீடு

*முதியோர் தேசிய செயலக பராமரிப்புச் சபை நடவடிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.2

பிள்ளைகளின் பராமரிப்பு இன்றி அவதிப்படும் வயோதிபர்களுக்கு மாதாந்தம் தாபரிப்புப் பணத்தை பிள்ளைகளிடம்இருந்துபெற்றுக்கொடுப்பதற்கு முதியோர்களுக்கான தேசிய செயலக பராமரிப்பு சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகக் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

முதியோர் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் பிள்ளைகள், பெற்றோரைக் கைவிட்டுச் செல்லும் நிலை அதிகரித்துள்ளது.

இந்த நிலையை உடனடியாகக் கட்டுப்படுத்தும் முகமாக பிள்ளைகளே தமது பெற்றோரைப் பராமரிக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் மாதாந்தம் தமது பெற்றோருக்கான தாபரிப்பு பணத்தைச் செலுத்த வேண்டும். இவ்வாறான புதிய நடைமுறையை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் முதியோர் இல்லங்களை நாடும் முதியோர்களின்எண்ணிக்கையை குறைக்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் கைதடி அரச முதியோர் இல்லம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம்போன்றவற்றுடன்தொடர்பு கொள்ள முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-17)

# தந்தை செல்வா குடும்ப நிதியத்தால் தந்தையை இழந்த சிறாருக்கு உதவி

போரால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவரை இழந்த பிள்ளைகளுக்கு தமிழரசுக் கட்சியின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் குடும்பத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அறக்கொடையிலிருந்து வறிய மாணவர்களுக்கு வருடாந்தம் 10 ஆயிரம் ரூபா கற்றலுக்கான ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இந்த நிதியம் தன் முதல் நடவடிக்கையாக தந்தை செல்வாவின் பெயரில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தால் உருவாக்கப்பட்ட தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் தந்தையை இழந்த 25 வறிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக 5 மாணவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வருடாந்தக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு அறக்கொடை நிதியத்தால் காசோலையாக வழங்கப்பட்டு தேசிய சேமிப்பு வங்கியில் பிள்ளையினதும் தாயினதும் இணைந்த கணக்கு உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு அந்தப் பணம் அபிவிருத்திச் சங்கத்தால் வைப்பிலிடப்படும் என்று அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் கடந்த சனிக்கிழமை அதிபர் காராளசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் தந்தை செல்வா அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய சி.ஹரிகரன், யூனியன் கல்லூரி ஆசிரியரும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய சேந்தன் மற்றும் அறக்கொடை நிதியத்தைச் சார்ந்தவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். முதற்கட்ட நிதிக்கான காசோலை அறக்கொடை நிதியத்தினரால் அதிபரிடம் வழங்கப்பட்டது.

இந்த நிதியம் அடுத்த கட்டமாக யூனியன் கல்லூரியில் மிகவும் பாதிக்கப்பட்ட 20 மாணவர்களைத் தெரிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ)



# கொடும்பாவி எரிக்க முன்னரே பெரு மழை

*விவசாயிகள் மகிழ்ச்சி*

தென்மராட்சி, டிசெ.2

மழைவேண்டி 3 தினங்கள்கொடும்பாவி எரிக்க தென்மராட்சி மக்கள் ஏற்பாடாகியிருந்த வேளையில் பெரு மழை பெய்து நெற்செய்கையாளர்களை மகிழ்வித்தது. தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஹெக்ரேயர் வயல்களில் விதைப்புகள் மேற்கொள்ளப்பட்டுப் பயிர்கள் வளர்ந்துள்ள நிலையில் நீண்ட நாள்களாக மழை பெய்யாத தால் பயிர்கள் வாடும் நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் தனங்கிளப்பு ஆலயம் ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகம் நடத்தப்பட்டு இரவு கொடும்பாவியை வீதியில் இழுத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

நேற்று முன்தினம் மாலை மழை பெய்யத் தொடங்கி நேற்றுக் காலை பெரு மழை பெய்தது. வயல்களில் ஓரளவு வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (வ-9)



# அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் மானிய எரிபொருளை இழந்த மீனவர்

*பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் விவரங்களைக் கோருகிறது சம்மேளனம்*

வலி.தென்மேற்கு, டிசெ.2

கடற்றொழில் திணைக்களத்தில் கடமையாற்றும் சில உத்தியோகத்தர்களின் அசமந்தப் போக்கால் யாழ்.மாவட்டத்திலுள்ள நூற்றுக்கதிகமானமீனவர்கள் அரசால்வழங்கப்படும் நிவாரணங்களைப் பெற முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இத்தகையபரிதாபகரமானநிலையை கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வர முன்வந்துள்ள யாழ்.மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம். பாதிக்கப்பட்ட மீனவர்களை கிராம அமைப்புகளூடாக சம்மேளனத்துக்கு சகல விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார்.

எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக அரசால் மானிய அடிப்படையில் மாதாந்தம் எரிபொருளுக்கான முத்திரை வழங்கப்பட்டு வந்தது.

தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் வள்ளம், இயந்திரங்கள் போன்ற கடற்கலங்களை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்து அதற்குரிய புத்தகங்களை வைத்திருப்பவர்களுக்குத் தற்போது மானிய அடிப்படையில் எரிபொருளுக்கான முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரச அறிவுறுத்தலுக்கமைய கடற்கலங்கள் பற்றி விவரங்களைப் பதிவு செய்வதற்காக கடற்றொழில் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் பலருக்குப் புத்தகம் கிடைக்காததால் பலர் மானிய அடிப்படையில் வழங்கப்படும் எரிபொருளைப் பெற முடியாத நிலையிலுள்ளனர். எனவே அவர்கள் எரிபொருளைக் கூடிய விலைக்கு வாங்கித் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதேபோல் திணைக்களத்தில் புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பப்பட்ட போதிலும் அவர்களும் மானிய முத்திரையைப் பெற முடியாமல் திண்டாடுகின்றனர். கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் உள்ள அவர்களும் எரிபொருளை அதிக விலைக்கு வாங்கித் தொழிலில் ஈடுபடுகின்றனர். கடற்றொழில் திணைக்களத்தில் கடமையாற்றும் சில உத்தியோகத்தர்களின் அசமந்தப் போக்கால் யாழ்.மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் அதிகமான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலை குறித்து அறிந்து கொண்ட யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் கடற்றொழில் அமைச்சருடன் தொடர்பு கொள்வதற்காக கடற்கலங்களின் விவரம் உட்பட தங்கள் பெயர், விலாசம் ஆகியவற்றைக் கிராமிய அமைப்புக்கள் ஊடாக சம்மேளனத்துக்கு அனுப்பி வைக்குமாறு பாதிக்கப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (வ-115)

## வலி.தென்மேற்கில் 5 வீதிகளின் அகலிப்பு ஆரம்பம்

வலி.தென்மேற்கு, டிசெ.2

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 6 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 5 வீதிகளையும் அகலிக்கும் பணி முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதிகளின் புனரமைப்புப் பணிகளைக் கண்காணிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குழுக்களும் பொதுமக்களும் இணைந்து வேலிகளை வெட்டி வீதிகளை அகலமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.


வீதிகளைப் புனரமைக்கும் போது மோசடிகள், ஊழல்கள் இடம்பெறாமல் இருப்பதற்காகக் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை வீதிகளுக்குத் தேவையானகருங்கற்கள் வன்னியிலிருந்து எடுத்து வரப்பட்டுச் சம்பந்தப் பட்ட வீதி ஓரங்களில் குவிக்கப்படுகின்றன. (வ-115)

# இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி அளிக்கும்


### மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் விடாப்பிடி

சென்னை, டிசெ.2
"இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சிகளை வழங்குவது தவிர்க்க முடியாத ஒன்று" என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"இந்தியாவில் கடந்த 21 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். அவர்களின் நலனின் இந்திய மத்திய அரசு கரிசனை கொண்டுள்ளது. அவர்களை நல்ல முறையில் இலங்கையில் குடியேற்றி. அவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதே ஆளும் காங்கிரஸ் கட்சியின் ஒரே கொள்கையாகும்.
அந்த கொள்கையை வென்றெடுக்க வேண்டுமானால், இலங்கை அரசுடன் நாம் சுமூகமான உறவை கொண்டிருக்க வேண்டும். தற்போது நாம் அந்த நிலையையே கடைப்பிடித்து வருகின்றோம். இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது போன்ற சில நடவடிக்கைகளை அதனடிப்படையிலேயே நாம் செய்து கொடுக்க வேண்டியுள்ளது.
எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையில் உள்ள தமிழர்கள், இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் நிலை மேம்பட வேண்டும் என்பதே காங்கிரஸின் ஒரே நிலைப்பாடு" என்று தெரிவித்துள்ளார். (ற)




## 'செவ்வாயை' நோக்கிய பயணத்தில் மங்கள்யான்

புதுடில்லி, டிசெ.2
செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக இந்தியா அனுப்பிய மங்கள்யான் விண்கலம் பூமியின் நீள்சுற்றுவட்டப்பாதையை விட்டுவெளியேறி செவ்வாய்க் கிரகத்தை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.
நேற்று அதிகாலை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் மங்கள்யான் விண்கலம் பூமியின் சுற்றுப்பாதையிலிருந்து விலகத் தேவையான நீள் வேகத்தைத் தரும் வண்ணம் மங்கள்யானின் பிரதான இயந்திரத்தை இயக்கினர். சுமார் 20 நிமிடங்கள் அந்த இயந்திரத்தை இயக்கிய அவர்கள் மங்கள்யானின் வேகத்தை அதிகரித்து அதனைப் புவிவட்டப் பாதையிலிருந்து விடுவித்து செவ்வாய்க் கிரகத்துக்கான பாதைக்குள் செலுத்தினர். மக்கள்யான் செவ்வாய்க்கிரகத்தின்சுற்றுப்பாதையை அடைய அதற்கு சுமார் 300 நாள்கள் பிடிக்கும். செவ்வாய்க் கிரகத்தை அடையும் மங்கள்யான் விண்கலம் அங்கு மித்தேன் வாயு இருக்கிறதா என்பதை ஆராயும்.
குறித்த விண்வெளித் திட்டத்துக்கு இந்தியாவுக்கு சுமார் 450 கோடி ரூபா செலவாகியுள்ளது.
விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்தியா, சீனா ஆகிய இரு ஆசிய நாடுகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்னர் சீனா செவ்வாய்க்கிரகத்தை ஆராய அனுப்பிய விண்கலம் பூமியின் சுற்றுப்பாதையை விட்டு வெளியேறுகையில் விண்வெளியில் வெடித்துச் சிதறியிருந்தது. (ற)




## மோடிக்கு தடையில்லை – காஷ்மீர் முதலமைச்சர்

ஸ்ரீநகர், டிசெ.2
பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி காஷ்மீர் வருவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று தெரிவித்துள்ளார் அந்த மாநில முதலமைச்சர் ஒமர் அப்துல்லா.
நரேந்திர மோடி கடந்த ஆண்டு காஷ்மீர் மாநிலம் செல்வதற்கு திட்டமிட்டிருந்தபோது. அந்த மாநில அரசு அதற்குத் தடை விதித்திருந்தது. இந்த நிலையில் தற்போது தேர்தல் பரப்புரைகளுக்கான நரேந்திர மோடி காஷ்மீர் செல்லவுள்ளார். அது குறித்து அந்த மாநில முதலமைச்சர் ஒமர் அப்துல்லாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,
"பா.ஜ.க. மட்டுமல்ல. எந்த கட்சியும் இங்கு அரசியல் நிகழ்ச்சிகளை நடத்தலாம். யாரும் இங்கு வருவதற்கு தடையில்லை. மோடி வருவதற்கு தடைவிதிக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.
மோடி தாராளமாக ஸ்ரீநகர் வந்து தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளலாம். கடந்த ஆண்டு மோடி காஷ்மீர் வருவதற்கு திட்டமிட்டிருந்த சமயம் கிஸ்துவார் கலவரம் நடந்து ஒரு அசாதாரண சூழ்நிலை நிலவியது. அதனாலேயே அப்போது தடைவிதிக்கப்பட்டது" என்று தெரிவித்தார். (ற)

## தமிழர் இனப் படுகொலையில் சிதம்பரத்துக்கும் பங்குண்டு

### பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசன் சாட்டை

சென்னை, டிசெ.2
"இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 100 சதவீத பொறுப்பு என்றால் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 50 சதவீத தார்மீக பொறுப்பு உண்டு. மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ப.சிதம்பரத்துக்கும் தார்மீக பொறுப்பு உண்டு" என்றுதெரிவித்துள்ளார்பா.ஜனதா மூத்த தலைவர் இல.கணேசன்.
இலங்கை அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற முடியாமல் போனதற்கு பா.ஜனதா தான் காரணம் என்று ப.சிதம்பரம் தெரிவித்த கருத்துத் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது.
"பா.ஜனதா மீது ப.சிதம்பரம் திடீரென்று குற்றம் சுமத்தி உள்ளார். இது காலம் கடந்து ஏற்பட்டஞானோதயம். அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கினால் அது எப்படி இந்தியாவுக்கு எதிராக திரும்புமோ அதேபோல் இலங்கை அரசுக்கு கொடுக்கும் ஆயுதங்கள் தமிழர்கள் மீது பாயும் என்பதை பா.ஜனதா உணர்ந்து இருந்தது. எனவேதான் இலங்கை அரசு ஆயுதம் கேட்ட போது தர மறுத்ததோடு இலங்கை இராணுவத்தினருக்கு ஆயுத பயிற்சியளிக்கவும் தார்மீக ஆதரவு தர மறுத்தவர் வாஜ்பாய் என்பது மக்களுக்கு தெரியும்.
இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு வெறும் நாடகம். இதனால் பயன்பெற போவது மஹிந்த ராஜபக்ஷ மட்டுமே. இன்னல்களுக்கு ஆளாகப்போவது தமிழர்கள் என்பதால் பொதுநலவாய மாநாட்டை எதிர்த்தது பா.ஜ. பிரிட்டனின் பிரதமர் கமரூனின் அடிப்படை தைரியம் கூட மன்மோகன்சிங்குக்கு வராதது வருத்தம் அளிக்கிறது. இனியும் காங் கிரஸ் போடும் நாடகத்தை மக்கள் நம்பமாட்டார்கள்.
இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு மஹிந்த ராஜபக்ஷ 100 சதவீத பொறுப்பு என்றால் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 50 சதவீத தார்மீக பொறுப்பு உண்டு. மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ப.சிதம்பரத்துக்கும் தார்மீக பொறுப்பு உண்டு என்பதை அவர் உணர வேண்டும். காலம்கடந்து உண்மைகளை மறைக்க குற்றம் சுமத்துவதை தவிர்க்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தலைமைப் பொறுப்புக்கு தகுதியற்றவர் ஸ்டாலின்

### சரத்குமார் கடும் தாக்கு

சேலம். டிசெ.2
தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் தலைமைப் பொறுப்புக்கு தகுதியற்றவர் என்று தெரிவித்துள்ளார் சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார்.
ஏற்பாட்டில் நடந்த தேர்தல் பரப்புரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறும் போது,
"தமிழகத்தில் நிலவும் மின்வெட்டுக்கு தி.மு.க.வும். காங்கிரஸ் கட்சியும்தான் காரணம். தி.மு.க.வில் குடும்ப ஆதிக்கம் நிலவுகிறது. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அக்கட்சி தோல்வியடைவது உறுதி.
கடந்த இரண்டரை ஆண்டு கால ஜெயலலிதா ஆட்சியில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரி மாணவர்கள் வரை அனைவருக்கும் ஏராளமான சலுகைகள் வழங்கப்படுகின்றன. மேலும் குடிநீர், சாலை வசதிகள் செய்து தரப்படுகின்றன.
ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் நாகரிகமாக பேச வேண்டும். ஆனால் இங்கு பிரசாரம் செய்த மு.க.ஸ்டாலின், முதல்வர் ஜெயலலிதாவை ஒருமையில் பேசியுள்ளார். இதனால் அவர் தலைமைப் பொறுப்புக்கு தகுதியற்றவர் ஆகிறார்.
தி.மு.க. ஆட்சியில் எந்த தொலை நோக்கு திட்டமும் இல்லை. தற்போதைய முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு மக்களுக்கான அரசாக விளங்குகிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## காற்றுடன் கூடிய மழை பெய்யும்

சென்னை.டிசெ.2
வங்கக் கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றமுத்த தாழ்வுப் பகுதியால் இலங்கையில் கடும்மழைக்கான வாய்ப்புக் காணப்படுகின்றது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தின் கடற்கரையோரங்கள். இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



புதுடில்லி விமான நிலையத்துக்கு வந்திருந்த திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமாவிடம் மக்கள் ஆர்வத்துடன் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர். விமான நிலையத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த லாமா, "இந்தியாவில் மத நல்லிணக்கம் காணப்படுகின்றது. உலகில் மத நல்லிணக்கத்துக்கு இந்தியா ஒரு உதாரணமான நாடு" என்று பாராட்டியுள்ளார்.

## பணம் பெற்றால் பதவி விலகுவேன்: மம்தா மிரட்டல்

கொல்கத்தா, டிசெ.2
கட்சியினர் யாரும் நிதி நிறுவனங்களிலிருந்து பணம் பெறுவது தெரியவந்தால் நான் கட்சியிலிருந்து விலகிவிடுவேன் என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும் மேற்கு வங்கமுதலமைச்சருமானமம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.
திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நிதி தொடர்பாக வழக்கில் சிக்கியமை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"நிதி விவகாரங்களில் கட்சி உறுப்பினர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கட்சியை நடத்துவதற்கு நாங்கள் மக்களிடம் பிச்சை கேட்போம். ஆனால் நிதி நிறுவனப் பணத்தை பயன்படுத்த மாட்டோம்" என்றார். (ற)

# தளர்த்தப்பட்டன ஈரான் மீதான தடைகள்

தெஹ்ரான், டிசெ.2

ஈரானின் எண்ணெய் விற்பனை தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த தடைகளில் சிலவற்றில் தளர்வுகளை ஏற்படுத்தியுள்ளது அமெரிக்கா.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் ஹெரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.


அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை கணிசமான அளவு குறைத்துக் கொண்டுள்ளதால் சீனா, இந்தியா, கொரியா, துருக்கி, தைவான் ஆகிய நாடுகளுக்கு ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான தடையிலிருந்து தேசிய பாதுகாப்பு ஆணையச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்படுகிறது.

எதிர்வரும் வரும் 180 நாள்களுக்கு (6 மாதம்) இந்த நாடுகள் எந்தவித அபராதமும் இன்றி ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்து கொள்ளலாம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் சர்ச்சைக்குரிய அணுசக்தித் திட்டம் காரணமாக அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

தற்போது ஈரானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின்னர் ஈரான் அணுத் திட்டங்கள் தொடர்பாக உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது. (ற)



## வீழ்ந்து நொருங்கியது மொ சாம்பிக் விமானம்:

*33 பேர் சாவு*



மபுத், டிசெ.2

நமீபியாவில் மொசாம்பிய நாட்டு விமானம் விழுந்து நொருங்கியதில் 33 பேர் உயிரிழந்தனர்.

மொசாம்பியாவைச் சேர்ந்த பயணிகள் விமானம் கடந்த வெள்ளிக்கிழமை அங்கோலா தலைநகர் லுயாண்டாவுக்கு புறப்பட்டுச் சென்றது. அதில் 26 பயணிகள், 7 ஊழியர்கள் ஆகியோர் பயணித்திருந்தனர்.

ஆனால் குறிப்பட்ட நேரத்தில் அந்த விமானம் அங்கோலா சென்று சேரவில்லை. அதையடுத்து அந்த விமானத்தை தேடும் பணி நடந்தது. தற்போது அந்த விமானம் அங்கோலா மற்றும் போட்ஸ்வானா நாடுகளின் எல்லையில் விழுந்து நொருங்கி கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த விமானத்தின் உடைந்த சில பாகங்கள் மட்டுமே கிடந்தது. பெரும்பாலான பாகங்கள் சாம்பலாகி இருந்தன. அந்த விமானத்தில் பயணம் செய்த 33 பேரும் உயிரிழந்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மோசமான தட்பவெப்ப நிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விமான விபத்துக் குறித்த விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற)

## சீனாவில் விண்கலம் இன்று விண்ணுக்கு

பீஜிங், டிசெ.2

சீனா முதல் முறையாக சந்திரனுக்கு ஆளில்லா விண்கலத்தை இன்று விண்ணில் செலுத்தவுள்ளது.

சாங் இ-3 (கியான் வைபிங்-3) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கலம், ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து அதிகாலை 1.30 மணியளவில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது என்று விண்கல ஏவுதளத் தலைமை அலுவலகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். சீனா இதற்கு முன்பு சந்திரனுக்கு அனுப்பிய 2 விண் கலங்களும் சந்திரனின் சுற் றுப் பாதையில் சுற்றி வருகின்றன. (ற)



தாய்லாந்தில் அந்தநாட்டு அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களில் ஏற்பட்ட வன்முறைகளால் 5 பேர் உயிரிழந்துள்ளனர். அரச எதிர்ப்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இடையே ரம்கம்ஹெங் என்ற பல்கலைக்கழக வளாகத்தினுள் நடந்த மோதல் சம்பவங்களிலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 21 வயது மாணவன் மற்றும் அரச ஆதரவாளர் ஒருவர் உட்பட 5 பேர் அந்த மோதலில் உயிரிழந்தனர் என்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் முற்று முழுதாகத் தெரியவரவில்லை என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

## பிரபல நடிகர் வோக்கர் விபத்தில் சாவு



லண்டன், டிசெ.2

பிரபல ஹொலிவூட் நடிகர் போல் வோக்கர் (வயது-40) கார் விபத்தில் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் ஓர் அறக்கட்டளை நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு தன் நண்பர்களுடன் காரில் வந்து கொண்டிருந்த போதே அவரின் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நிலைதடுமாறிய கார் மரம் ஒன்றில் மோதியதை அடுத்து தீப்பிடித்து எரிந்தது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

வோக்கர் சட்டவிரோதக் கார்ப் பந்தயங்கள்தொடர்பான "ஃபாஸ்ட் அண்ட் ஃப்யூரியஸ்" என்ற திரைப்படத்தில் நடித்துப் பிரபல்யமானவர். (ற)

## உக்ரைனில் மக்கள் பெரும் போராட்டம்

*அந்நாட்டுத் தலைவருக்கு எதிராக*

லண்டன், டிசெ.2

ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைனை இணைக்க வலியுறுத்தி அந்த நாட்டின் தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அங்குள்ள சுதந்திரச் சதுக்கத்தில் திரண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டனர். அப்போது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைனை இணைக்கும் முயற்சிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் மறுப்புத் தெரிவித்துள்ளார். அதையடுத்தே கடந்த ஒரு வாரமாக உக்ரைன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களின் போராட்டம் குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி விக்டர் யானுகோவிச், "உக்ரைன் ஒருபோதும் ரஷ்யாவுடன் வர்த்தக உறவில் ஈடுபடாது. ஏனெனில், உக்ரைனின் பொருள்களை இறக்குமதி செய்ய அந்த நாடு தடை விதித்துள்ளது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## அடுத்த ஜனாதிபதி ஒரு பெண்தான்

*ஒபாமா கருத்தால் பரபரப்பு*

வாஷிங்டன், டிசெ.2

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ஒரு பெண் பதவி வகிக்கக்கூடும் என்று அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஒபாமா இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது, "அமெரிக்கா வில் திறமையான பல பெண் அரசியல் தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் விரைவில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிவகிப்பார்" என்று தெரிவித்திருந்தார்.

ஒபாமாவின் இந்தக் கருத்து அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் சூடான விவாதங்களைக் கிளப்பிவிட்டிருக்கின்றது. எதிர்வரும் தேர்தலில் ஜனநாயகக் கட்சியானது ஹிலாரி கிளிங்டனுக்கு வாய்ப்பளிக்கக் கூடும் என்பதையே ஒபாமா மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (ற)

## பசியின் கொடுமை: உணவாகும் சிங்கம்



*டமாஸ்கஸ், டிசெ.2*

*கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் சிரிய உள்நாட்டுப் போரால் அங்குள்ள மக்கள் பெரும் அவல நிலையைச் சந்தித்துள்ளனர். அங்குள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் எவையும் கிடைக்கப் பெறாத நிலையில் உணவுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றனது.*

*கடும் உணவுப் பற்றாக்குறை காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விவசாய பகுதியான சவுதா என்ற இடத்தில் பட்டினியால் வாடும் மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற பூனை, நாய் மற்றும் கழுதை இறைச்சியை சாப்பிடலாம் என முஸ்லிம் மத குருமார்கள் அறிவித்தனர்.*

***இந்தநிலையில் தற்போது பசியின் கொடுமை தாங்காத மக்கள் அங்குள்ள மிருக காட்சி சாலைகளில் புகுந்து மிருகங்களை கொன்று அவற்றின் இறைச்சியை உண்ணத் தொடங்கியுள்ளனர். கிழக்கு சவுதாவில் அல்குயாரியா அல் ஷாமா மிருகக் காட்சிச் சாலையில் இருந்த சிங்கத்தை கொன்று அதன் தலை மற்றும் உடலில் உள்ள இறைச்சியை 3 பேர் வெட்டி எடுப்பது போன்ற புகைப்படம் அண்மையில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுபோன்று பல மிருகங்களின் இறைச்சியை பசியால் வாடும் மக்கள் சாப்பிட்டு வருகின்றனர்.***

***அந்த அவலத்தில் இருந்து சிரிய மக்களை காக்க உலக நாடு கள் உணவு பொருள்களை தந்து உதவ வேண்டும் என்று அங்குள்ள தன்னார்வ தொண்டு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)***

## நிலநடுக்கம்

ஜகார்த்தா, டிசெ.2

இந்தோனேஷியாவில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆகப் பதிவாகியிருந்த இந்த நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் உணரப்பட்டுள்ளது.

**எனினும் அதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை. (ற)**

## கேளிக்கை விடுதி மீது வீழ்ந்தது ஹெலி



லண்டன், டிசெ.2

ஸ்கொட்லாந்தில் கேளிக்கை விடுதியொன்றின் மீது ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதில் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

ஸ்கொட்லாந்தின் கிலாஸ்கோ நகரின் கிளைடி ஏரிக்கரையில் அமைந்துள்ள கேளிக்கை விடுதி அருகே தரையிறங்க முயன்றபோதே குறித்த ஹெலி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்தச் சமயம் கேளிக்கை விடுதிக்குள் நடைபெற்றுக் கொண்டிருந்த இன்னிசை நிகழ்ச்சியை நூற்றுக்கணக்கானோர் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். **விபத்தில் 6 போ உயிரிழந்ததுடன் 32 பேர்** காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஹெலிகொப்டர் விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. விபத்தில் நொருங்கிய ஹெலிகொப்டரின் பாகங்களைச் சேகரித்து விமான விபத்து புலனாய்வு அதிகாரிகள் **விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)**

# யா/செங்குந்த இந்துக் கல்லூரி

## அதிபர் இரத்தினம் பாலகுமார் (SLPS-1) அவர்களின்

# மணிவிழா சிறப்பு மலர் - 02.12.2013

### ஆற்றல் மிக்க அதிபர்



யா/செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் இரத்தினம் பாலகுமார் அவர்களின் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்லூரி அன்னையின் வளர்ச்சியையே கண்ணும் கருத்துமாய் கொண்டு உழைத்தவர் பாலகுமார் அவர்கள். ஆசான் பணியாகத் தொடங்கிய இவரது கல்விச் சேவை இன்று அதிபர் பதவியுடன் ஓய்விற்கு வருகிறது. அன்பு, அறிவு, பண்பு, செயல்திறன் கொண்டு விளங்கிய இவர் மாணவர்களையும் தம் வழி நடத்த அரும்பாடுபட்ட வர். கல்லூரியின் வளர்ச்சி பல்வேறு அபிவிருத்திப் பாதையில் செல்ல வழிநடத்தி வழிகாட்டியாக விளங் கியவர். எண்ணிய பணிகளைத் திண்ணியமாக முடிக்கும் ஆற்றல் மிக்க இவர் ஐந்தாண்டு காலம் இக் கல்லூரியில் அதிபராக சேவையாற்றியுள்ளார்.

"காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

எனும் பொய்யா மொழிக்கிணங்க தன்னாலியன்ற வரை கல்லூரிக் கேற்ற வகையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்ட இவ்வதிபர் தனது ஓய்வுக் காலத்தில் மேலும் சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன்.

கௌரவ த.குருகுலராசா
வடமாகாண கல்வி அமைச்சர்.

### கடமையில் சிறந்தவர்



கடமை வீரனைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசிரியர் பணியில் 1979இல் இணைந்து கொண்ட இவர் 1991 இல் அதிபராகப் பதவியுயர்வு பெற்று பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி பெற்ற அனுபவத்துடன் 2008 இல் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையேற்று தனது கடமைகளை சிறப்புற ஆற்றி பாடசாலையின் பௌதீக வளத்தை உச்ச அளவில் முன்னேற்றியதுடன் கல்வித்தரத்தை உயர்த்துவதிலும் அயராது உழைத்த அதிபர் என்ற வகையில் இவர் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட் டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

திரு. சி. சத்தியசீலன்
செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு.

### பாடசாலையின் உயர் நிலைக்கு உழைத்தவர்



யா/செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர் இ.பாலகுமார் அவர்களது சேவையை பாராட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யா/செங்குந்த இந்துக் கல்லூரி சிறப்புடன் இயங்கி வந்த ஒரு பாடசாலையாகும். இடைப்பட்ட காலத்தில் பாடசாலையினது செயற்பாடுகளில் தளர்வு கண்டபோது அதிபராகக் கடமையேற்று பாட சாலையை எழுச்சிப் போக்கில் கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும்.

1979 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராக பகுதித் தலைவராக பிரதி அதிபராக, அதிபராக பல்வேறு வகிபங்குகளை இவர் வகித்துள்ளார். 03.01.2008 இல் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையேற்றதன் பின்பு தனது கடமையைச் சிறப்பாக ஆற்றி பாடசாலையை உயர்வு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து வரும் அதிபர்களும் சிறப்பாகப் பணியாற்றி இப்பாடசாலையினை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுகின்றேன்.


எஸ்.உதயகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

### ஆளுமை மிக்க அதிபர்



எமது அதிபர் காலத்தில் கல்வி விருத்தி பௌதிக வளவிருத்தி ஏற்பட்டதனை காலம் என்றும் பறைசாற்றும் அவரது எதிர்காலம் குடும்பத்துடன் சிறப்புற வாழ்த்துகிறேன்.

திருமதி ஜெ.கலாதரன்
முன்னாள் உப அதிபர்.
யா/செங்குந்த இந்துக்கல்லூரி




Mr.R.Balakumar S.L.P.S. I

### சேவை விவரம்

| | |
|---|---|
| ஆரம்பக் கல்வி | : யா/ திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் |
| இடைநிலைக் கல்வி | : யா/ செங்குந்த இந்துக் கல்லூரி |
| உயர்தரக் கல்வி | : யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி |
| ஆசிரிய சேவை | : தி/சித்தூர் G.T.M.S (1979 - 1981) |
| | தி/கோபாலபுரம் G.T.M.S (1981 - 1981) |
| | கே/கிந்தகட்டிய G.T.M.S (1981 - 1982) |
| ஆசிரியர் பயிற்சி | : பலாலி ஆசிரியர் கலாசாலை (1982 - 1983) |
| ஆசிரிய சேவை | : யா/கனகரட்ணம் M.M.V (1984 - 1989) |
| பகுதித் தலைவர் | : யா/கனகரட்ணம் M.M.V (1989-1994) |
| உப அதிபர் | : யா/கனகரட்ணம் M.M.V (1994 - 2003) |
| உப அதிபர் | : யா/நல்லூர் HTGS (2003 - 2005) |
| அதிபர் | : யா/நல்லூர் HTGS (2005 - 2008) |
| அதிபர் | : யா/செங்குந்த இந்துக் கல்லூரி (2008 - 2013) |

### 60 அகவையில் அகமகிழ்வோடு...

செங்குந்த இந்துவின்
சீர்மிகும் அதிபரின்
பிறந்திடும் அகவை - அறுபதை
உவந்து வாழ்த்திடுவோம்

மணிவிழா நாயகனின்
மகத்தான பணிகளை
மனதார வாழ்த்துவதில்
மகிழ்ந்திடுவோம் இந்நாளில்

கல்லூரி வளாகத்தை
கவினுற வளர்த்தவர்
கல்வி செழிப்புற மனதோடு
கரம் தந்த சீராளன்....

சொல்லின்றி செயலாற்றும்
வல்லமை தனக்குரியவர்
சொல்லும் மொழியிலும் ஆசானை
வெல்லும் நிர்வாகி



பாலகுமார் என்னும்
பண்பான முதல்வரை
பல்லாண்டு வாழ்கவென
எல்லோரும் வாழ்த்துகிறோம்.
வாழிய! வாழிய!
வாழிய பல்லாண்டு!



ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

### செயல் வீரன்



செங்குந்த இந்துவின் மைந்தனாகிய இரத்தினம் பாலகுமார் அவர்கள் இக் கல்லூரியின் அதிபராக கடமையேற்று கடந்த 6 வருடங்களாக அமைதியான நிலையில் சிறப்புற நிர்வாகத்தை மேற்கொண்டு பௌதிக வளங்களை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றதுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப் பாட்விதான செயற் பாடுகளும் உயர்ச்சியடைய செய்வதற்காக அரும்பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய நல்லுறவு மன்ற அங்கத்தவர்கள் அனைவரினதும் சார்பில் மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.ச.உமாசுதன்
தலைவர், நல்லுறவு மன்றம், செங்குந்த இந்துக்கல்லூரி.

### சாதனை படைக்க வழிசமைத்தவர்



பழைய மாணவனாய், ஊரவனாய், அதிபராய் என முப்பரிமாணங் கொண்டு கல்லூரியை பாட, இணைப்பாட விதானங்களில் தேசிய மட்டம் வரை சாதனை படைக்க வழி சமைத்த எமது அதிபர் மணி விழாக் கண்டு ஓய்வு பெறும் இந்நாளில் அவர் குடும்ப வாழ்க்கை சிறப்புறவும் பொதுச் சேவை மேலோங்கவும் வாழ்த்துகிறேன்.

எஸ்.பத்மராசா
உப அதிபர்

### அக்கறையுடன் பணியாற்றிய செம்மல்



யாழ்ப்பாணம் நல்லூர் செங்குந்த இந்துக்கல்லூரியின் அதிபர் இ.பாலகும்மார் அவர்கள் தமது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்து சிறப்பு வாய்ந்த கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதில் மிகவும் மகிழச்சியடைகின்றேன்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக இந்தக் கல்லூரியின் அதிபராக இருந்து கல்லூரியினதும் மாணவர்களினதும் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் அரும் பணியாற்றியவர். இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் என்ற வகையில் அவர் கல்விசார் நடவடிக்கையிலும் விளையாட்டுத்துறை போன்றவற்றிலும் அதீத கவனம் செலுத்தியமை பாராட்டுக்குரியது.

இவரது பதவிக் காலத்தில் கல்லூரி மேம்பட்டமைக்கு கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஏழு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றமை ஒரு சான்றாகும். இவரது ஓய்வுக் காலத்தில் நிறைந்த வாழ்வு வாழவும் சமூக சேவைகளில் மக்கள் சேவையாற்றி பெருமையடையவும் வாழ்த்துகிறேன்.

கௌரவ சி.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாணசபை.

### பாடசாலை சிறக்க சேவையாற்றியவர்



சித்தூர் அரசினர் முஸ்லிம் பாடசாலையில் 1979 இலே ஆசானாக அடிபதித்து மூன்று தசாப்தத்திற்கு மேற் கல்விப் புலத்திற் பணியாற்றிச் சேவை நீங்கும் இ. பாலகுமாரை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன்.

இ.பாலகுமார் அவர்கள் கல்விப் புலத்திலே ஆசானாக பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக படிப்படியாகப் பதவியுயர்வு கண்டவர். கடின முயற்சியும் ஊக்கமும் அவரைப் பதவியுயர்த்தியது நன்னூலார் கண்ட மூவகை மாணவர்களுக்கும் உகந்தவொரு ஆசிரியராக அவர் பத்தாண்டு காலம் பணிபுரிந்தார். ஆசிரிய சேவையில் உன்னத பணியாற்றியமையால் அவர் அதிபராக செங்குந்த இந்துக் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் சிறப்புடன் சேவையாற்றி அறுபது அகவை கண்டு சேவையினின்று நீங்குகிறார். அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

திரு. வ.செல்வராசா
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
வட மாகாணம்.

### முகாமைத்துவ மதிநுட்பம் மிக்கவர்



பாலகுமார் அவர்கள் செங்குந்த இந்துக்கல்லூரியின் மைந்தர் என்பதனாலேயே அப்பாடசாலை இன்று கல்வியில் சிறந்து விளங்குகின்றது. பாடவிதானம், இணைப்பாட விதானம என்பவற்றுடன் மட்டுமன்றி பௌதிக வளத்திலும் சிறப்புடைய பாடசாலை என்பதில் மகிழ்வடைகின்றேன். நகர்ப் புறப் பாடசாலையின் அருகில் அமைந்தி ருந்தாலும் இப்பாடசாலையின் பெறுபேறு சோர்வடையவில்லை. இதற்கு இவ் அதிபரின் முகாமைத்துவ மதிநுட்பமே துணை நின்றது. இந்துப் பாரம்பரியமும் அதிபரின் நீண்டகால ஆசிரியப் பணியும் பல்வேறு பல்லின மக்களிடையே கற்பித்த பாங்குமே இவரின் முகாமைத்துவ நுட்பத்திற்கு ஆதாரமாகும். அறுபது வயதைப் பூர்த்தி செய்யும் வேளையிலே இவரின் சேவையின் திறமை கண்டு வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கோ.வரதராஜமூர்த்தி
பி.க.ப. (கல்வி நிர்வாகம்), யாழ்ப்பாணம்.

### கல்வித் தரம் உயர உழைத்த உத்தமர்



எங்கள் பாடசாலையின் அதிபர் பாலகுமார் அவர்கள் பாடசாலையில் சரஸ்வதி சிலை, பூந்தோட்டம் அமைத்து கற்றலுக்கான சூழலை நிலையை உயர்த்தியதுடன் பௌதிக வளத்தையும் அதிகரித்து கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட்டுள்ளார். அவரது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் குடும்பத்துடன் சிறப்பாக அமைய கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

ராம் விசுவநாதபிள்ளை
தலைவர், OSA கனடா

(40757)(10.6.3)

## ஆசிரியர் நல்லுறவு மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

## பயன்தரு மரங்கள் தென்னிலங்கைக்கு சப்பு மரங்களே எங்களின் பாவனைக்கு

*முல்லைத்தீவு மக்கள் விசனம்*

யாழ்ப்பாணம், டிசெ.2

முல்லைத்தீவின் காட்டுப் பகுதிகளில் இருந்து பயன்தரு மரங்கள் அறுக்கப்பட்டு கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு தென் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் உள்ளூர் தேவைக்காக தாம் ஒரு மரத்தை கூட பெற முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வீட்டுத்திட்ட பணிகளுக்காக மரத் தளபாடங்களைப் பெற்றுக் கொள்வதில் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும், அப்படி அனுமதி பெற்று மரத் தளபாடங்களை வாகனங்களில் ஏற்றிச் செல்லும் போது அடிக்கடி பொலிஸார் வழி மறித்து இடையூறு விளை விப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதை விட தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட தரமற்ற மர வகைகளை மரக்காலைகளில் பெற்றுத் தாம்பயன்படுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது பிரதேசத்தில் அழியா வளமாக இருக்கும் பயன்தரு மரங்களை தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள் எந்த விதிமுறைகளும் இன்றி ஏற்றிச் செல்ல அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காத அதிகாரிகள் தாம் ஒரு மரத்தை அரிந்தால் கூட நீதிமன்று வரை கொண்டு சென்று தண்டம் அறவிடுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-500)

## புனரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்துச் சிரமங்கள்

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்துக்குப் பின்புறமாக உள்ள வீதி புனரமைக்கப்படாததால் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

பழைய கண்டி வீதியில் இருந்து இராமநாதபுரம் மகா வித்தியாலயத்துக்குப் பின்புறமாகச் செல்லும் இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதியின் பிரதான சந்தியில் உள்ள பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுவதுடன் அதன் அருகில் போடப்பட்ட கிரவல் குவியலாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியைத் தற்காலிகமாகவேனும் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. எனவே இனியாவது இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் ·கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## சிறு வீதிகளை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.2

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச சபைகளுக்கு உரிய சிறு வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுவதால் மக்கள் பல் வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது மின்சார இணைப்புக்கள் வழங்கப்படுவதால் தமது காணிகளுக்கு இடையிலான சிறு வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் ஊடாக மின்சாரத்தை பெறவேண்டியுள்ளது. ஆனால் குறித்த வீதிகள் துப்புரவு செய்யப்படாது அல்லது சிலரால் வீதிகளை தம்வசப்படுத்தி வேலி அடைக்கப்பட்டு இருப்பதால் மின்சாரம் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது தேவைகளை ஈடு செய்து இயல்பு வாழ்வைச் சீர்ப்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிலரால் கையகப்படுத்தப்பட்ட வீதிகளை மீட்டு உரிய எல்லைகளை வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-500)

## நடமாடும் மருத்துவ சேவை; அதிகரிக்குமாறு கோரிக்கை

வவுனியா, டிசெ.2

வவுனியா மாவட்டத்தில் நடமாடும் மருத்துவ சேவைகளை அதிகரிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பம்பைமடு, முதலியார்குளம், இராசேந்திரம்குளம், அரபாநகர், மடுக்கந்தை, ஆதிகுளம், சிதம்பரபுரம், சிறிராமபுரம், இயங்கராவூர், கருப்பனிச்சங்குளம் உட்பட பல்வேறு இடங்களில் உள்ள வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள், கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல முடியாது சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தனியார் மருத்துவமனைகளும் மேற்குறிப்பிட்ட இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. பலர் பணம் கொடுத்து வைத்திய சேவையைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

பின்தங்கிய கிராமப்புறங்களில் சீரான பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை. வீதிகள் சேதமடைந்து காணப்படுவதால் மழை காலங்களில் வயோதிபர்கள் வவுனியா பொது மருத்துவமனையை வந்தடைவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் பொது மருத்துவமனையிலும் நீண்ட நேரம் காத்திருந்து மருத்துவ சேவையைப் பெறமுடியாத நிலையில் பலர் உள்ளனர்.

இந்த நிலையில் நடமாடும் மருத்துவ சேவையை அதிகளவில் நடத்துமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# மக்களின் தேவைகள் படிப்படியாகப் பூர்த்தி

*துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, டிசெ.2

முல்லைத்தீவு உயிலங்குளம் இந்திய வீட்டுத் திட்டத்துக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செலர் ரி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம் இந்திய வீட்டுத் திட்டத்தில் காணிகள் இல்லாத மற்றும் விசேட தேவையுடைய குடும்பங்கள் என்பன முன்னுரிமை அடிப்படையில் குடியமர்த்தப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத் தித் தராததால் தாம் சிரமங்களை எதிர்கொண்டு வருவ தாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலர் ரி.குணபாலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

உயிலங்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட மாதிரி இந்திய வீட்டுத் திட்டத்தில் இந்தப் பிரதேசத்தில் காணிகள் இல்லாத மற்றும், விசேட தேவைக்குட்பட்ட குடும்பங்களின் நன்மை கருதி முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் குடிதண்ணீர் தேவை மற்றும் அடிப்படைத் தேவைகள் அதிகம் இருந்தன. தற்போது தண்ணீருக்கென கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. குடியிருப்பு வீதிகள் சிரமதானங்கள் மூலமாக துப்புரவு செய்யப்பட்டுள்ளன. எல்லாத் தேவைகளையும் உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாது. படிப்படியாக மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (க-6)

## வவுனியாவில் குரங்குகள் அட்டகாசம்

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் குரங்குகள் கூட்டமாக வந்து அட்டகாசம் புரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இங்கு வரும் குரங்குகள் தொலைத் தொடர்பு வயர்களை அறுத்து நாசம் செய்வதுடன் வர்த்தக நிலையங்களுக்குள் சென்று உணவுப் பொருள்களை காவிச் சென்று விடுகின்றன.

சீன வெடி கொளுத்தி கலைத்தால் வெடி கொழுத்துபவர்களை குரங்குகள் கூட்டமாகச் சேர்ந்து விரட்டுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-402)



## வவுனியா மணிபுரத்தில் சர்வோதய இளைஞர் முகாம்

வவுனியா, டிசெ.2

வவுனியா மணிபுரம் பகுதியில் சர்வோதய நிறுவனத்தினால் இளைஞர் முகாம் ஒன்று கடந்த 22 ஆம் திகதி முதல் ஐந்து நாள்கள் நடத்தப்பட்டது. வடக்கு, தெற்குப் பகுதியைச் சேர்ந்த சிங்கள தமிழ் இளைஞர்கள் இந்த முகாமில் பங்கு பற்றினர்.

தென் பகுதியில் இருந்து வந்த சிங்கள இளைஞர், யுவதிகள் மணிபுரத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் வீடுகளில் தங்கியிருந்து பண்பாடு, சிரமதான நிகழ்வுகள் என்பனவற்றில் பங்குபற்றினர்.

மேலும் வீதிப் புனரமைப்பு, குடிதண்ணீர் கிணறுகளைப் புனரமைத்தல் வேலைகள், உடல் சீராக்கப் பயிற்சிகள், பாசறைப் பயிற்சிகள் ஆகியவற்றிலும் ஈடுபட்டனர்.

நாட்டில் சமாதானத்தையும் கலாசாரப் பண்புகளையும் வளர்க்கும் நோக்குடன் இந்த நிகழ்வை ஏற்படுத்தியதாக இந்த முகாமை ஒழுங்குபடுத்திய சர்வோதய நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் சர்வோதய வடமாகாண ஆலோசகர் எஸ்.சுப் பிரமணியம், சர்வோதய சாந் திசேனா திட்டப் பணிப்பாளர் எச்.ரவீந்திரகந்தகே, சர்வோதய வவுனியா மாவட்ட இணைப்பாளர் க.உதயகுமாரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-402)



முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் செல்வபுரம், கோயில்குடியிருப்பு, மணற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுகளை சோந்த 23 பயனாளிகளுக்கு லெபாரா நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமலமரி தியாகிகள் சபையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதேச செயலர் குருபரன், திட்டப்பணிப்பாளர் நிறோசியன் வில்வராசா, உதவித்திட்டப் பணிப்பாளர் சிவநேசராஜா, ஐஓஎம் திட்ட இணப்பாளர் அருட்பணி ஜீவேந்திரா போல் (அ.ம.தி), வடமாகாண குரு முதல்வர் போல் நட்சேத்திரம் (அ.ம.தி) அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளிடம் வீடுகளைக் கையளித்தனர். (ஐ)

## நுளம்பைக் கட்டுப்படுத்த சிரமதானப் பணிகள்

வவுனியா டிசெ. 2

வவுனியா கல்நாட்டியகுளம் கிராமத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வகையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி நடை பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், சிறுவர் பாடசாலை, வீதிகள், சிறு நீர்த் தேக்கங்கள் போன்ற இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளன.

கிராம அமைப்புக்களும், மக் களும் இணைந்து முன்னெடுத்த இந்த சிரமதானப் பணி மூலம் நுளம்பு பெருகுவது தடுக்கப்பட்டுள்ளதுடன் கிராமமும் அழகுபடுத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (ஜ-421)

## மாற்றுத் திறனாளிகள் தினம் கிளிநொச்சியில்

அக்கராயன், டிசெ.2

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனம் டிசெம்பர் 3 ஆம் திகதியாகிய நாளைய தினம் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

குறித்த தினம் முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி அரச செயலகத்தில் ஒன்று கூடவுள்ள மாற்றுத்திற னாளிகள் விழிப்புணர்வுச் செயற்பாடு ஒன்றை கிளிநொச்சி நகரில் நிகழ்த்தவுள்ளனர்.

இதனை கிளிநொச்சி அரச அதிபர் ஆரம்பித்து வைக்க வுள்ளார்.

பிற்பகல் 2 மணிக்கு அரச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாற்றுத் திறனாளிகளின் கருத்துரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வுகள் தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மாற்று வலு வுள்ளோர் சம்மேளனத் தலைவர் தி.சிவமாறன் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18-9)

வாமதேவா தியாகேந்திரன்
அவர்களின்
62 ஆவது பிறந்த நாளில்...




"பூமியில் வாழக்கிடைக்கப் பெற்ற
வரப்பிரசாதத்திற்கு
நாம் வழங்கும் வாடகை சேவை ஒன்றே"
என்ற தாரக மந்திரத்தோடு
தர்மப்பணி செய்து 62 ஆவது அகவையில் காலடி வைக்கும் எமது ஸ்தாபகரின் நாமம் என்றும் மறக்க முடியாத வரலாறுகளாகும். இவரின் நாமம் சிறக்க அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர்:
முகாமையாளர், பணியாளர்கள்
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்
527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# கூடுதல் அதிகாரங்கள் முதல்வருக்கு வேண்டும்

## மு.கா. சிரேஷ்ட பிரதித் தலைவர் கோரிக்கை

அம்பாறை,டிசெ.2

மாகாண சபை ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்து, மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கு அதிகாரங்களை வழங்கும் அரசமைப்பு சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் கூறினார்.

சாய்ந்தமருது எம்.எச்.எம்.அஷ்ரப் சமூக சேவை மன்றத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் அறுகம்பை ஹங்லூஸ் விருந்தினர் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இனப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசமைப்பு திருத்த ஓட்டை விழுந்த பாத்திரம் போன்றது." அதனால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாதென வடமாகாண சபையின் முதல் அமர்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை விடவும் மாகாண ஆளுநருக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது அநீதியான விடயமாகும்.

சிறுபான்மை மக்கள் சமத்துவத்துடன் வாழக்கூடிய அரசியல் சீர்திருத்தம் ஒன்றை அரசு கொண்டு வரவேண்டும். அதில் மாகாணசபை ஆளுநரின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி முதலமைச்சருக்கு அதிகாரங்களை அது வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று மாகாணசபை நிர்வாகம் நடைமுறைக்கு வந்துள்ளது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவரது கன்னி உரையில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

வடபகுதி முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பில் அமைந்திருந்த அவரது நம்பிக்கையூட்டும் உரை செயல்வடிவம் பெறவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் முதலமைச்சரின் போராட்டத்துக்கு எமது ஆதரவு எப்போதுமுண்டு.


இராணுவ அதிகாரியான ஆளுநருக்குப் பதிலாக ஓய்வு பெற்ற சிவில் சேவை அதிகாரி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டுமென்ற முதல்வர் விக்னேஸ்வரனின் கோரிக்கை கிழக்கு மாகாணத்துக்கும் பொருத்தமுடையதாகும்.

கிழக்கிலும் ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரி ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றார். ஆனால் அவருக்குப் பதிலாக ஓய்வுநிலை சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்பதே முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையாகவுமுள்ளது.

ஆளுநர் கையில் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு முதலமைச்சர் அமைச்சர் குழுவுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் அரசமைப்புச் சீர்திருத்தமொன்றை அரசு அவசரமாகக் கொண்டு வரவேண்டும்.

மக்களுக்கு சுதந்திரமானதொரு அரசியல் கொள்கை வகுத்து அதன் வழியில் ஒன்றுபடுத்தி அரசியலில் பேசும் பொருளாகிய பெருமையைப் பெற்றுத் தந்தவர் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் ஆவார். தமிழ்த் தேசிய நிலப்பரப்பில் முஸ்லிம்களுக்கு ஒரு தேசியம் இருக்கின்றது என்பதனை வகுத்துக் காட்டி அந்தத் தேசியத்தை அடைந்து கொள்வதற்குரிய வழி வகைகளையும் அவர் வகுத்துத் தந்தார்.

தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமைப்படுவதன் மூலம் மட்டுமே பேரினவாதிகளிடமிருந்து உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பது தலைவர் அஷ்ரப்பின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வந்துள்ளது.-என்றார். (ச-30)



கல்முனை மாநகர சபை முதல்வர் நிஸாம் காரியப்பர் தலைமையில் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் இந்தியத் துணைத்தூதர் குமரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை மாலை இந்தியத் தூதரகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் தொடர்ந்தும் இன ரீதியான ஆக்கிரமிப்பு

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் ஓய்ந்தாலும் இன ரீதியான ஆக்கிரமிப்பு இன்னும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. அதனால் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் செயற்பாடுகளையும் படிப்படியாக சுரண்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு, மங்களகம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரெத்தின தேரரின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**"-"**

**மட்டக்களப்பு மாவட்டத்தின் தலை நகரிலே பிக்கு குடியமர்ந்து மாவட்ட அரச நிர் வாகத் துக்கு இடையூறு செய்து குழப்பி வருவதுடன், தமிழ் மக்களையும் துன்பப்படுத்தி வருகின்றார்.**

மட்டக்களப்பு மங்களகம விகாரைக்கு அம்பிட்டிய சுமணரெத்தின தேரர் எப்போது வந்து குடியமர்ந்தாரோ, அப்போதிலிருந்தே அவரின் செயற்பாடுகளை நாம் நன்கு அவதானித்து வருகின்றோம்.

அவர் எங்கிருந்தோ வந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் தலைநகரிலே குடியமர்ந்து மாவட்ட அரச நிர்வாகத்துக்கு இடையூறு செய்து குழப்பி வருவதுடன், தமிழ் மக்களையும் துன்பப்படுத்தி வருகின்றார்.

நூறு வீதம் தமிழ் மக்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பக்கமாக உள்ள பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் அத்துமீறி புகுந்து அங்கிருந்த அரச உயர் அதிகாரியை தாக்குவதற்கு முயன்றது மாத்திரமல்லாமல் அரச சொத்துக்களுக்கும் சேதம் எற்படுத்தியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கன.

இந்தப் பிக்குவின் செயலுக்கு சட்டம்சரியானதண்டனைவழங்கும் என்று எதிர்பார்க் கிறோம். அத்தோடு இந்தப் பிக்குவை மட்டக்களப்பு மங்களகம விகாரையிலிருந்தும் இடமாற்றவும் வேண்டும்.- என்றார். (ச-32)

# குடிதண்ணீர் தேடி அலையும் மக்கள்



மட்டக்களப்பு, டிசெ.2

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேசத்தில் தொடர்ந்து குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கடும் மழை பெய்ய வேண்டிய இந்தக் காலத்தில் குறைந்தளவு மழையே பெய்துள்ளது.

அதனால் இந்தப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

மக்களின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக போரதீவுப்பற்று பிரதேச சபை குடிதண்ணீர்த் தாங்கிகள் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகின்றது. எனினும் எமக்கு வழங்கப்பட்டு வரும் குடி தண்ணீர் போதியளவானதாக இல்லை என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொறுகாமம், பிலாலிவேம்பு, புன்னக்குளம், வெல்லாவெளி, விவேகானந்தபுரம் போன்ற பல கிராமங்களில் இவ்வாறு குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வெளிநாட்டுப் பறவைகள் கிழக்குக்கு படையெடுப்பு



மட்டக்களப்பு, டிசெ.2

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள வயல்களிலும் சிறிய குளங்களிலும் வெளிநாட்டுப் பறவையினங்கள் பறந்து திரிகின்றன.

வெளிநாட்டுப் பறவையினங்களுடன் சேர்ந்து அந்தப் பிரதேசங்களிலிருக்கின்ற உள்ளூர் பறவையினங்களும் சேர்ந்து திரிகின்றன.

இந்தப் பறவையினங்களின் படையெடுப்பு மட்டக்களப்புக்கு மேலும் அழகு சேர்ப்பதனை பலரும் கண்டு இரசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-32)

## பரீட்சைக்கான விண்ணப்பம் விநியோகம்

திருகோணமலை,டிசெ.2

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தலைமை அலுவலகத்திலும், பிராந்திய அலுவலகங்களிலும் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை தொடர்பான வழி காட்டல் கருத்தரங்கு இந்த முறையும் நாடுதழுவிய ரீதியில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு தமிழ்ச் சங்கம், வவுனியா, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ள கருத்தரங்கின் முதல் அமர்வு எதிர்வரும் 28ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை 08.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மாற்று திறனாளிகள் சர்வதேச தினம்

மட்டக்களப்பு, டிசெ.2

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவினரால் மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அக்கரைப்பற்று ஸாஹிறா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யால் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்,வலயக் கல்விப்பணிப்பாளர் அஸ்சேஹ் ஏ.எல்.எம். காசீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எஸ்.அகமட்கியாஸ், எம்.ஐ.ஏ. முத்தலிப் உட்படப் பலர் கலந்து கொள்வர் என்று விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகரும் விழா இணைப்பாளருமான ஏ.எம். ஜஃபர் தெரிவித்தார்.

'தடைகளை வெற்றிகொண்டு உள்ளீட்டுச் சமூகத்தை நோக்கி பிரவேசிப்போம்' என்னும் கருப்பொருளை முன்னிலைப் படுத்தி மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்படும். (ச)

## தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா




தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா கல்முனை கார் மேல்பற்றிமாகல்லூரியில்நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி முதல்வர் எம்.ஸ்ரீபன் மத்தியு தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு மதி. ரூபி வலன்றினா பிரான்சிஸ், உதவிக்கல்விப் பணிப்பாளரும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவருமான வி.ரி.சகாதேவராஜா, கல்முனை வலயத்தின் தமிழ்த் துறை உத விக்கல்விப்பணிப்பாளர் கே.வரதராஜன் உட்பட பலர் கலந்து கொள்வர். (ச-31)

# மனித உரிமை மீறல்கள் குறித்து மார்ச்சுக்குள் விசாரணை தேவை

## இல்லையேல் ஐ.நா.வில் அரசு சிக்குவது உறுதி என்கிறார் விக்கிரமபாகு



கொழும்பு, டிசெ. 02

"மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் அரசு நடத்தாவிடின், ஐ.நாவில் சிக்குவது உறுதி" என நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தாம் ஆக்கிரமிப்புக்கு எதிரானவர் என வார்த்தைக்கு வார்த்தை கூறிக்கொண்டு வருகிறார். ஆனால், இவரது ஆட்சியிலேயே நாட்டில் பெரும்பாலான ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றன.

போரால் பாதிப்படைந்த மக்களின் நிலங்களை பாரபட்சமின்றி ஆக்கிரமிப்பு செய்து இராணுவ முகாம்களை அரசு அமைத்துக் கொண்டு வருகின்றது. இவைதானா ஜனாதிபதி கூறும் ஜனநாயகம்? இதனால், தமிழர்களுக்கு தற்போதிருக்கும் நிம்மதியும் தொலைந்து விட்டது.

இப்படி தமிழர்களின் நிம்மதியை அழித்த அரசு தற்போது 2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை சமர்ப்பித்து நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நிம்மதியையும் கெடுத்துள்ளது. இது தனி ஒரு நபரின் சுயநலத்திற்காக தயார் செய்யப்பட்ட பட்ஜெட். இதனால், மக்கள் ஏமாற்றமடைந்தது மட்டுமே மிச்சமாகும்.

அதுமட்டுமல்ல, இந்த அரசே பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை நாட்டுக்குள் அழைத்தது. யாழிற்கு பயணம் செய்ய அனுமதியளித்தது.

அவர் அனைத்தையும் பார்வையிட்டு இலங்கையில் ஜனநாயகமே இல்லை என சர்வதேசத்தில் முறையிட்டுள்ளார். அத்தோடு, அடுத்த வருட மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையிலும் முறையிடவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இவரின் இச்செயற்பாட்டிற்கு காரணம் இந்த அரசே.

போர்க்காலத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உள்ளக விசாரணையை பாரபட்சமின்றி நடத்தியிருந்தால் இன்று இந்நிலைமை ஏற்பட்டிருக்காது. அதைச் செய்யத் தவறிவிட்டு தற்போது எதிர்கட்சிகள் மீதும், எம்மீதும் வீண்பழி சுமத்துகிறது அரசு.

ஆனால், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தாவிடின் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் சிக்குவது உறுதி. சர்வதேச நாடுகளின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதை அரசு உணர்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்." என்றார்.

# வீட்டிலிருந்த பெண் மீது வன்புணர்வு

கொழும்பு, டிசெ. 02

சிறுவர் காப்பகமொன்றுக்கு நிதி சேகரிக்க வந்ததாகக் கூறி வீடொன்றுக்குள் நுழைந்த நபரொருவர் அங்கிருந்த 39 வயதுப் பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி விட்டுத் தப்பிச் சென்ற சம்பவமொன்று கல கெதர பிரதேசத்தில் நடந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் கலகெதர பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, அவர்கள் மேற்கொண்ட தேடுதலில் மூன்றே மணித்தியாலங்களில் சந்தேக நபர் கைதுசெய் யப்பட்டார்.

44 வயதானவரும், மூன்று பிள்ளைகளின் தந்தையுமான சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட பெண் மருத்துவப் பரிசோதனைக்காக கலகெதர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கலகெதர பொலிஸ் பொறுப் பதிகாரி எம்.டி.சந்திரபாலவின் தலைமையில்சென்ற பொலிஸ் குழுவே சந்தேகநபரைக் கைது செய்திருக்கிறது.

# ஜீவனாம்சப் பணம் பெற வந்த மனைவிக்கு நீதிமன்ற வளவில் மண்வெட்டித் தாக்குதல்

## கணவனுக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

ஜீவனாம்சப் பணத்தைப் பெறுவதற்கு நீதிமன்றத்துக்கு வந்த மனைவியை நீதிமன்ற வளவில் கிடந்த மண்வெட்டியொன்றால் தாக்கிப் படுகாயப் படுத்திய கணவனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு தெஹியத்தகண்டிய நீதிவான் சாமர விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார். சமந்தகுமார ரத்னாயக்க என்ற நபருக்கே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த நிலுகா டி சில்வா எனும் 26 வயதுப் பெண் ஆபத்தான நிலையில் தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது தலையில் அவசர சத்திர சிகிச்சையொன்று செய்யப்பட்டுள்ளதாக அந்த வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சந்தனகுமார வீரமான தெரிவித்திருக்கிறார்.

தெஹியத்தகண்டிய பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயசாந்த டி சில்வாவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

# தார் என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட 7 கொள்கலன்கள் எதனோல் சுங்கத்தில் தடுத்துவைப்பு

கொழும்பு, டிசெ. 02

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள ஏழு கொள்கலன்களில் இருந்த எதனோல் சுங்கப் பகுதியினரால் கடந்த வெள்ளிக்கிழமை தடுத்துவைக் கப்பட்டது.

இந்தக் கொள்கலன்களில் தார் அடங்கியுள்ளதாக பொய்யான ஆவணங்களை இறக்குமதியாளர் சமர்ப்பித்திருந்தார்.

எனினும், சந்தேகத்தின் பேரில் அந்தக் கொள்கலன்கள் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவற்றுக்குள் எதனோல் அடங்கிய கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், அந்தக் கொள்கலன்கள் உறுகொடவத்தை சுங்கப் பகுதியில் தடுத்துவைக் கப்பட்டுள்ளன.

பண்டாரகம பிரதேசத்திலுள்ள வியாபாரியொருவரால் இந்த கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனவும், சுங்கத் திணைக்கள வரலாற்றில் ஒரே சமயத்தில் இவ்வளவு பெரிய தொகை எதனோல் கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதற்தடவை எனவும் சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிக்கு வைத்தியசாலையில் அனுமதி மறுப்பு

## மீண்டும் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம்

கொழும்பு, டிசெ. 02

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 12 வயதுச் சிறுமியை சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்காக செவனகல பொலிஸார் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்ப்பதற்காகச் சென்ற சமயம் அவளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு செவனகல பொலிஸார் இந்தச் சிறுமியை எம்பிலிப்பிட்டிய வைத்திய சாலைக்குக் கொண்டுசென்றனர். அவளை விடுதியில் சேர்க்க வெளி நோயாளர் பிரிவில் பிரவேச அட்டை (அட்மிஷன் கார்ட்) வழங்கப்பட்டது. எனினும், அவளை சேர்க்கவேண்டிய 12ஆம் இலக்க விடுதியில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரை மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸார் மீண்டும் அந்தச் சிறுமியை செவனகல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் செவனகல பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

வைத்தியசாலையில் சேர்க்கப்படவேண்டிய இந்தச் சிறுமியை மீண்டும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தது சட்டப்படி குற்றமாகும். 12 ஆம் இலக்க விடுதியில் இருந்த உத்தியோகத்தர்கள் சிறுமியை அவளது தாயாரிடம் ஒப்படைத்து அவளுடன் அடுத்த நாள் காலை வருமாறு கூறினார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமியை பாதுகாப்பு இல்லாமல் அவளது தாயிடம் ஒப்படைப்பது ஆபத்தானது. அதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்பதை விடுதியில் இருந்தவர்களுக்கு நாங்கள் எடுத்துக் கூறினோம். ஆனால், அவர்கள் அதைக் கேட்கவில்லை. ஆகவே, வேறு வழியில்லாமல் அந்தச் சிறுமியை மீண்டும் எங்கள் பொலிஸ் நிலையத்துக்கே அழைத்து வந்தோம் - என்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் சப்ரகமுவ மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்தவை வருமாறு:-

"வெளிநோயாளர் பிரிவில் விடுதியில் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்விடுதியில் உள்ளவர்களுக்கு அனுமதியை மறுப்பதற்கு அதிகாரம் கிடை யாது. இது தொடர்பில் நான் எம்பிலிப்பிட்டிய வைத்திய சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது அந்த சமயத்தில் இருந்த மருத்துவ உதவி யாளர், தாதிகள் பணிப்புறக் கணிப்பின் காரணமாக சிறு மியை விடுதியில் சேர்க்கும் சம்பிரதாயங்களைச் செய்ய ஒருவரும் இல்லாததால் அனு மதி மறுக்கப்பட்டுள்ளது என விளக்கம் கொடுக்கப்பட்டது - என்றார்.

# பஸ்ஸில் பயணிகளிடம் பணம், பொருள் திருடிய ஐவர் கைது

கொழும்பு, டிசெ. 02

கல்கிஸை - கொட்டாவ நோக்கிச் செல்லும் தனியார் பஸ்களில் பயணிகளிடம் பணம், பொருள் என்பனவற்றை திருடிய ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவரும் திட்டமிட்டு திருட்டுச் சம்பவங்கள் புரிந்து வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து 11 ஆயிரத்து 600 ரூபா பணமும் பயணப் பைகளும் கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், 180 மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

# தேங்காய் எண்ணெயில் கலப்படம்

## அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் அறிக்கை

கொழும்பு, டிசெ. 02

இலங்கைச் சந்தையில் விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெயில் பெரும் பகுதி பாம் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெயால் கலப்படம் செய்யப்பட்டவையே என அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேங்காய் எண்ணெய் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் நூறில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வின் போது 30 மாதிரிகளில் 50 சதவிகிதம் பாம் எண்ணெய் அல்லது தாவர எண்ணெய் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தையில் விற்பனைக்கு விடப்படும் தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த ஏராளமான முறைப்பாடுகளையடுத்து வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அத்தகைய எண்ணெய் களைப் பரிசோதனைக்குஉட்படுத்துமாறும் அவற்றில் கலப் படங்களைச் செய்திருப்பவர்களுக்கு எதிரா கக் கடுமையான சட்ட நட வடிக்கைகளை மேற் கொள் ளுமாறும் நுகர்வோர் அதிகா ரசபைக்குப் பணிப்புரை வழங்கியிருந்தார்.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது நகர்வோர் அதிகார சபை சேகரித்த மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்கு அனுப்பியிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் கலப்படம் செய்த விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரசபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

# தனியார் இரசாயன கூட பரிசோதனைகளுக்கு கட்டணங்கள் நிர்ணயம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 02

நோயாளிகள் அரச வைத்தியசாலைகளுக்கு வெளியில் செய்துகொள்ளும் இரசா யன கூடப் பரிசோதனைகளுக்கு அறிவிடப்படும் கட்டணங்களை நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளியில் செய்யப்படும் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு கண்மூடித்தனமாகக் கட்டணங்கள் அறவிடப்படுவதால் நோயாளிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளா கிறார்கள். நோயாளிகளின் சிறுநீர், மலம், இரத்தம் போன்றவற்றைப் பரிசோதிப்பதற்குத் தனியார் ஆய்வுகூடங்கள் பெருமளவு கட்டணங்களை அறவிடுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டே சுகாதார அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது எனவும் ஆய்வுகூடப் பரிசோதனையாளர்கள் சங்கத்துடன் பேச்சு நடத்தி சுமுக மான ஒரு கட்டண முறையை நிர்ணயிக்கவுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# லொறி சில்லுக்குள் சிக்கி ஆண் குழந்தை சாவு

கொழும்பு, டிசெ. 02

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் நுகேகொடல்ல - ஹினடியன பிரதேசத்தில் லொறியின் சில்லுக்குள் சிக்கி குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றை வீதி நோக்கி செலுத்தியபோது லொறிக்கு பின்னால் நின்ற குழந்தை சில்லுக்குள் நசுங்குண்டுள்ளது. படுகாயமடைந்த குழந்தை கம்பஹா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தது.

ஒன்றரை வயதான சந்தலு ரசதுன என்ற ஆண் குழந்தையே இவ்வாறு விபத்தில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்திராவுக்குப் பின் ஒரு துணிச்சலான முடிவு

இறுதிப் போரில் இடம்பெற்றது தமிழ் இனப் படுகொலைதான் என்பதை திடீரென இந்திய அரசு முதல் தடவையாக ஏற்றுக்கொண்டிருப்பது சற்றே ஆச்சரியத்தையும் ஆசுவாசத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

சனிக்கிழமை இரவு சென்னையில் நடந்த நிகழ்வில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், இறுதிப் போர் பற்றிய இந்திய அரசின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார். இந்த அறிவிப்பு – இந்திய மத்திய அரசின் இந்த நிலைப்பாடு – ஈழத் தமிழர்களின் நெருக்கடியில் மிக மிக முக்கியமான மைல்கல்.

இதற்கும் ஒருபடி மேலே சென்று, இலங்கையில் இனப்படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளைத் தண்டிக்கும் வரை இந்திய அரசு ஓயாது என்று சிதம்பரம் அந்தக் கூட்டத்தில் கூறியிருக்கிறார் என்று 'தி ஹிந்து' தமிழ்ப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இறுதிப் போர் விடயத்தில் இந்திய அரசின் உண்மையான நிலைப்பாடு இதுதான் என்றால் அது போற்றிப் பூசிக்கப்பட்டு வரவேற்கப்பட வேண்டிய ஒரு முடிவு என்பதில் சந்தேகமில்லை. அதில் கேள்விகளுக்கே தமிழர்களுக்கு இடமிருக்க முடியாது.

இலங்கையில் நிரந்தரமான அமைதி ஏற்பட வேண்டுமானால், இங்கு இனப்படுகொலை இடம்பெறுகிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்வதும் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் இனங்காணப்பட்டு அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதும் அவசியமானது.

தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள் என்கிற உண்மை ஏற்றுக்கொள்ளப்படும் போதுதான் அவர்களுக்கு உண்மையான, நீதியான, நியாயமான தீர்வு ஒன்றை சர்வதேச சமூகத்தால் பெற்றுக்கொடுக்க முடியும். அதேபோன்று போர்க் குற்றங்களிலும் இனப்படுகொலைகளிலும் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படும்போதுதான், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆறுதல் கிடைப்பதுடன் பெரும்பான்மை சமூகத்தின் மீது நம்பிக்கையையும் அது ஏற்படுத்தும்.

ஆனால் யதார்த்தத்தில், இலங்கையில் இன அழிப்பு நடந்தது என்பதைச் சர்வதேச சமூகம் இதுவரை ஏற்றுக்கொண்டதில்லை. இலங்கையில் நடைபெற்றது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான போர் என்பதைத் தாண்டி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்பதைத் தாண்டி உலக நாடுகள் இந்தப் பிரச்சினையை அணுக இதுவரை தயக்கம் காட்டியே வந்துள்ளன.

தமிழர்கள் இலங்கை அரசால் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்பதையும் போரில் போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் நடந்தன என்பதையும் ஏற்றுக்கொண்ட பல மேற்கு நாடுகள்கூட இங்கு இனப்படுகொலை ஒன்று நடந்தது என்பதை ஏற்பதற்குத் தயாரில்லை.

இந்த நிலையில்தான் இந்திய அரசு முதல் தடவையாக நடந்தது இனப்படுகொலையே என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. இது சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது போக, வருங்காலத்தில் இங்கு நடந்தது இனப் படுகொலைதான் என்று ஏனைய நாடுகள் ஏற்றுக் கொள்வதற்கான பிள்ளையார் சுழியாகவும் அமைந்து விட்டது.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் ராஜதந்திர நகர்வுகளுக்குப் பின்னர் ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்திய அரசு எடுத்த மிகத் துணிச்சலான தீர்மானமாக இதனைக் கொள்ளலாம். அதேவேளை, இந்த அறிவிப்பு தேர்தல் கால பாசாங்காக இல்லாமல் ஈழத் தமிழர்கள்பால் இந்தியா கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடு என்பதை உறுதிப்படுத்துவதும் புதுடில்லியின் முக்கிய கடமை என்பதை இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்தியாவின் இந்த முடிவு இலங்கையுடனான உறவை மேலும் அழுத்தத்துக்கு உள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்படி இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்காமல் கொழும்பை வழிக்குக் கொண்டுவர முடியாது என்பதுதான் யதார்த்தம்.

# மனித உரிமை சபையை எதிர்கொள்ள தயாராகிறது இலங்கை அரசு

★ 30 வருட கால இழப்புகள் பற்றி கணக்கெடுப்பு ஆரம்பம்.

★ இன ரீதியில் கலவன் பாடசாலைகள். காணிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு.

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
-கோகுலன்

ஜெனிவாவில் அடுத்த மாதம் மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாடு தொடர்பான ஆயத்தங்களை மேற்கொள்வதும் சில முக்கிய வளர்ச்சித் திட்டங்களை வேகப்படுத்துவதும் இப்போது ஆட்சியாளருக்கு முக்கியத்துவமாகியுள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் 37 அரசுத் தலைவர்கள் பங்கேற்பதற்கு உறுதியளித்திருந்ததாக வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்திருந்த நிலையில் 26 அரசுத் தலைவர்கள் மாத்திரமே வந்திருந்த விடயம் கடந்த வாரம் சில அமைச்சர்கள் மத்தியில் பேசும் பொருளாக இருந்ததை காணமுடிந்தது. கடந்த வாரம் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று வைப வங்களை நடத்தியவர்கள் மீது பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கடுமையாக நடந்துகொண்டனர்.

ஜெனிவா ஐ.நா.மனித உரிமைகள் சபை மாநாட்டுக்கான முன் ஏற்பாடுகளில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மேலும் பலவற்றை செயற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன.

அப்படியான - மிகவும் விரிவாகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள விடயம் கடந்த 30 ஆண்டுகால முரண்பாடுகளின் போது ஏற்பட்ட இறப்புகள், ஆள்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் பொருள்கள், சொத்துக் களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான கணக்கெடுப்பு பற்றியதாகும்.

பொது நிர்வாகம் மற்றும் மக்கள் தொகை மற்றும் புள்ளி விவரம் தொடர்பான அமைச்சுகளின் கூட்டுப் பணியாக இது செயற்படுத்தப்படும் சகல குடும்பங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிணக்கினால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களும், ஆள்களும் கணக்கெடுக்கப்படும்போது அவர்கள் இரண்டு தடவை கணக்கெடுக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த முடியும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி.ஓ.குணவர்த்தன இது பற்றி குறிப்பிடுகையில் "2009 மே மாதம் முடிவடைந்த போரின் இறுதிக் கட்டங்களில் கொல்லப்பட்ட அல்லது காணாமற் போனவர்கள் தொடர்பாக மூன்றாம் தரப்பினரால் அல்லது உறவினர்களால் சமர்ப்பிக்கப்படும் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எந்த ஒரு தகவலும் மிக நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் முன்வைக்கப்பட வேண்டும் என்றார். பிரபாகரனும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பது எமக்குத் தெரியும். அதனால் தகவல் தெரிவிப்பதற்கு அவரது குடும்பத்தவர் எவரும் இங்கு இல்லாமையால் அவர்கள் பற்றிய விவரம் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது" -என்றார்.

"இறப்புக்களை உறுதி செய்வதற்கு இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பொலிஸ் சான்றிதழ்கள் கோரப்படும் காணாமற் போனவர்கள் தொடர்பிலும் இந்த முறையே கையாளப்படும்" என்றார் அவர். "கணக்கெடுப்பு இப்பொழுது இடம்பெற்று வருகின்றது. டிசெம்பர் 20 ஆம் திகதி இந்தப்பணி முடிவடையும். இறுதி அறிக்கை மூன்று மாதங்களில் தயா ராகிவிடும்" என்றார். அவரது கருத்தின்படி மார்ச் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டுக்கு முன்னரே அறிக்கை தயாராகிவிடும் என்று தெரிகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டிருந்த தனது அறிக்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகளும் அது போலவே அவைகளை தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை களும் நல்லிணக்கச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்து வனவாக இருக்கும் என்று தம்முன் சாட்சிகளாக தோன்றிய பலர் வலியுறுத்தியிருந்ததாகத் தெரிவித்திருந்தது.

எனவே நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் வகையிலேயே குறித்த பகிரங்கப்படுத்தப்பட்ட போரால் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

**இன ரீதியிலான கலவன் பாடசாலைகள்**

பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இன ரீதியில் கலவன் பாடசாலைகளை உரு வாக்குவது பற்றி ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையளிக்கும் படி தேசியகல்வி ஆணைக்குழுவை அமைச்சரவை கேட்டுக்கொண்டிருக்கிறது. தேசிய கல்விக் கொள்கையொன்று குறித்தும், மாற்றமடைந்துவரும் இலங்கையின் தேவைக்கேற்ப சகல கல்வி பிரிவுகளிலும் இந்த முறை நீடிப்பதை உறுதி செய்வது குறித்தும் ஆலோசிக்கும்படி கல்வி ஆணைக் குழு கேட்கப்பட்டுள்ளது. இந்த யோசனையானது நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் முன்வைக்கப்பட்டதாகும். பல்வேறு இனங்கள் மற்றும் சமய சூழ்நிலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பணிபுரியும் வகையில் கலவன் பாடசாலைகள் ஊக்குவிப்பதற்கான முன் செயல் கொள்கையொன்று அரசிடமிருக்க வேண்டிய அவசியத்தை ஆணைக் குழு பரிந்துரைத்திருந்தது.

கல்வி அமைச்சரின் ஆலோசனையை கல்வி ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. கலவன் பாடசாலைகளின் அதிபர் மற்றும் உப அதிபர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாகாது என்று ஆணைக்குழு கருத்து தெரிவித் திருந்தது. இதற்கான முதல் முக்கியதிட்ட அடிப்படையில் ஒவ்வொரு மாகாணத்திலும் இரண்டு பாடசாலைகள் தெரிவுசெய்யப்படவேண்டும். மாணவர்கள் கூடிய அளவில் வகுப்புகளில் கலந்து செயற்படுவதாக இருக்க வேண்டும்.

குறிப்பாக ஆங்கிலம், இருமொழி வகுப்புகளில் இது அவசியம். அத்துடன் சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பாடசாலைக்குள் மாணவர்கள் தமக்கிடையேயான வித்தியாசங்களை மதிக்கும்படியாக கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

**காணித் தகராறுகள்**

நல்லிணக்க ஆணைக்குழுவின் இன்னொரு முக்கிய பரிந்துரை காணித் தகராறுகளைத் தீர்த்து வைப்பது தொடர்பானது. ஆள்கள் காணாமற் போயிருப்பது மற்றும் காணிகள் , வீடுகள் இழக்கப்பட்டமையும் பிணக்குடன் தொடர்புடைய பிரச்சினைகளாகும். அந்தக் காலப் பகுதியில் சகல சமூகங்களையும் இந்தப் பிரச்சினை பாதித்துள்ளது. இறுதிக் கட்டத்தில் குறிப்பாக வன்னியில் ஏறத்தாழ 2,84,000 ஆள்கள் இடம்பெயர்ந்துள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுவில் தோன்றிய எல்லா சமூகங்களைச் சேர்ந்தவர்களாலும் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினை காணிகள் தொடர்பான வையாகும். குறிப்பாக ஆணைக்குழு பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்ட பொழுது இது நடந்தது என்று ஆணைக் குழு தெரிவித்திருக்கிறது. மேலும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறிப்பாக இருப்பிடம் திரும்பும் உள்ளக இடம் பெயர்ந்தோர் விடயத்தில் சட்டபூர்வமான காணி உரிமைகளை உறுதிப்படுத்துவதானது இயல்பு நிலையை நிலை நிறுத்துவதிலும் நல்லிணக்கத்தை மேலோங்கச் செய் வதிலும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு பெறுவதாக விருக்கும் என்று ஆணைக் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் ஆலோசனையொன்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராய்வதற்காக அது இப்போது அமைச்சரவை உப குழுவொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. உப குழுவின் முன் வெளியான சில விடயங்கள் வருமாறு:-

- ♦ வடக்கு, கிழக்கில் ஏறத்தாழ 2,50,000 காணிப் பிரச்சினைகள் உடனடித் தீர்வு காணப்பட வேண்டியவையாக உள்ளன.
- ♦ வடக்கு, கிழக்கில் தற்போது பணிபுரியும் அதிகாரிகள் தமது அன்றாடப் பணிகளுடன் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கடங்களை எதிர்கொள்கிறார்கள்.
- ♦ காணிகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளை குறிப்பிட்ட காலத்துக்குள் கையாள்வதற்கு நல்ல தமிழ் அறிவுள்ள அதிகாரிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இப்பொழுது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை கடமையில் அமர்த்துவது தொடர்பாக அமைச்சரவை தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. 67 வயதுக்கு மேற்பட்ட ஓய்வு பெற்ற அதிகாரிகள்கூட பணியாற்றக்கூடிய நிலையில் இருந்தால் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்துக்கு நியமனம் வழங்கப்படலாம்.

"நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தி வருகிறோம்" என்பதை ஐ.நா.மனித உரிமைகள் சபையில் எடுத்துக் கூறும் நிலையில் இருப்பதற்கு அரசு விரும்புகின்றது. இருந்த போதிலும் செயற்படுத்தப்படாமல் இருக்கும் சில விடயங்கள் குறித்து மாநாட்டில் கேள்வி எழுப்பப்படலாம்.

போர்க் குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணையொன்று மார்ச்சுக்கு முன் நடத்தப்படாவிட்டால் தமது அரசு சர்வதேச விசாரணையொன்றுக்கு அழுத்தம் கொடுக்கும் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் காலக்கெடு விதித்துவிட்டுச்சென்றுள்ளார். அந்தநாட்டு வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேகும் கூட ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவது சாத்தியமே என்று கோடி காட்டியிருந்தார்.



# நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுங்கள்

## நல்ல குழந்தைகள் உருவாகுவார்கள்

ஒவ்வொரு பெற்றோருமே, தங்களின் குழந்தை, நல்ல நாகரிகமான மற்றும் நயமான பண்போடு, பணிவுள்ள ஒரு மனிதனாக வளர வேண்டும் என்றே விரும்புவர். இந்தப் பண்புகளை குழந்தைகளுக்கு கற்பிப்பது அவசியமானது என்ற போதிலும், அது கடினமான ஒன்றாகும்.

மகதி

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது, தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பது போன்ற பழமொழிகள் சாதாரணமானவை அல்ல. எனவே, குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை இளம் வயதிலேயே கற்றுக் கொடுக்கத் தொடங்க வேண்டும். அப்போதுதான் பெற்றோரின் பணி எளிதாக இருக்கும் மற்றும் நல்ல வெற்றியும் கிடைக்கும்.

தற்போதைய உலகமய சூழலில், தாங்கள் பிள்ளைகளின் பண்புநலன் மேம்பாடு குறித்து, பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுகிறார்கள் என்று சில தரப்பார் கூறுகின்றனர். திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் சமூகவலைதளங்கள் ஆகியவற்றின் தாக்கத்தினால், குழந்தைகள் எதிர்மறையாக அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவலையும் பெற்றோர்களுக்கு உள்ளது.

குழந்தைகளுக்கு சிறந்த பண்புநலன்களை கற்றுத்தரும் கடமையானது, பெற்றோருக்கு மட்டுமே உரியது அல்ல. அதில், ஆசிரியர்களுக்கும் மிகுந்த பங்குண்டு என்பதை மறத்தலாகாது. ஆசிரியர்களை, பல குழந்தைகள் தங்களின் முன்மாதிரி ஆளுமைகளாக எடுத்துக் கொள்கின்றன.

ஒரு நான்கு வயது குழந்தை, தனது தாயை விட, தனது ஆசிரியையின் செயல்களையே அதிகம் பின்பற்றுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில சமயங்களில், வீட்டு சூழலைவிட, வெளிச் சூழலில் நல்ல பண்புகள் கற்பிக்கப்படுகையில், குழந்தைகள் நன்கு கற்றுக்கொள்கின்றன.

### பண்பு நலன்களை எவ்வாறு கற்றுக் கொடுப்பது?

தாங்கள், தங்களின் குழந்தைக்கு கற்றுக்கொடுக்க விரும்பும் பண்புகளை, முதலில் பெற்றோர்கள் பயிற்சி செய்து கொள்ளவேண்டும். ஏனெனில், உங்களைப் பார்த்துத்தான் உங்கள் குழந்தை பின்பற்ற ஆரம்பிக்கும். உதாரணமாக, எதையாவது கேட்கும்போது, தயவு செய்து (ப்ளீஸ்) என்ற வார்த்தையைப் பயன்டுத்துவதையும், எதையாவது பெறும் போது, நன்றி (தாங்க்யூ ) என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதையும் உங்கள் குழந்தைக்குச் சொல்லித்தர விரும்பினால், அந்தப் பண்புகளை முதலில் நீங்கள் தவறாமல் பின்பற்றத் தொடங்க வேண்டும்.

நல்ல பண்புக்கூறுகள் என்பது, நடத்தைமுறை, நாகரிகம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றோடு தொடர்புடையது. இப்பண்புகளை, மாதிரிகள், வழிகாட்டுதல்கள், உதவுதல் மற்றும் பாராட்டுதல் உள்ளிட்ட பல்வேறான வழிமுறைகளின் மூலமாக உங்களின் குழந்தைக்கு கற்றுத் தரலாம்.

ஒரு குழந்தை தனது நடத்தையில் சற்று வழுக்கினால், அதை நாம் கடுமையாக கையாளக் கூடாது. நம் குழந்தை ஒரு பொது இடத்தில் கோபமாகவோ அல்லது வெறுப்பாகவோ நடந்து கொண்டு, அதன்மூலம் மற்றவர்கள் நம்மைக் கவனிக்கும் சூழல் ஏற்பட்டால், அந்த நேரத்தில், குழந்தை எதற்காக அவ்வாறு நடந்துகொண்டது என்பதை உணர்ந்து, குழந்தையை ஆறுதல்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமே தவிர, மற்றவர்கள் நம்மை ஒரு மாதிரி நினைத்து விடுவார்களே என்று எண்ணி, குழந்தையை தண்டிக்கக் கூடாது. குழந்தை ஒரு சிறப்பான செயலை மேற்கொண்டால், அதை நல்ல முறையில் பாராட்ட வேண்டும்.

### குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொடுக்கத் தொடங்குங்கள்

உங்களின் பிள்ளை, கைக் குழந்தையாக இருக்கும்போதே, அதற்கு நற்பண்புகளை கற்றுக்கொடுக்கும் பணியைத்தொடங்கிவிடலாம். உதாரணமாக, ஒருவரின் முகத்தையோ அல்லது முடியையோ பற்றி இழுக்கும்படி குழந்தைக்கு சொல்லித் தருவதற்கு பதில், குழந்தையிடம் சாதுவாகவும், மென்மையாகவும் பேசி அல்லது குழந்தையின் முன்பாக பிறரிடம் அவ்வாறு பேசினால், அந்தப் பண்பை குழந்தையும் கற்றுக்கொள்ளும்.



> குழந்தைகளுக்கு சிறந்த பண்பு நலன்களை கற்றுத் தரும் கடமையானது, பெற்றோர்களுக்கு மட்டுமே உரியது அல்ல. அதில், ஆசிரியர்களுக்கும் மிகுந்த பங்குண்டு என்பதை மறத்தலாகாது.

# பரீட்சை பற்றிய பயம் வேண்டாம்

ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் வந்தாலே மாணவர்களிடையே பரபரப்புத்தான், பொதுவாகவே இந்தக் காலம் பாடசாலைகளில் வருட இறுதிப் பரீட்சை காலமாக இருப்பதுடன், ஜி. சீ.ஈ சாதாரண தர மாணவர்களின் இறுதிப் பரீட்சைக் காலமாகவும் இருக்கிறது. அநேக மாணவர்களுக்கு இந்தக் காலத்தில் பரீட்சைக் காய்ச்சல் தொடங்கிவிடும்

சாரங்கி

என்னதான் வகுப்புகளில் ஆசிரியர்கள் பரீட்சை பற்றிய பயத்தைப் போக்க எண்ணற்ற பகுதிப் பரீட்சைகள், மீள்பார்வைப் பரீட்சைகள், மாதிரிப் பொதுப் பரீட்சை என்று நடத்தினாலும், நேரில் வகுப்புகளில் ஆலோசனைகள் வழங்கினாலும் பரீட்சை பற்றிய பயம் மாணவர்களிடத்தில் தொற்றிக் கொண்டுதான் இருக்கும்.

அது மட்டுமா...? பெற்றோர்கள், பத்திரிகைகள், தொண்டு நிறுவனங்கள் எல்லாம் ஒரு நாள் கூட்டம் போட்டு பரீட்சை பற்றிய அறிவுறுத்தல்களைச் சொன்னாலும் பரீடசை பற்றிய பயம் மாணவர்களை விட்டபாடில்லை! இது ஏன் என்பதற்குச் சரியான ஒரே காரணம் உளவியல் சார்ந்த எண்ணமாகத்தான் இருக்க முடியும். இந்தப் பயம் ஏறக்குறைய 90 சதவீத மாணவர்களிடம் உண்டு என்பதுதான் நிஜம்!

### இதற்குத் தீர்வு என்ன ?

மாணவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டியது பொதுப் பரீட்சை என்பது வழக்கமான பரீட்சைகளில் ஒன்றுதான் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதில் தெளிவு பெற்றுவிட்டால் பாதிப்பயம் போய்விடும். பரீட்சைக்கான நேர அட்டவணை முன்னதாகவே அறிவிக்கப்பட்டுவிடும். இதன் பிறகு தான் மாணவர்கள் சரியாகத் திட்டமிட வேண்டும்.

ஏற்கெனவே படித்துவிட்ட பாடங்களின் குறிப்புகளைப் பரீட்சைக் கால அட்டவணைப்படி வரிசைப்படுத்த வேண்டும். இதில் கடைசியாக வருகின்ற பாடப் பிரிவுகளில் இருந்து இரண்டிரண்டு நாள்கள் என்று கணக்கிட்டு அதிலிருந்து படிக்கத் தொடங்க வேண்டும். அதாவது கடைசியாக வரும் பாடங்களை முதலில் தொடங்கி பின்னோக்கி, பாடப் பிரிவுகளைப் படிக்க வேண்டும்.

பாடங்களின் குறிப்புகளைத்தான் படிக்க வேண்டுமே தவிர ஒவ்வொரு பாடத்தையும் ஆழ்ந்து படிக்கக்கூடாது. குறிப்புகளைப் பார்த்தாலே அந்தப் பதிவின் முழு விவரமும் புரிந்து விடும்.

பரீட்சைக்கு முன்பு மாணவர்கள் மூலமாகவோ அல்லது வெளி நபர்கள் மூலமாகவோ வரும் ஏந்த வதந்திகளையும் நம்பக் கூடாது. ஒரு மாணவன் வந்து "டேய்.. இந்தக் கேள்வி வருகிறது.. அதற்குப் பதில் தெரியுமா?" என்றுகுழப்பியும்மிரட்டியும் விடுவான். இதைக் கட்டாயம் அலட்சியம் செய்ய வேண்டும். பரீட்சைக்கு முதல்நாள் இரவு 11 மணிக்கெல்லாம் படுத்துத் தூங்கிவிட வேண்டும்.

ஆனால், விடியற்காலை 5 மணிக்கு எழுந்து அன்றைய பாடத்தின் குறிப்புகளைப் பார்வையிட வேண்டும். பின்னர், பரீட்சைக்குத் தேவையான அனுமதி அட்டை , பேனா, பென்சில், போன்றபொருள்களைஎடுத்துக்கொண்டு காலை உணவையும் முடித்துவிட்டு பெற்றோரின் ஆசியைப் பெற்றும், ஒரு நிமிடம் கடவுளை நினைத்து வழிபட்டும் பரீட்சை நடைபெறும் இடத்துக்கு அரை மணி நேரம் முன்னதாகவேசென்றுவிட வேண்டும். நான் படித்திருக்கிறேன், எனக்கு பதில் தெரியும், எழுதி விடுவேன் என்ற எண்ணத்துடன் பரீட்சை மண்டபத்துக்குச் செல்லவேண்டும்.

வினாத்தாளைப் பெற்ற பின்பு கேள்விகளை ஒருமுறைக்கு இருமுறை நன்றாகப் படித்து, கேள்வியின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வேகத்தில் கேள்வியைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டால் எழுதும் பதிலும் தவறாகிவிடும்.

பின்பு நிதானமாகத் தெரிந்த கேள்விகளுக்கு முதல் பதில் எழுத வேண்டும். கடைசியில் தெரியாத கேள்விகள் என்று கட்டாயம் இருக்கும். அதை ஏதாவது ஒரு அனுமானம் கொண்டு பதிலை எழுதிவிட வேண் டுமே தவிர அதைத் தொடாமல் விடக்கூடாது.

### பரீட்சை எழுதியபின் கவனிக்க வேண்டியவை

மிக முக்கியமானது பரீட்சை முடிந்தவுடன் , பக்க எண், கேள்வி எண் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று திருப்பிப் பார்த்து வரிசைப் படுத்திக் கட்டிக் கொடுக்க வேண்டும். இதை மீண்டும் ஒரு முறை சரிபார்த்துக் கொடுக்க வேண்டும். பரீட்சை முடிந்தவுடன் அதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் அடுத்த பரீட்சைக்கான ஆயத்தத்தில் ஈடுபட வேண்டும்.

எல்லாவற்றையும்விட இரண்டு முக்கிய விடயங்களை மாணவர்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று தங்களின் உடல் நலம் காக்கப்படுதல். இரண்டாவது தேர்வில் வெறும் மதிப்பெண்கள் மட்டுமே தமது பிற்கால வாழ்க்கை என்று எண்ணக் கூடாது. நல்ல பெறுபேறு கிடைத்தால் உயர் கல்வி . இல்லையெனில், தொழில் சார்ந்த ஆயிரம் படிப்புகள் இருக்கின்றன.

பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு இதை எடுத்துச் சொல்ல வேண்டும். மாறாக மதிப்பெண்ணைக் குறி வைத்து தொந்தரவு செய்யக்கூடாது. வாழ வழி ஆயிரம் உள்ளது. மாணவர்களுக்குத் தேவை பெறுபேறுகள் மட்டுமே அல்ல. கடுமையான உழைப்பும், முயற்சியுமே வாழ்க்கையில் வெற்றியைப் பெற்றுத் தரும். ஆகவே பரீட்சைப் பயம் வேண்டாம். தன்னம்பிக்கையை மட்டும் இழக்க வேண்டாம்!

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**இடபம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**கடகம்** : வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**சிங்கம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**கன்னி:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**நாளை**

கார்த்திகை-17 செவ்வாய்க்கிழமை 03.12.2013
திதி: அமாவாசை கா.06.33 வரை
நட்சத்திரம்: அனுசம் கா.06.26 வரை
சுபநேரம்: 10.45 - 12.15 வரை
இராகுகாலம்: 03.15 - 04.45 வரை

**துலாம்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அடுத்தவர்களை குறைகூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.

**விருச்சிகம்:** திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் ஏற்படும்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**மகரம்:** அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள். வெளியூர் பயணங் களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத் தில் மன உளைச்சல் விலகும்.

**மீனம்:** உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவ்ரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 2 | | | |
| | 1 | | | | | | | 5 |
| | 7 | 5 | 9 | 8 | 3 | | 1 | 6 |
| | | | 4 | | 8 | | 2 | 3 |
| 8 | 9 | | 3 | | 1 | | 6 | 7 |
| 3 | 2 | | 6 | | 5 | | | |
| 5 | 4 | | 1 | 6 | 9 | 3 | 7 | |
| 1 | | | | | | | 4 | |
| | | | 8 | | | | | 1 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 2 | 5 | 9 | 8 | 7 | 6 | 1 | 4 | 3 |
| 7 | 3 | 6 | 1 | 4 | 9 | 2 | 5 | 8 |
| 8 | 1 | 2 | 9 | 6 | 7 | 5 | 3 | 4 |
| 3 | 7 | 5 | 4 | 8 | 2 | 9 | 6 | 1 |
| 6 | 9 | 4 | 3 | 1 | 5 | 7 | 8 | 2 |
| 5 | 2 | 7 | 6 | 3 | 8 | 4 | 1 | 9 |
| 1 | 6 | 3 | 2 | 9 | 4 | 8 | 7 | 5 |
| 9 | 4 | 8 | 7 | 5 | 1 | 3 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர்

# திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்

# 62 ஆவது அகவையில்...




இவ்வுலகில் பல வகையான மனிதர்கள் பிறக்கின்றார்கள். அதில் தான் தன் குடும்பம் என்று வாழ்கின்றவர்களே அதிகமானவர்கள். இதற்கு மாறான சிந்தனை ஓட்டத்தில் தியாகி அறக்கொடை நிலையம் என்ற நிறுவனத்தைத் தனது முற்றுமுழுதான நிதிப்பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கி தன் குடும்பத்தைப் போலவே ஏனைய மக்களையும் வாழ வைக்கவேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டு வரும், சகல மக்களாலும் அறியப்பட்ட திரு.வாமதேவா தியாகேந்திரன் இன்று (02.12.2013) திங்கட்கிழமை 62ஆவது அகவையைக் கொண்டாடும் இந்நாளில் இவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

இந் நிறுவனத்தின் ஊடாக மனிதாபிமான அடிப்படையில் இன, மத, மொழிவேறுபாடின்றி இலங்கை முழுவதும் மாணவர்கள், புற்று நோயாளர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், நோயாளர்கள், முதியோர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிறுவர்கள், பெண்களுக்கெனப் பல்வேறு செயற்றிட்டங்கள் ஊடாக மாதாந்தம் பல இலட்சம் ரூபாக்களை தனது சொந்த உழைப்பில் உதவி செய்து வருகின்றமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அது மட்டுமன்றி அவர் கடந்த காலங்களில் செய்த அறப்பணிகளை சாதாரண வார்த்தைகளினாலோ அல்லது இப்பத்திரிகையின் ஒரிரு பக்கங்களிலோ எழுதிவிட முடியாது.

ஆதரவற்ற சிறுவர்கள் பலரைக் கண்டறிந்து அவர்கள் வாழ்வில் கல்வி அறிவு பெற்றிட சிறுவர் இல்லம் ஒன்றை அமைத்து அவர்கள் வாழ்வில் ஒளியமைத்துக் கொடுத்திருக்கின்றார். அத்துடன் அவர்களுக்கு ஒரு தந்தை போலிருந்து அவர்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றார்.

இன்று பல செல்வந்தர்கள் தமது பிறந்தநாள், மணிவிழா, பவளவிழா போன்ற நிகழ்வுகளைத் தமது குடும்பங்களுடன் வெகுவிமர்சையாகக் கொண்டாடும் இக்காலகட்டத்தில் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் தனது பிறந்த தினத்தன்று ஏழை மக்களுக்கு வாரி வழங்குவதன் மூலம் ஏழையின் சிரிப்பிலே மகிழ்ச்சியடைகின்றார். அது மட்டுமன்றி மற்றவர்களுக்கும் ஒரு முன் உதாரணமாகச் செயற்பட்டு வருகின்றார்.

தியாகி என்று அன்பாக அழைக்கப்படும் திரு. தியாகேந்திரன் அவர்கள் அறப்பணிகளில் மட்டும் சிறந்து விளங்காது தனது குடும்ப வாழ்க்கையிலும் சிறந்து விளங்குகின்றார்.

*"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்*
*தன் பிள்ளை தானாக வளரும்"*

என்னும் முதுமொழிக்கிணங்க இவருடைய மூன்று பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுஅந்நாட்டிலே உயர் தொழில் துறைகளில் தொழில் புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களை நிரந்தரமாக வறுமையில் இருந்து விடுவிப்பதற்குப் பல கோடி ரூபா செலவில் பல முதலீட்டு செயற்றிட்டங்களை உருவாக்கிப் பல இளைஞர், யுவதிகளுக்கு கவர்ச்சிகரமான வேதனங்களுடன் வேலைவாய்ப்பையும் வழங்கி வருகின்றார்.

*இப்படிப்பட்ட தர்மத்தின் தலைவனைப் பல காலம், பல்லாண்டு வாழ்க வாழ்க வென வாழ்த்தி நிற்கின்றோம்.*

**எஸ். ஆர். சோதிநாதன் (சட்ட ஆய்வாளர்)**

(சி.13884) (3.6.45)



# சமத்துவம் எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும்...?

அடுப்படியே உலகம் என்று பெண்களுக்காக வகுக்கப்பட்ட வாழ்க்கை முறை இன்று பல மாறுதல்களை அடைந்திருந்தாலும் அவர்கள் இன்னும் பயணிக்க வேண்டிய தூரங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. பெண்கள் ஒவ்வொரு துறையிலும் கால்பதித்துள்ளனர். அப்படியே கால்பதித்திருந்தாலும் அவர்கள் சமத்துவமாக மதிக்கப்படுகின்றார்களா? சுரண்டல்கள் என்பதும் இரண்டாந் தரமாக பார்க்கப்படும் அடிமட்ட சிந்தனைகளிலிருந்தும் பெண்கள் விடுபட்டுவிட்டார்களா? என்றால் அவை இன்னும் அடையப்படவில்லை என்பதே பெண்கள் தரப்பு நியாயப்பாடாக காணப்படுகின்றது. கல்வித்துறை முதல் அனைத்து துறைகளிலும் பெண்கள் உயர்ந்த இடத்தை அடைந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப் படும் அந்தஸ்து என்பதும் அவர்கள் சார்ந்த துறைகளில் எதிர் நோக்கும் சவால்கள் என்பதும் அளப்பரியன. இன்று பாடசாலை முதல் வைத்தியசாலை என அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான வன்முறைகள் அதிகரித்தே காணப்படுகின்றன. பெண்கள் பாதுகாப்பாற்றவர்களாகவும் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாகவும் காணப்படும் நிலை இன்று அதிகரித்துவிட்டது. பெண்களின் துன்புறுத்தல்களுக்கு காரணகர்த்தாக்களாகவும் அதே நேரத்தில் பாதுகாவலர்களாகவும் ஆண்கள் இருப்பது எமது சமூகத்தின் இயலாமையை எடுத்துக் காட்டுகின்றது. ஆண், பெண் சமத்துவம் என்பது எமது சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் என்றால் பெண் வன் முறை, பெண் பாதுகாப்பு, இரண்டாம் தர நிலை என்ற பதங்களுக்கான தேவை இன்று இருந்திருக்காது.

பெண் பாலியல் துஸ்பிரயோகம், கணவனைக் கொன்ற பெண் எனப் பல பத்திரிகைகளின் தலையங்கங்களையும் சினிமா பக்கங்களும் விளம்பர பக்கங்களையும் பெண்களே இன்னும் அலங்கரித்துகொண்டு இருக்கின்றார்கள். எனவே வன்முறைகள் ஒழிய வேண்டுமென வெறுமனே கைகளை உயர்த்தும் நிலைமாற வேண்டும். சமூகத்தில் ஊடுருவிப் போயிருக்கும் பெண்ணடிமை என்ற ஆணிவேரை பறித் தெரிய வேண்டும். பிறக்கும் குழந்தைகளில் இருந்தே ஆண், பெண் சமத்துவம் என்பது விறுத்த வேண்டும்.

> வெறுமனே பெண்கள் எதிர்நோக்கும் வன்முறை களை மட்டும் கருத்தில்கொண்டு செயற்படாது பெண்களின் வளர்ச்சி சார்ந்த செயற்திட்டங்களில் இந்நிறுவனங்கள் அக் கறை செலுத்துமானால் பெண் சமத்து வத்தை இலகுவில் அடைந்துவிட லாம். பெண் அடிமை, பெண் பாரபட்சம், பெண் வன்முறை கள் என்பவை எந்தெந்த மட்டங்களிலிருந்து எழுகின்றன என்பதை அறிந்து அதற்கு முற்றுப்புள்ளியிட்டால் மட்டுமே பெண் சமத்துவமென்பது சாத்தியமானது

### ஆண், பெண் சமத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும்

பால், பால்நிலை தொடர்பான பாடங்கள் கல்வித் திட்டங்களில் இணைத்துக்கொள்ளப்படுவது இன்றியமையாத தேவையாக உள்ளது. ஒரு குழந்தை குடும்பத்திலிருந்து அடுத்தபடிக்கு காலடி எடுத்து வைப்பது என்றால் அது பாடசாலை பருவத்தில்தான். மாணவ பருவத்திலே ஆண், பெண் சமத்துவம் என்பது வலியுறுத்தப்படுமானால் அதுவே சமூக மாற்றத்திற்கு காரணமாக அமையும்.

பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அதுசார்ந்து செயற்படும் நிறுவனங்கள் சமூக மட்டத்தில் ஏற்படுத்துவதுமாக இருந்தால் அது சமத்துவத்திற்கு பங்களிப்புச் செய்யக் கூடியதாக காணப்படும். பெண் விழிப்புணர்வு செயற்பாடுகளில் வெறுமனே பெண்களை மட்டும் பங்குகொள்ளச் செய்யாது அது சார்ந்த விளக்கங்களை ஆண்களுக்கும் வழங்குவதற்கு முயலவேண்டும்.

சமூக, கலாசாரங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களிலும் பெண்களுக்கான சமபங்கு என்பது வலியுறுத்தப்பட வேண்டும். பாரபட்சம் என்ற நிலைப்பாடு இல்லாதொழிக்கப்பட வேண்டும். திருமண சட்டங்கள், சொத்துரிமை போன்ற பல சட்டங்களில் பெண்களுக்கு பாரபட்சம் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை மாற வேண்டும். பக்கச்சார்பற்றசம சந்தர்ப்பம் பெண்களுக்கு வலியுறுத்தப்படுவதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அரசியல், தலைமைத்துவம் சார்ந்த விழிப்புணர்வுகள் என்பது பெண்களுக்குத் தேவைப்படும் ஒன்றாக காணப்படுகின்றது. இதுசார்ந்த செயற்றிட்டங்களில் ஈடுபடுவதற்கு பெண்கள் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

■ கோகிலவாணி

# பிறரின் முடிவுக்கு கட்டுப்படாதீர்கள்...

நம் வாழ்வில் ஒரு சில நேரங்களில் பிறரின் அறிவுரைகளை நாட வேண்டி வரும். குறிப்பாக முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதும், பணி சார்ந்த தீர்மானங்கள் எடுக்கும் போதும் மற்றவர்களின் உதவி தேவைப்படும். ஆனால், ஒரு சிலர் நம்மை கட்டுக்குள் வைக்க தானாகவே அறிவுரைகளை வழங்குவார்கள்.

ஒரு சிலர் தன்னைச் சுற்றி இருப்பவர்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க விரும்புவார்கள் அல்லது தான் நினைக்கும் வழியில் செல்வதற்கான எல்லாவற்றையும் செய்வார்கள்.

இப்படிப்பட்டவர்களை நம்ப வைப்பது மற்றும் அவரோடு சேர்ந்து இருப்பது சிறிது கடினம்தான்.

இவர்கள் யாருடைய அறிவுரைகளையும் கேட்க மாட்டார்கள். இப்படிபபட்டவர்களை கட்டுப்படுத்த திறமையான நடவடிக்கைகளும் எண்ணங்களும் கொண்ட சிலரால் மட்டுமே முடியும். அவர்களின் ஆணவத்தையும், தேவைகளையும் புரிந்து கொண்டு, அவர்களின் போக்கில் செல்வது தான் அவர்களை கட்டுப்படுத்தும் ஒரே வழி.

### சமாளிக்க சிறந்த வழி

இப்படிப்பட்டவர்களோடு எப்பொழுதுமே வாக்குவாதம் செய்யாதீர்கள். அவர்களால் தனது தோல்வியை சந்திக்க முடியாது. அதனால், உங்கள் காரியத்தை சாதித்துக்கொள்ள அவர்கள் சொல்வது சரி என்று கூறிவிட்டு உங்கள் தேவையை கேளுங்கள்.

இதனால் அவர்களுக்கு தன்னை முக்கியமாக கருதுவ தற்கும் அவர்களின் வேலை யைத் தானே செய்வதற்கும் வழிவகுக்கும்.


இவர்கள் நம் வாழ்வில் நல்லதை செய்யாவிட்டாலும் தீர்வு எடுப்பதிலும் ஏற்பாடு செய்வதிலும் சிறந்தவர்கள். அதனால் அவர்களின் கெட்ட நடவடிக்கைகளை தவிர்த்து நல்லதையே எடுத்துக்கொள்ளுவோம்.



■ அனுஜன்

# தாய்தான் சாமியடா....





ஊரில சாமி கோயிலோ
ஏராளம்
சாமியை விஞ்சிட
என்தாய் மனசோ
தாராளம்..
தன்னை சுகமாக்கி
என்னை...
நெஞ்சில் சுமக்கிறாள்
தன் மடி தந்து
தூங்க வைத்து
என் பசி போக்குவாள்
நான் கலங்கிப் போனால்
கண் துடைப்பாள்
காயம் பட்டால்
வலியாவாள்..
கிடைத்ததை வைத்து
அடுப்பாக்குவாள்..
அடுத்தவர் போல
ஆற்றுப் படுத்துவாள்
என்னை...
பட்டி வைத்து
பசு மாடு வளர்த்து
பால் கறந்து விற்று
படிக்க வைத்திடுவாள்
பட்ட மரத்திலும்..
பால் சுரக்கும்- அவள்
தொட்ட மண்ணும்
பொன்னாய் விளையும்
என் ஊரும்..
என் தாயும்..
உள்ளவரை -நான்
அகதியில்லை..
சாமி சாமி என்று
ஏதுமில்லையடா..
மனிதா
கொண்ட மனதில்
கோயில் கொள்ளும்
பெற்றதாய் தான்..
சாமியடா..

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## அன்பின் சிகரம் எம் தந்தையவர்




தனக்கென வாழும் இவ்வுலகில்
எமக்காய் வாழும் எம் தந்தையே!
இன்னல்கள் சுமந்து எம்மை வளர்க்கும்
எம் அன்புத் தந்தை தியாகியே!
உங்கள் பணி சிறக்கவும்,
பல்லாண்டு காலம் வாழவும்,
எல்லாம் வல்ல வைரவப்
பெருமானை வேண்டி
வாழ்த்துக்களை மலர்களாகத் தூவி
வாழ்த்துகின்றோம்.

தங்கள் அரவணைப்பில்
இல்லக் குழந்தைகள்,
சிசிர் சிறுவர் இல்லம்
595, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
**SRI LANKA CEMENT CORPORATION**
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
**KANKESAN CEMENT WORKS**
காங்கேசன்துறை
**KANKESANTHURAI**

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2014
## REGISTRATION OF SUPPLIERS - 2014

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறையில் உள்ள கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் அலுவலகப் பகுதிக்கும் 2014 ஆம் ஆண்டுக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக்கூடிய வழங்குநர்களைப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள்கள்**

01. உடைந்த சல்லிக் கல் (Crushed Metal) ½", ¾"
02. சிமெந்து (Cement)
03. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
04. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
05. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
06. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
07. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
08. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab & Tipper வாகனத்திற்குரியவை)
09. வாகன தேவைகளுக்கான எரிபொருள்கள் (Vehicle Fuel)
10. ரயர்களும், ரியூப்களும் (Tyre &Tubes)
11. மோட்டார் வாகன பற்றறிகள் (Batteries)
12. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் (Spare Parts)
13. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary & Office Requisites)
14. அலுவலகத் தளபாடங்கள் (Furnitures)
15. கணினிப் பொருள்களும் உதிரிப் பாகங்களும் (Computer Spare Parts)

**சேவைகள்**

01. வாகனம் பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும் (Repairs & Servicing)
02. கணினி பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும் (Repairs & Servicing)

மேற் கூறப்பட்ட பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் **25.12.2013** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம் வழங்கப்படக் கூடிய பொருள்கள், சேவைகள் விவரம் கொண்ட விண்ணப்பத்தினைத் தங்களுடைய கடிதத் தலைப்பில் (Letter Head) அல்லது கடிதத்தில் தங்களது றப்பர் முத்திரையிட்டு (Rubber Stamp) பின்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**விநியோக உத்தியோகத்தர்**
**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,**
**காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை,**
**காங்கேசன்துறை.**

(சி.13880) (45.6.3)

---

### பரிசளிப்பு விழா

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ். ஜெயானந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிவலய முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் செ.அ.ஸ்ரீகரன் கலந்து கொள்வார். திருமதி ஸ்ரீகரன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ந-8)

### ஆவணங்கள் கண்டெடுப்பு

வட்டக்கச்சி கட்சன் வீதியைச் சேர்ந்த சிவசம்புவிநாயகவேல் என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட ஆவணங்களுடன் பேர்ஸ் மீசாலை ஐயா கடையடியில் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கண்டெடுக்கப்பட்டு நகர சபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவரை அலுவலகத்துக்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார். (ந-9)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பிரதேச
செயலகத்தில் அபிவிருத்தி
உதவியாளராகக் கடமையாற்றி
இலங்கை கணக்காளர்
சேவைப் போட்டிப் பரீட்சையில்
சித்தியடைந்து கிளிநொச்சி மாவட்ட,
பூநகரி பிரதேச செயலக
கணக்காளராக
நியமனம் பெற்றுள்ள

**பேரின்பநாயகம்**
**பிறேமசந்திரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று
உயர்ந்திட மனதார வாழ்த்துகின்றோம்

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்
**ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்,**
**வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.**

(சி/14213)(45.6.3)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையிலான
தேசிய மட்ட தடகளப் போட்டிகளில்
குண்டெறிதல், தட்டெறிதல்
ஆகிய போட்டிகளில்
வடமாகாணத்திலே
இரண்டு தங்கப் பதக்கங்களைப்
பெற்றுக் கௌரவ
எமது பிரதேச செயலக விளையாட்டு
உத்தியோகத்தர்
செல்வி **இரத்தினசிங்கம் அகலியா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் பல உயரிய விருதுகளைப் பெற்று
சாதனை படைத்து உயர்ந்திட
மனதார வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு. கோப்பாய்.

பிரதேச செயலரும்,
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

(சி/14212) (7.6.3)

---

## யா/வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்




நி.மாறன் - 163 அ.ஆன்மிதுசா - 142
மா.அன்றன்நிமல்ராஜ் - 132 யோ.மேரிஅனுசியா - 101
வி.கிறிஸ்ரின்ஜோகிதன் - 173 லா.அலன்சியா - 147
அ.மேரிஅனிற்றா - 141 ம.மரியதர்சினி - 135
வி.யாழினி - 118 யோ.மிதுராஜ் - 114

கல்வி ஆண்டு 2012, 2013ல் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(40844) (7.6.3)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி ஜெயமணி சற்குணபாலன்

சேவை விவரம்

| | |
|---|---|
| 03.06.1977-30.06.1982 | கே/சாந்தமரியாள் தமிழ் வித்தியாலயம் |
| 01.07.1982-31.03.1989 | வ/நெளுக்குளம் G.T.M.S |
| 01.04.1989-30.09.1989 | யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தி. |
| 01.10.1989-இன்றுவரை | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் |

ஆளுமையின் திருவுருவாய் அறிவுநிறை ஆசானாய்
வாழுகின்ற மக்களுக்கு வழிகாட்டும் பெருந்தகையாய்
புத்தகப் போட்டிக்கு தேசியம் வரை சென்றிலங்கு
வித்தகியை வாழ்த்திடுவோம் வெற்றி பெற்று வாழ்கவென

அறுபதிலும் துடிப்புடனே அருஞ்சேவை யாற்றுகின்ற
திறனுடைய எம் ஆசான் ஜெயமணி அம்மாவையின்று
கடமைநாள் நிறைவுற்றும் கடமையாற்றும் நாயகியை
திடமுடனே பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,**
**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.**

---

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

**நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு!**

➡ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
➡ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள். அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

**11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்**

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும் **0770569642**




(சி.13894) (6.3)



3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 30,கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
(HNP வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS

# தமிழ் பேசும் இளம் சமுதாயத்தை மேம்படுத்த நாம் தயார் நிலையில்

## வர்ண இரவு நிகழ்வில் முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

"வடமாகாண சபை தமிழ் பேசும் மக்களின் சபை, தமிழ் பேசும் இளம் சமுதாயத்தை மேம்படுத்த நாம் தயாராக இருக்கிறோம். எம்மிடம் திறமையுள்ள அளவுக்கு வாய்ப்புக்கள் குறைவு. எனவே வாய்ப்பைப் பெற எல்லோரது ஒத் துழைப் பும் அவசியம்" என்கிறார் வட மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடமாகாணத்தின் நான்கா வது வர்ண இரவு விழா கடந்த வியாழக்கிழமை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில் ;

"வெற்றி, தோல்வியில் மனம் பேதலித்துப் போய்விடக் கூடாது. வெற்றி- தோல்விகள் எமக்குரியவை அல்ல. அவை இறைவனின் பாற்பட்டது என்று பகவத்கீதை கூறுகின்றது. இருப்பினும் வெற்றி, தோல்வியை தமக்குரியவாறு மாற்றவும் சிலர் விளைகிறார்கள்.

எமது இளைய சமுதாயம் போரால் பாதிக்கப்பட்டு பல போர்த்துறை பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் பலர் விளையாட்டுத் துறையில் சர்வதேச, தேசிய மட்டத்தில் பிரகாசிக்க சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்பட்டன. இனிமேலும் அப்படிப்பட்ட ஒரு நிலை நீடிக்கலாகாது.

மத்திய அரசு தன்னாலான உதவிகளை தந்துதவ முன் வந்துள்ள நிலையில் வட மாகாண சபையின் ஆதிக் கத்தின் கீழான எமது மாணவ சமுதாயம் அதனை ஏற்று முன்னேற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல் எம்மை இதுவரை காலமும் பிரிவுபடுத்தி வந்துள்ளது. இன்றைய எமது கல்வி அமைச்சர் உயர் அரச அலுவலராக இருந்து .தற்போது மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். இதன் காரணமாக இரு தரப்பட்ட அவருடைய வழிநடத்தலின் கீழ் எமது மாணவ சமுதாயத்தை முன்னேற்றிச் செல்ல எமக்கொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. வடமாகாணத்துக்கு புகழைக் கொடுத்த வீர, வீராங்கனைகளை கௌரவிக்கவே இந்த வர்ண இரவு விழா கொண்டாடப்படுகின்றது.

60 வருடங்களுக்கு முன் அனுசரணை பற்றி நாம் சிந்திக்கவில்லை. கிடைத்த வளங்களைக் கொண்டு முன்னேறினோம். இன்று காலம் மாறிவிட்டது. எமது விளையாட்டுக்களுக்கு அனுசரணையாகக் கிடைக்க வேண்டியவற்றை எல்லோருமே எதிர்பார்க்கின்றனர்.

எனது கல்லூரிக் காலத்தில் சுய பயிற்சியால் வீரர்கள் தம்மை மேம்படுத்தினர். ஆனால் தற்போது குழந்தைப் பருவத்திலேயே கிரிக்கெட் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புகின்றனர் பெற்றோர். அவர்களுக்கு ஒரே மாதிரியான ஆனால் விஞ்ஞான பூர்வமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இன்று எல்லாத் துறைகளும் பணத்தைச் சார்ந்தே விருத்தி அடைகின்றன. பண வசதி அற்ற மாணவர்களுக்கு உதவதனிநபர்களும் அரசும் முன்வரவேண்டும். மொத்தத்தில் எமது மாணவ சமுதாயம் விளையாட்டில் சாதிக்க நாம் ஆவன செய்ய வேண்டும் - என்றார்.

வர்ண இரவு நிகழ்வில் வட மாகாண சபை அவைத் தலை வர் சி.வீ.கே.சிவஞானம், அமைச்சர்கள் க.குருகுலராசா, பொ.ஐங்கரநேசன், ஆளுநரின் செயலாளர் என்.இளங்கோவன், வட மாகாண சபை உறுப்பினர்கள், கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-10-20-23)

**இது புத்தம் புதிது**

**உங்கள் கனடா கனவு**
**சட்ட ரீதியாக நிறைவேற**
**கையிலுள்ள காசே போதும்**

படிக்க உழைக்க விரைவான ஆலோசனை
(முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் இரண்டாம் தடவை இலவசமாக மேற்படி ஆலோசனை பெறலாம். நிபந்தனைகளிற்கமைவாக)

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175 பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம் 021 2219016



**உடனடி வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையமாகக் கொண்டு 2006 ஆம் ஆண்டு முதல் இயங்கும் Morning Star Trading and Controcting கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

தொழில்
1) மேசன்
2) சட்றிங் காப்பென்ரர்
3) வெல்டர்
4) ஸ்தில் திஸ்ரார்
5) எலக்ரீசியன்ஸ்
6) பிளம்பர்
7) ஏ.சி ரெக்னீசியன்

மேலதிக வேலை வாய்ப்புக்களும் உண்டு உணவு தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும் இரண்டு வருட ஒப்பந்தம்.
நேர்முகப் பரீட்சை புதன்கிழமை 04.12.2013 அன்று காலை 8.00 - 3.00 மணி வரை யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.
சம்பளம் தகுதி அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 9119075

**துயர் பகிர்கின்றோம்**



தேசிய கல்வி நிறுவக யாழ். மத்திய கல்லூரி பிராந்திய நிலைய கல்விமாணி பட்ட கற்கை நெறி விரிவுரையாளர் திரு. இ. நித்தியானந்தன் அவர்களின் தாயார்

திருமதி **நாகேஸ்வரி இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறவுகளின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விமாணி பட்டகற்கைநெறி,
தேசிய கல்வி நிறுவகம் பிராந்திய நிலையம்,
யாழ். மத்திய கல்லூரி

இணைப்பாளர்,
விரிவுரையாளர்கள்

## வேம்பொடுகேணி சீ.சீ.த.கவுக்கு இரண்டு மாடி வகுப்பறை தொகுதி

பளை, டிசெ.2

பளை வேம்பொடுகேணி சீ.சீ. த.க. பாடசாலைக்கு 21 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடி வகுப்பறைத் தொகுதி நிர்மாணிக் கப்படவுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப் பட்ட இத்தாவில் பகுதியில் சுவிஸ் அபிவிருத்திக் கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் பாடசாலைக்கான கட்டடத் தொகுதியை அமைத் துக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்து ழைப்புக்குமான நிறுவனத் திட்ட முகாமையாளர் மார்ட் டீன், பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் அடிக்கற்களை நட்டு பணிகளை ஆரம்பித்தனர்.

பாடசாலை வகுப்புகள் தற்போது தற்காலிக கொட்டில்களில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

**THE JOURNEY TO BETHLEHEM**

Come and join
In the Singing of Carols
By
The Choires of Jaffna College
On
Wednesday 04 th December 2013
At 4.00 pm
In the Cathedral Vaddakoddai

You and your friends are cordially invited
Principal

**18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
15.11.1919

மறைவு
22.11.1995

**செல்லையா பொன்னுத்துரை**

காலம் யாவும் உங்கள் நாமம்
கலையா தெங்கள் மனம் வாழும்!
ஞாலம் நாளும் உங்கள் சேவை
நாங்கள் போற்றி வாழ்வோமே

இல. 10 பாரதி லேன்
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

**நீங்காத நினைவுகளில் மூன்றாம் ஆண்டு**

தோற்றம்
1944
★
02
★
14



மறைவு
2010
★
12
★
05

அமரர் **பொன்னையா பாலசிங்கம்**

திதி : அமாவாசை

ஆண்டு மூன்று அகன்றிட்டவேளை
இன்றென எண்ணிடும் வேளையில்
நெஞ்சம் கனக்கிறது
நிகழ்வுகள் தைக்கிறது
ஆண்டவன் அடியில்
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

பத்தமேனி அச்சுவேலி.

குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

**பொன்னுத்துரை முத்தையா**

(இளைப்பாறிய ஆசிரியர் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.)



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை முத்தையா (29.11.2013) கொழும்பில் இறைவனடி எய்தினார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை பவளத்தின் அன்புக் கணவரும் மேனகா (கொழும்பு), மனோஜா (சுவிஸ்லாந்து), மஞ்சுளா (லண்டன்), ஸ்ரீகரன் (லண்டன்), மனோகரி (ஆஸ்தி ரேலியா), ஆகியோரின் அன்புத்தந்தையும் மகேந்திரன், சிவசற் குணநாதன், பிரியா, ஸ்ரீகரி ஆகியோரின் அன்புமாமனும் அஜந்த், விக்னன், சாம்பவி, திபீகா, சாயிரா ஆகியோரின் அன்பு பாட்ட னாரும் பூபாலசிங்கம், செல்வநாதன் காலஞ்சென்ற பவளம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (02.12.2013) திங்கட்கிழமை பார்வைக்காக மு.ப. 11.00 மணியிலிருந்து மாலை 6 மணிவரை வைக்கப்பட்டு நாளை (03.12.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு தெஹி வளை கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, 33 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு.
T.P : 011 - 2507941

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# ஈராண்டு நினைவலைகள்

தோற்றம் 27.09.1958

மறைவு 24.11.2011



## கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரராசா

(ஆசிரியர்)

திதி : அமாவாசை (02.12.2013)

உயிரோடு உறவுதந்து பிரியாத பாசம் தந்த
பண்பான குடும்பத் தலைவனே!
பத்து! என நீர் அழைக்கும் அன்பு
வார்த்தை இதயத்தில் இன்றும்
ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது
காலனவன் உம்மைக் கவர்ந்து
சென்று ஈராண்டுகள் ஆனதுவோ!
இறைவனடியில் உம் ஆத்மா
சாந்திபெற அல்லும்பகலும்
பிரார்த்திக்கின்றேன்.

என்றும் நீங்கா நினைவுடன்.
அன்பு மனைவி,
குடும்பத்தினர்.

மாரீசன்கூடல்,
இளவாலை. (40759)(7.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் தம்பையா சண்முகநாதன்

(துணுக்காய் கிராம அலுவலர் தரம் - 1)

தோற்றம் 27.09.1954

மறைவு 13.12.2012



கருணைக் கடலாய்
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
ஊர் போற்றும் உத்தமராய்
பண்புள்ளம் கொண்டு வாழ்ந்தீர்களே!
காவிய நாயகனே உமையிழந்து
இப்பாரினிலே தவிக்கின்றோம்
யாருண்டு எமக்கினி
உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல. 464, திருநகர்,
யோகபுரம், மல்லாவி. (F/14216)(7.6.3)

குடும்பத்தினர்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

## பூதத்தம்பி சந்திரமௌலீசன்

(முன்னாள் ஊழியர்- சாவகச்சேரி நீதிமன்றம்)

திதி: 02.12.2013

தோற்றம் 21.12.1944

மறைவு 12.12.2004



ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் ஆறிடுமோ -எம் துயரம்
நினைவுகள் வந்து கனவுகள் ஆகின்றன அப்பா
பாசத்தைக் காட்டி நேசத்தை வளர்த்தீர்கள்
-கல்வியைக் காட்டி
அறிவை வளர்த்தீர்கள் அப்பா எம் உள்ளத்தை உருக்க
உங்கள் உயிரைப் பறித்து விட்டான்
விதி செய்த சதி அப்பா எத்தனை ஆண்டுகள்
மறைந்தாலும் மறப்போமா அன்புத் தெய்வத்தை
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நினைவலைகள்

14ஆம் ஆண்டு

தோற்றம் 27.04.1995 — மறைவு 22.11.1999



2ஆம் ஆண்டு

தோற்றம் 13.08.1956 — மறைவு 24.11.2011



திதி : 02.12.2013

## அமரர் தேவராசா நிவேதன்

## அமரர் மாணிக்கம் தேவராசா

எங்கள் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்த அன்புத் தெய்வங்களே!
உங்கள் நினைவோடு எந்நாளும் நொந்து வெந்து தவிக்கின்றோம்
எங்கும் உள்ளத்தோடு ஆத்மா சாந்திபெ
இறைவனை வேண்டுகின்றோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர். (40608)(7.6.3)

# 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 12.08.1945

மறைவு 02.11.2013

## கந்தர் பழனி

02.11.2013 இல் இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் கந்தர் பழனி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், மாவட்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், நீதிமன்ற உத்தி யோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.12.2013) திங்கட்கிழமை மீசாலை மேற்கில் உள்ள எமது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் சமுகம் தந்து அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (40761)(10.6)

குடும்பத்தினர்
மகன்:P. குகனேஸ்வரன் (சட்டத்தரணி)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16.01.1939

மறைவு 02.12.2012

## சண்முகம் இராசரெட்ணம்

(சுபா பான்சி உரிமையாளரின் தந்தை)



"அஞ்சாதே நான் உன் பெயரைச் சொல்லி
அழைத்தேன் நீ எனக்கு உரியவன்"

ஆண்டு ஒன்று ஆனதையா ஆறவில்லை உங்கள் பிரிவுத்துயர்
நீண்ட தூரம் சென்றுவிட்டீர்கள் நீங்கவில்லை உங்கள் நினைவு
பாரினிலே எம்மை உயர்த்திப் பரிதவிக்க விட்டுவிட்டு
சென்றுவிட்டீர்கள் விண்ணகம் தொட்டு
நீங்கவில்லை உங்கள் நினைவு.

இன்று (02.12.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி. (33022)(7.6.3)

குடும்பத்தினர்.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சோளங்கன் கரணவாய்மேற்கு கரவெட்டியைச்

## அமரர் கந்தசாமிப்பிள்ளை இராசரத்தினம்

(முன்னாள் ஊழியர், ஊறணி வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை)



மலர்வு 08.08.1932

உதிர்வு 09.12.2007

வெள்ளைநிற பூவரம் திட்டியும் வீரம் நிறைந்த மண்ணும்
வல்லைவெளி தாண்டிவரும் வேலவனின் கோயில் மணியும்
எம்வாசல் வந்து உங்களின் முகம்காட்டிச் செல்கின்றன
வெள்ளை நிறப்பூவாக எங்கள் உள்ளக் கமலத்தில்
உறைந்திருக்கும் எம் ஆருயிர்த் தந்தையே!

பண்புடன் பாசத்தையும் சேர்த்தளித்து பாதியில்
நமைப்பிரிந்து கடந்தது ஆண்டுகள் ஆறு
ஆறாத்துயருடன் தவிக்கின்றோம் – அப்பாவே!
மீண்டும் எம்மிடம் வருவீர்கள் என எண்ணி
உங்கள் அன்புமுகம் தேடி போனவழிதனில்
பூக்கள் தூவி வணங்குகின்றோம் – ஐயா!

நாற்றம் தோட்டம்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி. (30096)(45.3.6)

இ.கனகம்மா குடும்பத்தினர்
0094 776 660 490

## புதுப் பொலிவுடன் பேசாலை இலுப்பையடி வரவேற்பு மாதா




மன்னார், பேசாலை இலுப்பையடியில் உள்ள வரவேற்பு மாதாவினுடைய சொரூபமும் அதன் சுற்றுப் புறமும் பேசாலைப் பகுதி இளைஞர் குழாமினால் புனரமைக்கப்பட்டுள்ளது. பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத் திருவிழா எதிர்வரும்8 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அதனை முன்னிட்டு பேசாலை நுழைவாயிலில் உள்ள மாதாவினுடைய சொரூபமும் அதன் சுற்றுப் புறமும் குறித்த இளைஞர் குழுவினால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (ஒ-12)

## மகேஸ்வரி நிதியத்தால் மணல் விலை அதிகரிப்பு

வடமராட்சி, டிசெ.2

கட்டடப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மணலின் விலை ஒரு உழவு இயந்திரச் சுமைக்கு (ஒருலோட்) 468 ரூபாவால் அதி கரிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இருந்து மணலை விநியோகிக்கும் மகேஸ்வரி நிதியம் மணலின் விலையை கடந்த மாதம் (நவம்பர்) முதல் அதிகரித் துள்ளது. உழவு இயந்திர வண்டிகளின் கூலி அதிகரிப்பு மற்றும் வரிகள் காரணமாகவே இதன் விலை அதிகரிக் கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந-8)

## விபத்துக்களில் சிக்கி 533 பேர் சிகிச்சை

### *சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மட்டும்*

தென்மராட்சி, டிசெ.2

கடந்த பத்து மாதங்களில் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த 533 பேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 144 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் உயிரிழந்தனர்.

இவ்வாறு குறித்த வைத்தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதன்படி ஜனவரி - 57, பெப்ரவரி - 46, மார்ச் - 76, ஏப்ரல் -44, மே - 76, ஜூன் - 32, ஜூலை - 44 ஓகஸ்ட் - 50, செப்ரெம்பர் - 59 , ஒக்ரோபர் - 49 என்ற எண்ணிக்கையில் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் குறைந்த எண்ணிக்கையானோர் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் வீதிப் பரிசோதனை அதிகரிப்பும் வீதி விபத்துக்கள் குறைவுக்கு காரணங்களில் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-9)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### கோதுமை பாவனையைக் குறைக்கலாமா?

கோதுமை மாவின் விலை அதிகரிக்குமோ என்ற கேள்விதான் இங்கு இப்போது எல்லோரது மனங்களிலும் ஒட்டி நிற்கிறது. காலையில் இன்னிசையுடன் வீதிக்கு வரும் பாண் வாகனங்களில் மட்டுமன்றி கடைகளிலும் 'ஓகோ' என்று நடைபெறுவது பணிஸ் வியாபாரம்தான் என்பதற்கு அங்கு மொய்த்து நிற்கும் சீருடைச் சிறுவர்கள் சாட்சி. தவிர ஏழைகளது, தொழிலாளர்களது பசிபோக்கும் அதிக செலவில்லாத பாணும், மாலையில் இளசுகளின் பிரியமான தாளலயத்துடன் தயாராகும் கொத்து றொட்டிக் குவியல்களும் சான்றாகும். கூப்பன்மா என்றும் அமெரிக்கன் மா என்றும் முன்னர் செல்லப் பெயர் கொண்ட கோதுமை மாவை முன்னர் பாவிப்பது மிக அரிது. ஆனால் இன்று அது மிகவும் வேண்டப்படுவதாகி விட்டது.

கால் நூற்றாண்டுக்குமேலாக இலங்கையில் கோதுமை மாவு தயாரிப்பில் ஈடுபட்டுவரும் நிறுவனத்தின் உயரதிகாரி இங்கு வந்தபோது "இந்த மண்ணில் சத்துமிகுந்த பல்வகைத் தானியங்கள் நிறைந்துள்ளன. கோதுமையில் மட்டுமல்லாது ஏனையவற்றிலும் நாட்டங்கொள்வது நல்லது" எனத் தெரிவித்திருந்தார். இலங்கை அரசு கூட கோதுமையின் பாவனையைக் குறைத்து அரிசிமாவின் பாவனையை அதிகரிக்கவென பல்வேறு வகையில் மேற்கொண்ட முயற்சிகளும் நினைவில் நிற்கின்றன.

கோதுமையின் பாவனையானது ஏனைய தானியங்களின் பாவனையையும் அவற்றினாலாகும் பயன்களையும் மறைத்துவிட்டிருக்கிறது எனலாம். வாதரோக நோயாளி ஒருவர் இறுதியாக சித்த மருத்துவரது ஆலோசனைக்கமைய வரகு அரிசிச்சோறு உண்டு குணமடைந்ததை அறிய முடிந்தது. தானியங்களில் எம்மவரைப் பொறுத்தவரை நீரிழிவு நோயாளருக்குத்தான் குரக்கன், லவ்பேட்ஸுக்குத்தான் தினையும், சாமையும் என்று நினைப்பதோடு சரி. நம்முன்னோர்கள் அபரக்கிரியைகளில் கூட நவதானியங்களை விதைத்து அவற்றின் அருமை பெருமைகளை உணர்த்தினார்கள். இறக்குமதிக் கோதுமையை மட்டும் நம்பி இருந்தால் "பாணுக்குப் பாலகன் வேண்டியமுதிடும் நிலை" வரக்கூடும்.

**லைடன் புடைவையகம்**

எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன் னிட்டு அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை துணி வகைகள் அனைத்தையும் விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளமுந்துங்கள்.

01.12.2013 தொடக்கம் 31.12.2013 வரை

லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**4ஆவது ஆண்டில்.....**

**வின் கல்வி நிலையம்**

புதிய கல்வியாண்டு-2014
ஆரம்பம்- 06.12.2013
மாலை 4.30 (வெள்ளி)

தரம் - 1-5வரை
மாதாந்த, தவணை, இடைத்தவணைப் பரீட்சைகள்,
தனிப்பட்ட கவனிப்பு, விசேட கற்பித்தல் முறைகள்

இல. 783, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**62 ஆவது அகவையில் எம் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன்...**




மண்ணில் எத்தனையோ
மனிதர் தோன்றி மறைந்தாலும்
பாரில் சிலரது பெயரே நிலைத்திருக்கும்.
அவ்வாறு நிலைத்திருக்கும் நாமங்களிலே
நம் ஸ்தாபகர் தியாகியின் நாமமும் ஒன்றாகும்
தங்கள் பணி மேன்மேலும் உயர்க!
தங்கள் புகழ் தழைத்தோங்க
இன்னும் பலஆண்டுகள்
சகல சுகத்துடன் வாழ
62 ஆவது அகவையைக் கொண்டாடும்
இந் நன்னாளில் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:** பணிப்பாளர், பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்,
527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

BEST WISHES

எமது ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்

**62ஆவது பிறந்த நாள் வாழ்த்து**




விருந்தினர் விடுதி அமைத்து
வருகின்ற வருமானத்தில்
வறுமையில் வாடுவோரை
வாழவைக்கும் எங்கள்
அறப்பணியாளரை - இந்த
62ஆவது அகவையில் மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
முகாமையாளர், பணியாளர்கள்.
ரிசிரி விருந்தினர் விடுதி,
இல. 46, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(4/13886) (7.8.3)

## கிளிநொச்சியில் நடைபெற்ற தொழிற்சந்தை நிகழ்வு



கிளிநொச்சி, டிசெ.2

கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய தொழிற் சந்தை வெள்ளிக்கிழமை கரைச்சி பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிற்சந்தையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வுகளை நடத்தினர்.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்கள அலுவலர் எஸ்.கமல்தாசன் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புத் தொடர்பான கருத்துரைகளை வழங்கினார். (ந-9)

## விண்ணப்பங்கள் கோரல்

வடமராட்சி, டிசெ.2

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வளதிணைக்களத்தினால் கரையோர பாதுகாப்புப் படையணிப் பதவிக்கும் வெளிக்களத் தொழிலாளி பதவிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நியமிப்பதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


பாதுகாப்புப் படையணிக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி மற்றும் மேலும் 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருக்க வேண்டும்.

வெளிக்களத் தொழிலாளி பதவிக்கு விண்ணப்பிப்போர் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர்நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் 4 ஆவது மாடி, புதிய செயலகம் மாலிகாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-8)

## கதிர்வீச்சுச் சிகிச்சைகள் மேலும் 6 இடங்களில்



மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் மாத்திரமே தற்போது புற்றுநோய்க்கு கதிர்வீச்சு சிகிச்சைகளை வழங்கும் மையம் உள்ளது.

அதனால் கதிர் வீச்சு சிகிச்சைகளை வழங்கும் மேலும் ஆறு மையங்களை இலங்கையிலுள்ள பிரதானமான வைத்தியசாலைகளிலும் நிறுவுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுவரை கதிர்வீச்சு சிகிச்சைகள் மற்றும் அயடின் சிகிச்சைகளை மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் மாத்திரமே பெறக்கூடிய வசதி அமைந்திருந்தது சிலபுற்றுநோயாளர்கள் சிகிச்சைகளைப் பெறுவதற்காக மூன்றரை வருடங்கள் வரை காத்திருக்க வேண்டி நேர்ந்திருந்தது.

இந்தப் புதிய செயற்றிட்டத்தின் கீழ் நோயாளியொருவருக்கு ஆறு மாத காலத்துக்குள் சிகிச்சைகளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையை விட யாழ்ப்பாணம், கண்டி, அநுராதபுரம், குருநாகல், பதுளை, காலி ஆகிய மாகாணங்களிலுள்ள பிரதானமான வைத்தியசாலைகளிலும் கதிர் வீச்சு சிகிச்சை மையங்கள் நிறுவப் படவுள்ளன. (ச-22)

## பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### *எச்சரிக்கிறது வர்த்தக சந்தை*

கொழும்பு,டிசெ.2

பால்மா வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன என்று வர்த்தக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகச் சந்தையில் பால்மாக்களின் விலை மட்டங்கள் அதிகளவில் உயர்வடைந்து செல்வதனால், சில பால்மா நிறுவனங்கள் தருவிப்பு முற்பதிவுகளை இடைநிறுத்திவிட்டுள் ளன. சில நிறுவனங்கள் பால்மா வகைகளுக்கான முன் அறிவிப்புக்களை நூற்றுக்கு 50 வீதத்தால் குறைத்துள்ளன.

உலகச்சந்தையில் 3700 முதல் 3800 அமெரிக்க டொலர்களாக நிலவிய ஒரு மெற்றித்தொன் பால்மாவின் விலை கடந்த 6 மாத காலத்துள் 5100 முதல் 5200 டொலர்கள் வரை உயர்வடைந்துள் ளது என்று பால்மா நிறுவனங்கள் தெரிவித்தன.

அதனால் தமக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைக் குறைத்துக் கொள்ளவே பால்மாக்களின் விலை மட்டங்களை அதிகரிக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக் காட்டுகின்றன.

தற்போதுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு எந்த வகையிலும் பால்மாக்களை சந்தைப்படுத்த முடியாது என்று பால்மா நிறுவனங்கள் தெரிவித்தன.

400 கிராம் நிறை கொண்ட பால்மா பைக்கற் ஒன்றை 450 ரூபாவுக்கும், ஒரு கிலோ நிறை கொண்ட பால்மா பைக்கற் ஒன்றை 1200 ரூபாவுக்கும் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது என்று பால்மா நிறுவனங்கள் கூறியுள்ளன.

இதேவேளை ஏழு பால்மா நிறுவனங்கள் பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளன.



பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை கடந்த ஆண்டின் மே மாதத்தில் பால்மா நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தன. அதற்கமைய 400 கிராம் பால்மா பைக்கற் ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 325 ரூபாவும்,ஒரு கிலோ பால்மா பைக்கற்றின் விலை 810 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)

## ஒருநாள் சேவையில் தேசிய அ.அட்டை

கொழும்பு,டிசெ.2

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் ஏழாம் திகதி விசேட ஒரு நாள் சேவையின்கீழ் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு ஆள்பதிவு திணைக்களம் உத்தேசித்துள்ளது.

அன்றையதினம் அடையாள அட்டைகளை பெறுவதற்காக மாணவர்கள் திணைக்களத்துக்கு வரவேண்டியதில்லை என்று ஆள்பதிவு ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்தார். இதற்கமைய உரிய ஆவணங் களுடன் பெற்றோர்களில் ஒருவர் ஆள்பதிவு திணைக்களத்துக்கு வருகைதந்து அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

மாணவர்கள் சார்பில் ஆசிரியர்களும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மாடுகளிலிருந்தும் அரசு தரகுப் பணம்

### *ஐ.தே.க.குற்றச்சாட்டு*

கொழும்பு,டிசெ.2

பால் உற்பத்தியை அதிகரிப்பதாகக் கூறி ஆஸ்திரேலியாவிடமிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யவேண்டிய பசு மாட்டை 7 லட்சத்துக்குக் கொள்வனவு செய்து மாடுகளிலிருந்தும் அரசு தரகுப் பணம் பெறுகிறது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் இரண் டாம் வாசிப்பு மீதான 6ஆம் நாள் விவாதத்தில் உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாதியர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அரசு தடைவிதித் தமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். தாதியர் உரிமையை மீறி எதேச்சாதிகாரப் பாதையில் அரசு பயணிக்கிறது.

வரவு - செலவுத்திட்டத்தை அரசு கொச்சைப்படுத்தியுள்ளது. வரவு - செலவுத்திட்டம் முன்னர் கறுப்புப் பெட்டிக்குள் வைத்து பத்திரமாகக் கொண்டு வரப்படும்.

ஆனால், தற் போது அது சிறிய புத்தகமாகக் கையில் எடுத்து வரப்படுகிறது. அடுத்த வருடம் அட்டைப் பைக் குள்தான் வரவு - செலவுத் திட்டம் கொண்டு வரப்படும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வரவு - செலவுத்திட்டத்தினூடாகவே தீர்மானிக்கப்படும். வளப் பகிர்வு, வருமானப் பகிர்வு, பொருளாதார ஸ்திரத் தன்மை, அரச முகாமைத்துவம் முதலான நான்கு விடயங்களும் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடங்கவேண்டும்.

ஆனால், இந்த நான்கு விடயங்களும் இதில் தோல்விகண்டுள்ளன.

அரச செலவுகளுக்காக ஆயிரத்து 542 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களுக்கு இடையிலான வளப்பகிர்விலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-சி)

## இலங்கையில் விசா இல்லாது தங்கியிருப்போர் நாடுகடத்தல்

கொழும்பு,டிசெ.2

இலங்கையில் விசா இன்றி தங்கியிருக்கும் ஆயிரம் பேரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குடி வரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இந்த தேடுதல் நடவடிக்கைகளை குடிவரவு குடியகல்வு திணைக்கள புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர் என்று அவர் கூறினார்.

விசா காலம் முடிவடைந்து பல ஆண்டுகளாக சிலர் இவ்வாறு நாட்டில் தங்கியிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசித்த சிலர் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் சிலர் திருமணம் செய்து கொண்டுள்ளனர். சிலரைக் காணவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

**“-” இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விசா காலம் முடிவடைந்தும் நாட்டில் தங்கியுள்ளனர்.**

இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விசா காலம் முடிவடைந்தும் நாட்டில் தங்கியுள்ளனர்.

இவர்களைக் கைது செய்து நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் சிவகுமார்



காரைநகர் தன்னை களபூமியைப் பிறப்பிடமாகவும், திக்கரை களபூமி காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சிவகுமார் நேற்று (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் செல்லம்மாவின் அன்புமகனும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் உதயரூபியின் பாசமிகு கணவரும் கீர்த்திகா, சஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகானந்தம், சிவமலர், நீதிராசா, சிவமணி, இந்திரகுமார், ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வேதநாயகம்,செல்வராசா (சிதம்பரி),புவனேஸ்வரி, இராசமலர், செல்வராசா, தயாநிதி, சரவணபவான் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2013) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் களபூமி தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை, காரைநகர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## இலங்கையில் 403 சிறுவர் இல்லங்கள்

### *12,925 சிறார்கள் தங்கியிருப்பு*

கொழும்பு,டிசெ.2

இலங்கையில் தற்போது மொத் தமாக 403 சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றன . அவற்றில் 12 ஆயிரத்து 925 சிறுவர்கள் தங்கியுள்ளனர் என்று சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல் கள் அமைச்சு தெரிவித்தது.

"இலங்கையில் 403 சிறுவர் இல்லங்களில் உள்ள 12 ஆயிரத்து 925 சிறுவர்களின் பாதுகாப்புக்காக 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 237.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இவர்களின் திறமைகளை விருத்திசெய்வதற்காக 28.51 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டது" என்று சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

### வருடாந்த பொதுக்கூட்டம் 15.12.2013
### வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

மேற்படி ஆலயத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான பரிபாலன சபை தெரிவிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியவில் ஆலய மணிமண்டபத்தில் நடைபெறும்.
2014 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவராக பதிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் சமூகம் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ந. ஜெகநாதன்
தலைவர்

பரிபாலன சபை சார்பில்
கே.எம். வரதராஜா (செயலாளர்)

### வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு ☞ மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் இல.10 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) Tel : 021 222 3536

### இல்லத்தரசிகளே!

தமிழ் சஞ்சிகை வரலாற்றில் உங்களுக்கெனத் தனித்துவ மாக வெளிவரும் இல்லத்தரசிகளின் தோழியான "ஒளி அரசி" டிசம்பர் மாத இதழ் (1ஆவது இதழ்) நேற்று 01.12.2013 நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிரைவேட் லிமிட்டெட்டால் வெளியிடப்பட்டுள்ளது. 80 சதவீதமான குடும்பத்தலைவிகளுக்கான ஆக்கங்களையும், 20 சதவீதமான ஏனைய அங்கத்தவர்களுக்குமான ஆக்கங்களையும், போட்டிகளையும் தாங்கி வெளிவந்துள்ளது. நீங்களும் பயன் பெற்று, உங்கள் பிள்ளைகளும் பயன்பெறக் கூடியவாறு மிகவும் அற்புதமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. மொத்தத்தில் அரசியல், பாலியல் கலக்காத குடும்பத்தவர் அனைவரும் மகிழ்வுடன் வாசிக்கக்கூடிய ஒரு பரிணாமப் படைப்பு. குடும்பத்தினர் அனைவரும் பரிசு பெறக்கூடியவாறு 6 அறிவியல் சார்ந்தப் போட்டிகள், மாணவர்களுக்கான கல்வி சம்பந்தமான வினைத் திறன் மிக்க வினாத்துணுக்குகள், உங்களின் பெருமைகளையும், முக்கியத்துவத்தையும் நீங்களும் ஏனையவர்களும் விளங்கிக்கொள்ளக்கூடிய பல ஆக்கங்கள், பெற்றோர்கள் சிந்திக்கவேண்டிய விடயங்கள், குடும்ப முன்னேற்றத்திற்கான பல ஆக்கக் குறிப்புகள் உட்பட பல சுவாரஸ்யமான ஆக்கங்களைத் தாங்கி வரும் இச்சஞ்சிகையை சகல பத்திரிகை முகவர்களிடமும், பத்திரிகை விற்பனை செய்யும் புத்தகச்சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். யாழ் நகரில் பூபாலசிங்கம் புத்தகச்சாலையிலும், அன்னை புத்தகச்சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு: 021 5677222, 071 6182182, 077 6569617.

# கனவுலகிலேயே மிதக்கிறார் இந்திய அமைச்சர் சிதம்பரம்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 2

இலங்கை தனி இறையாண்மை கொண்ட ஒரு நாடு. இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட நடைமுறைகள் பற்றி பேசுவதற்கு வெளியாட்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. இலங்கையில் இணைந்த வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு பெற்று கொடுக்கப்படும் என்ற இந்திய அமைச்சர் சிதம்பரத்தின் கருத்து கண்டனத்துக்குரியது.

அவர் கனவுலகில் மிதந்து கொண்டு கதைக்கிறார் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் மூத்த அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள கருத்துகுறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டு விவகாரம் பற்றி பேசுவதற்கு வெளியாள்களுக்கு உரிமை கிடையாது இந்தியாவில் தேர்தல் நடக்கவுள்ள சூழ்நிலையில், வாக்கு சேகரிக்கும் நோக்குடன்' அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ள கருத்துக்களை இலங்கை பெரிய அளவில் கணக்கில் எடுக்கவில்லை .

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன செய்துகொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி தற்காலிகமாகவே வடக்கு கிழக்கு பிராந்தியம் இணைக்கப்பட்டது.

பின்னர், வடக்குகிழக்கு இணைப்பு அரசியலமைப்புக்கு முரணானது என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்தது.எனவே அதுபற்றி பேச எவருக்கும் உரிமை கிடையாது .

'எங்கள் நாட்டு மக்கள் பயன்படுத்த கழிப்பறைகள் இருக்கின்றன. முதலில் அவர்கள் தமது ம்க்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எங்கள் நாட்டுப் பிரச்சினைகள் பற்றி இந்தியா பேசவேண்டியதில்லை.

'கனவுலகில் இருந்துகொண்டு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சிதம்பரத்தை முதலில் இங்கு வந்து நிலைமையை பார்க்கச் சொல்லுங்கள். தென்னிந்தியாவை விட வடபகுதி மக்கள் நல்ல வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்' -என்றார். (ஐ)

### முதியோர் பராமரிப்பு நிலையத்துக்கு நிதி உதவி

நவாலி, டிசெ.2

ஆனைக்கோட்டை முதியோர் பராமரிப்பு நிலையத்துக்கு ஒரு தொகைப் பணத்தை முதியோர்களின் நன்மை கருதி கனடாவைச் சேர்ந்த நலன் விரும்பி சின்னக்கிளி திருநாவுக்கரசு என்பவர் கடந்த சனிக்கிழமை அதன் தலைவர் கீத பொன்கலனிடம் வழங்கியுள்ளார்.

குறித்த நிலையத்துக்கு தற்போது கொக்குவில் சாயி நிறுவனத்தினர் மற்றும் வசதி படைத்தவர்கள் உணவுப் பொதிகள் மற்றும் பொருள்களையும் வழங்கி வருகின்றனர் எனவே இனிமேல் மாலை வேளையிலும் இங்குள்ளவர்களுக்கு தேநீர், சிற்றுண்டிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-100)

# வடபுலத்து கல்வித்துறையில் பெரும் குறைபாடுகள்; இவை குறித்து பதில் கூற வேண்டியவர்கள் யார்?

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.2

வடபுலத்து கல்வித் துறையின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

"சுற்றறிக்கைக்கான கல்வித் திணைக்களங்கள் சரியாகப் பின்பற்றாததால் வடபுலத்து கல்வித்துறையில் பெரும் குறைபாடுகள்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

நீண்ட காலமாக மத்திய கல்வி அமைச்சின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் வடமாகாணக் கல்விப் புலத்தில் பல்வேறு குறைபாடுகள் இருந்து வருவதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல தடவைகள் சுட்டிக்காட்டி, பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து ஒரு சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இன்னும் பல்வேறு குறைபாடுகளும், முறைப்பாடுகளும் தேக்க நிலையை அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது.

வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு இந்தத் துறைசார் முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கப் பெறுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்ய போதுமான ஒத்துழைப்புக்கள் இல்லை என்பதனையும் அறியமுடிகின்றது.

இதற்கு கல்வித்துறை சார்ந்த சுற்றறிக்கைகளையும் அறிவுறுத்தல்களையும் சரியாகப் பின்பற்றுவதில்லை என்பதனை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

கேள்வி ஞானத்தில் முன்னைய காலங்களிலும் "இப்ப டித்தான் செய்யப்பட்டது" என்ற வாதத்தினூடாக பலகாரியங்களை முன்னெடுப்பதே இதற்குப் பிரதான காரணமாகும்.

புதிய நியமனங்கள் வழங்கப்படும்போது கல்வித்துறைக்கான சுற்றறிக்கைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படுவதில்லை. அதிபர் நியமனங்கள், கல்வி அதிகாரிகளின் நியமனங்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் என்பன சுற்றறிக்கைகளுக்கு மாறாகவே நடைபெற்று வருகின்றன.

அதிபர்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் என்பன கூட ஒழுங்கான முறையில் அக்கறைகொண்டு தொழிற்படுவதில்லை என்பதற்கு கடந்த கால இடமாற்றங்களும், மேன்முறையீடுகளும், ஆளுநரின் தலையீடும் உதாரணங்களாகும். ஆசிரிய இடமாற்றங்கள் பிள்ளைகளின் கல்வியில் எவ்வாறான தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதனையும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பிரதான பங்காளிகள் ஆசிரியர்கள்தான் என்பதை இன்னும் புரிந்துகொள்ளாமல் இருப்பது வேதனை தருகின்றது. இதற்காக நாம் போராட்ட வழிமுறைகளைக் கைகளில் எடுக்க வேண்டிய கட்டாயங்களுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வலயங்களில் இருந்து வருகின்ற இடமாற்றங்கள் மாகாணக் கல்வித் திணைக் களத்தினால் நிராகரிக்கப்படுவதும் வலயத்தினால் நிராகரிக்கப்படும் இடமாற்றங்கள் மாகாணத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் சர்வ சாதாரணமாகிவிட் டது. இங்கு மேலாதிக்க நடை முறை பின்பற்றப்படுவது அதிகரித்தே செல்கின்றது. இதற்காக ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் விண்ணப்பத்துடன் மேலதிகமாக பல மேன்முறையீடுகளையும் தயார்ப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

கடந்த பல ஆண்டுகால அனர்த்தமான சூழ்நிலைகளால் தொழில்களை இழந்த பல அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் புலம் சார்ந்தவர்களின் மீள் நியமனங்களில் கூட பொதுச் சேவைகள் ஆணைக் குழு தலையிட்டு மீள் நியமனங்களை வழங்கும் அளவுக்கு மனிதாபிமானமில்லாத வகையில் அதிகாரிகள் நடந்து கொள்வதனை அறிய முடிகின்றது. அதில் அதிபர்கள், ஆசிரியர்களுக்குச் சாதகமாகச் சுற்றறிக்கைகளில் உள்ள வாச கங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத அதிகாரி களே இவற்றுக்கெல்லாம் கார ணம் எனவும், அவர்களின் அசமந்தப் போக்குகளால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

பொதுச் சேவை ஆணைக் குழுவின் கோரிக்கைகளுக்கு உரிய காலங்களில் பதில் கொடுக்க முடியாத அதிகாரிகள் எவ்வாறு அதிபர், ஆசிரியர் களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வார்கள்? இவர்களின் நடவடிக்கைகளால் பலர் தொழிலை இழந்திருக்கின்றார்கள், தொழிலில் இருந்து நீங்கியிருக்கின்றார்கள், கட்டாயமாகச் சிலர் தொழிலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

வேறு மாகாணங்களில் இவ்வாறான குறைபாடுகள் குறைவாக இருப்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதாரங்களுடன் முன்வைக்கத் தயாராக இருக்கின்றது.

மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் வடமாகா ணத்தில் செல்லுபடியாகுமா?, அவற்றைப் பின்பற்றுவதா?, இல்லையா?, வடமாகாணத்துக்கென புதிய சுற்றறிக்கைகள் இருக்கின்றனவா?, வடமாகாணத்தில் உள்ள மத்திய கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வித் துறைசார் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது? இங்கிருக்கும் அதிகாரிகள் இங்கொன்றும், அங்கொன்றும் செய்கின்றார்களா? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியவர்கள் யார்? என்பதனை இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வினவி நிற்கின்றது.- என்றுள்ளது. (ஒ)

### நோயாளர் நலன்புரி சங்கச் செயற்பாடு ஆரம்பம்

குருநகர், டிசெ.2

குருநகர் பிரதேச மருத்துவமனையில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயற்பாடுகள் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.விமலேந்திரன் தெரிவித் தார்.

அன்றைய தினம் மு.ப.10.30 மணிக்கு நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்துக்கு வருகை தந்த அங்கத்தவர்களுக்கு நோயாளர் நலன்புரி சங்கத்தின் சட்ட யாப்பு விதிகள் அறியத்தரப்பட்டதுடன் நடப்பு வருட நிர்வாகிகளும் அங்கத் தவர்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

குருநகர் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவராக இந்த மருத்துவமனை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.விமலேந்திரனும், செயலாளராக ம.ஞானசீலன், பொருளாளராக பே.பிரான்சிஸ், உப தலைவராக மருத்துவர் ஏ.ஈ. ஞானஜோதி, உப செயலாளராக க.யோகரெட்ணம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர் ஏனைய உறுப்பினர்கள், கணக்காய்வாளர்கள் ஆகியோரும் இதன் போது தெரிவு செய்யப்பட்டனர். (வ-51)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் 57 பேரும், கடந்த ஜனவரியில் இருந்து நேற்று வரையான காலப்பகுதி வரை 533 பேர் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ங-4)

### நவாலி

தெரியவருவதாவது;

குறித்த சிறுமி வீட்டில் உள்ள நாய்க்குட்டி ஒன்றை மூன்று மாதங்களுக்கு முன்னர் தூக்கி விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது தவறுதலாக நாய்க்குட்டியின் கால் நகம் சிறுமியின் காலில் கீறியுள்ளது. உடனேயே சிறுமியின் தாயார் நகம் கீறிய காயத்தை சவர்க்காரம் போட்டுக் கழுவியுள்ளார். பின்னர் நவாலியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சிகிச்சைக்காக அழைத்துச சென்றுள்ளார். அங்கு சில நாள்களுக்கு முன்னர் சிறுமி கற்கும் பாடசாலையில் அ வருக்கு ஏற்பூசி ஏற்றப்பட்ட விடயத்தை தாயார் மருத்துவருக்குத் தெரிவித்தார்.

"சிறுமியின் காலில் நாய்க் குட்டியின் நகம் கீறிய இடம் சுகாதாரமானது. எனவே ஆபத்தில்லை" என்று மருத்துவர் கூறியதனால் சிறுமியைத் தாயார் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

எனினும் சம்பவம் இடம் பெற்று மூன்று வாரங்களின் பின்னர் நாய்க்குட்டி இறந்து விட்டது. சிறுமிக்கு விசர் நாய்க் கடியோ, வேறு எந்த வகைத் தடுப்பூசியும் பின்னர் ஏற்றப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுமிக்கு திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டது. அவர் அன்றைய தினமே யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் இரவு சிறுமி உயிரிழந்தார்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். நாய்க்குட்டியின் கால் நகம் கீறியதனாலேயே குழந்தை உயிரிழந்திருக்கலாம் என்று பெற்றோர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஆயினும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே அது குறித்து உறுதியாகக் கூறமுடியும் என்று போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ங-4)

### இந்தியாவின்

தரப்பினருக்கும் பாதிப்பேற்படாத் வகையிலும் இருத்தல் வேண்டும். அரசு என்ற ரீதியில் நாம் இதை கவனத்தில் எடுக்க வேண்டும். இதனால், மக்கள் அனைவரினதும் நலன் கருதி அதில் சில மாற்றங்களை செய்ய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு கலந்தாலோசித்து வருகிறது.

அப்படி சில மாற்றங்களை செய்து 13 ஆவது திருத்தத்தை அரசு நிச்சயமாக நடை முறைப் படுத்தும். இது குறித்து நான் நாடாளுமன்றிலும், தனிப்பட்ட முறையிலும் ஜனாதிபதிக் கும் அரசிற்கும் அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டே வருகிறேன்" என்றார்

அப்போது, வட மாகாணசபையில் அண்மைய காலமாக எழுகின்ற பிரச்சினைகள் குறித்து அமைச்சரிடம் வினவிய போது,

"நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையே வடக்கில் உள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் காரணமாகும். இது முதலில் இல்லாதொழிக்கப்பட வேண்டும். இந்த ஜனாதிபதி முறைமையே மாகாணசபைகளுக்கான அதிகாரத்தை தீர்மானிக்கின்றது. இம்முறைமை இருக்கின்ற வரைக்கும் இதன்படியே செயற்பட வேண்டும். இல்லை யேல் நாட்டில் அரசமைப்பை மாற்றியமைக்க வேண் டும். எனினும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை எப்போதும் நாம் எதிர்க்கிறோம்" என்றார். (ங-சி)

### அவசரமாக

கில் இலங்கை ஜனாதிபதி தனது சகோதரரான அமைச்சர் பஸிலை தூதனுப்புகிறார் என்று தெரியவருகின்றது.

13ஆவது திருத்தம், அரசியல் தீர்வு விடயம் உட்பட சில விடயங்களில் இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசு இன்னும் நிறை வேற்றவில்லை என்ற குற்றச்சாட்டு டில்லித் தரப்பால் முன்வைக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.

இந்த நிலையில், 13ஆவது திருத்தம், அரசியல் தீர்வு விவகாரம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் அமைச்சர் பஸில், இப்பயணத் தின்போது முக்கிய சில உறுதிமொழிகளை வழங்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், அமைச்சர் பஸிலின் இந்தியப் பயணம் தொடர்பிலான விவரத்தை இலங்கை அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திடீர் பயணத்தை மேற்கொண்ட பாணியிலேயே இவரும் செல்வார் என்று கூறப் படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பிரதமர் அலுவலக முக்கியஸ்தர்கள் உட்படப் பல தரப்பினரையும் அமைச்சர் பஸில் இப்பயணத்தின் போது சந்தித்துப் பேசுவார் எனவும் அறியமுடிகின்றது.

### றெக்ஷயன்

முன்னெடுத்துள்ளனர். எனினும் இது வரை இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை" என்றார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரான றெக்ஷயன் கடந்த செவ்வாய்க்கிழமை மைக்ரோ 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கியால் தலையில் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். அவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் யார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் பலர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் சுடப்பட்ட 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கியே றெக்ஷயனின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. விசாரணை தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றன. (ங-4)

## யாழ்.லீக் உதைபந்து ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இந்த ஆட்டத்தில் நாவாந் துறை சென்.நீக்கிலஸ் விளை யாட்டுக் கழக அணி மிகச் சிறப்பாக விளையாடி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களை பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## இளம்பறவை, சென்.யூட் அணிகள் அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.2
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சென் யூட், இளம்பறவை அணிகள் வெற்றி பெற்றுள்ளன.
உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கோல் மழை பொழிந்த சென்.யூட் விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெற வில்லை. எனவே ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## மென்பந்துக் கிரிக்கெட்தொடர்; பரலோகமாதா சம்பியன்



வவுனியா கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரில் பரலோக மாதா அணி சம்பியனானது. அணித் தலைவரிடம் வவுனியா கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் தலைவர் சொலமன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (ங-23)

## தாச்சி சுற்றுப் போட்டி



யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் தாச்சி சுற்றுப் போட்டி ஒன்றை எதிர்வரும் 7 ஆம் திகதி நடத்தவுள்ளது.
இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள், தங்களின் பதிவுகளை யாழ். நகரில் கே.கே.எஸ்.வீதி, இல. 379 இல் உள்ள வர்த்தக நிலையத்தில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-288)

# 'யங்ஸ்ரார்' மென்பந்து கிரிக்கெட்; வெற்றியீட்டிய அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ.2
வவுனியா வைரவர் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியில் நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-
'திரிபேட்ஸ்' விளையாட்டுக் கழக அணியு ம் லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் ஒரு ஆட்டத்தில் மோதிக் கொண்டன.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய 'திரிபேட்ஸ்' விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கினை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் தீபன் 15 ஓட்டங்களையும், சுரேன் 8 ஓட்டங்களையும், பிரசன்ன 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் சதீஸ் ஓர் இலக்கினை வீழ்த்தினார்.
57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.
அந்த அணி சார்பாக வினோத் 21 ஓட்டங்களையும் சிவா20 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் 'திரிபேட்ஸ்' விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேன் ஓர் இலக்கினை வீழ்த்தினர்.
'பிரட்ண்ஸ்' விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் அடைக்கலமாதா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிரட்ண்ஸ் 'ஏ' அணியினர் 4.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களையே தமது அணி சார்பாகப் பெறமுடிந்தது.
இதில் தயா 8 ஓட்டங்களையும் அம்பிலா 4 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் அடைக்கலமாதா விளையாட்டுக்கழக அணி சார்பில் றம்சின் 2 இலக்குகளையும் றெனி, சந்துரு ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.
29 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அடைக்கலமாதா விளையாட்டுக்கழக அணியினர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 2.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.
இதில் றெனி 12 ஓட்டங்களையும், சந்துரு 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரட்ண்ஸ் 'ஏ' விளையாட்டுக்கழக அணி சார்பில் தயா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.
இன்னொரு ஆட்டத்தில் சீர்திருத்த விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சீர்திருத்த விளையாட்டுக் கழக அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மூன்று இலக்குகளை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றனர்.
இதில் தேவா 14 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற் றார்.
பந்துவீச்சில் லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பாக கிருபா 2 இலக்கையும், நிதர்சன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
29 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 3.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றியீட்டினர்.
இதில் நிதர்சன் 14 ஓட்டங்களையும், கிருபா 8 ஓட்டங்களைப் தமது அணி சார்பாகப் பெற்று வெற்றிக்கு வழி அமைத்தனர்.
பந்துவீச்சில் சீர்திருத்த விளையாட்டுக்கழக அணி சார்பாக தேவா ஓர் இலக்கை வீழ்த்தினார்.
லயன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் 'நியூ பேட்ஸ்' விளையாட்டுக் கழக அணிக்கும் இடையேயான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் சந்திரா 7 ஓட்டங்களை தமது அணி சார்பாக அதிகபட்சமாகப் பதிவு செய் தார்.
பந்துவீச்சில் 'நியூபேட்ஸ்' விளையாட்டுக் கழக அணி சார்பில் றம்சன், நிலான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் யோன்சன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
24 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூபேட்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 4.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து சுலபமாக வெற்றி பெற்றனர்.
யோன்சன் 12 ஓட்டங்களையும், றோபோ 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்று வெற்றியை உறுதி செய்தனர்.
பந்துவீச்சில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் செமி ஓர் இலக்கை வீழ்த்தினார். (ங-23)

## பள்ளிமுனை சென்லூசியஸிடம் பணிந்தது வதிரி டைமன்ஸ்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் "எவ்.ஏ" கிண்ணத்துக்காக நேற்றுமுன்தினம் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் வதிரி டைமன்ஸ்அணியைபள்ளிமுனை சென்லூசியஸ்அணிவீழ்த்தியது.
ஆட்டம் தொடங்கியதிலிருந்தே சென்லூசியஸ் அணியின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் டைமன்ஸ் வீரர்கள் திணறினர். அதி லும் குறிப்பாக அந்த அணி யைச் சேர்ந்த எடிசன், ஜோன் பிங்கோ ஆகியோரின் ஆட்டம் அபாரமாக அமைந்தது. இதனால் ஆட்டம் தொடங்கி 7 ஆவது 10 ஆவது நிமிடங்களில் சென் லூசியஸ் அணி வீரர் எடிசன் இருகோல்களைப் போட டைமன்ஸ் அணி வீரர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதன் பின்னரும் 14 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் சென்லூசியஸ் அணி வீரர் ஜோன்பிங்கோ அடுத்தடுத்து அடித்த இரு கோல்களும் டைமன்ஸ் அணியினரை நிலைகுலைய வைத்தது.
மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்த்த இந்த ஆட்டம் ஏமாற்றத்தையே தந்தது.
இதனால் இடைவேளைக்கு முன்னர் 4:0 என்ற கோல் கணக்கில் சென்லூசியஸ் அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் டைமன்ஸ் அணி வீரர்கள் சென்லூசியஸ் அணியின் முன்னேற்றத்துக்கு தடைபோட்டனர். இதனால் சென்லூசியஸ் அணியினருக்கு கோல் போடும் வாய்ப்புக்கள் கைகூடவில்லை.
இடைவேளையின் பின் 12 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. இதனைச் சரியாகப் பயன்படுத்தி டைமன்ஸ் அணி வீரர் ரஜீவன் கோலாக்கினார். அதன் பின்னரும் டைமன்ஸ் வீரர் சுசிகரன் 15 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டு தமது அணியை வெற்றியை நோக்கிக் கொண்டு செல்ல முற்பட்ட போது சென்லூசியஸ் அணி வீரர்கள் தம்மை சுதாகரித்துக் கொண்டு முன்னேறுவதை நிறுத்தி தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இருந்த போதும் ஆட்டம் நிறைவடைவதற்கு 2 நிமிடம் இருந்த போதும் சென்லூசியஸ் அணி வீரர் ஜோன் பிங்கோ மேலும் ஒருகோ லைப் போட்டு அசத்தினார். ஆட்ட நேர முடிவில் 5:2 என்ற கோல் வித்தியாசத்தில் மன்னார் பள்ளி முனை சென்லூசியஸ் அணி அபார வெற்றி பெற்றது. (ங-23)

## ஊரெழு றோயல் சம்பியனானது



யாழ்ப்பாணம், டிசெ.02
யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்திய லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி சம்பியன் ஆனது.
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 6 புள்ளிகளுடன் முதலாமிடத்தைப் பெற்று சம்பியன் ஆனது.
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 4 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. இந்தத் தொடரில் கடந்த வருடம் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (ங-23)

## சச்சினின் புகழ் பாடவேண்டாம்- ஊடகங்களுக்கு தலிபான் மிரட்டல்



கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் புகழ் தொடர்பான செய்திகளை பாகிஸ்தான் ஊடகங்கள் வெளியிடக்கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள தலிபான்கள், இந்தியக் கிரிக்கெட் வீரர் ஒருவரை அளவுக்கு அதிகமாக பாகிஸ்தான் ஊடகங்கள் புகழ்வது காலத்துக்குப் பொருத்தமானது அல்ல என தெரிவித்துள்ளனர்.

சச்சின் டெண்டுல்கர் சிறந்த கிரிக்கெட் வீரர் என்பதில் தமக்கு மாற்றுக்கருத்து இல்லையென்றாலும், அவர் பாகிஸ்தான் நாட்டவர் அல்ல என்பதை மறந்து விடக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மைக்காலமாக சச்சின் டெண்டுல்கர் குறித்து அனைத்துப் பாகிஸ்தான் ஊடகங்களும் அதிகளவு கவனம் செலுத்தியிருந்தன. அத்துடன் சொந்த நாட்டு வீரர்களை மிக மோசமாக ஏற்கமுடியாத விதத்தில் விமர்சிக்கும் பாகிஸ்தான் ஊடகங்களின் மனப்பாங்கு மாறவேண்டும் என்றும் தலிபான்கள் அறிவித்துள்ளனர். (கு)




## அதிக சதங்கள் அடித்த இந்திய அணி

2013ஆம் ஆண்டில் அதிக சர்வதேசச் சதங்களை விளாசிய அணி என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20/20 போட்டி ஆகிய மூன்று வடிவிலான சர்வதேச கிரிக்கெட்டையும் சேர்த்து மொத்தம் 22 சதங்களை இந்தியா பதிவு செய்துள்ளது. டெஸ்டில் 10 சதங்களும், ஒரு நாள் போட்டியில் 12 சதங்களும் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் ஆஸ்திரேலியா உள்ளது. அந்த அணி 21 சதங்கள் எடுத்துள்ளது.

மேலும் இந்த ஆண்டில் ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் முதல் 3 இடங்களையும் இந்தியாவின் விராட் கோஹ்லி (1237 ஓட்டங்கள்- 31ஆட்டம்), ரோஹித் ஷர்மா (1159 ஓட்டங்கள்- 25 ஆட்டம்), ஷிகர் தவான் (1150 ஓட்டங்கள்- 23 ஆட்டம்) ஆகியோர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## உலக டெஸ்ட் சம்பியன்ஸிப்: எதிர்பார்ப்பில் இலங்கை



2017ஆம் அண்டு இங்கிலாந்தில் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஸிப் தொடர் தொடர்பாக எதிர்பார்ப்புகளுடன் காணப்படுவதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஸிப் போட்டிகளின்படி, 2017ஆம் ஆண்டு உலக டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 4 இடங்களில் காணப்படும் அணிகளும் உலக டெஸ்ட் சம்பியன்ஸிப் தொடரில் பங்குபற்றவுள்ளன. இந்த முறையின்படி, அனைத்து டெஸ்ட் போட்டிகளும் முக்கியமானவையாகக் காணப்படவுள்ளன. தொடரை மாத்திரம் வெற்றி கொள்வது நீண்ட கால நோக்கில் போதுமானதாகக் காணப்படாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அர்ஜுன ரணதுங்க, டெஸ்ட் போட்டிகளை மேலே உயர்த்துவதற்கு ஏதாவதொன்று செய்யப்பட வேண்டும்.

இந்த டெஸ்ட் சம்பி யன்ஸிப் தொடர் சில நாடுகளுக்கும், சில வீரர்களுக்கும் சிறந்த ஆதரவை வழங்கும் எனக் குறிப்பிட்டார்.

சில நாடுகளில் ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு முழுமையாக சாதகமானவையாகக் காணப்படும் நிலை யில், டெஸ்ட் சம்பியன்ஸிப் போட்டிகள் இடம்பெறும் ஆடுகளங்கள் சமநிலையாகக் காணப்படும் என அவர் தெரிவித்தார். (கு)

## அடிலெய்ட் போட்டி கடினமாக அமையும்

*- பீற்றர்சிடில்*

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான ஆஷஷ் தொடரின் இரண்டாவது போட்டி கடினமான போட்டியாக அமையும் என எதிர்பார்ப்பதாக ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி இலகுவான வெற்றி பெற்றதோடு, முதலாவது போட்டியில் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தனர்.

எனினும், அடுத்த போட்டி இடம்பெறவுள்ள அடிலெய்ட் மைதானம் தட்டையான ஆடுகளமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வேகப்பந்து வீச்சாளர்கள் தடுமாற வேண்டி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடிலெய்ட் மைதானத்தில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அதிக பணிச்சுமை காணப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த பீற்றர் சிடில், அது எந்த முறையும் அதிக பணிச்சுமையுடனேயே காணப்படுவதாகத் தெரிவித்தார். எனினும் இம்முறை அனைவரும் முழுமையான உடற்தகுதியுடன் காணப்படுவர் என நம்புவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த முறை ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் அடிலெய்டில் இடம்பெற்ற போட்டியில் ஜேம்ஸ் பற்றின்சன் உபாதைக்குள்ளாக, அந்தப் போட்டியில் பீற்றர் சிடில் 63.5 பந்துப் பரிமாற்றங்களை வீசியி ருந்ததோடு, அதற்கடுத்த டெஸ்ற் போட்டியில் பங்கு பற்ற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (கு)



## 40 வயதிலும் சாதனை



40 வயதைக் கடந்தபின்பும் உதைபந்தாட்டத்தில் பங்கேற்று வரலாற்றில் தனது பெயரை அழுத்தமாகப் பதிவு செய்து கொண்டார் ரியான் கிக்ஸ், வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த கிக்ஸ். மன்செஸ்டர் யுனைட்டட் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவர், தனது 40ஆவது பிறந்த நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடினார். 1991ஆம் ஆண்டு முதல் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டு வரும் கிக்ஸ், உதைபந்து விளையாட்டையே தனது மூச்சாகக் கொண்டுள்ளார். நடுகள வீரரான கிக்ஸ், பிராந்திய அணிக்காக மட்டும் இதுவரை 953 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

தனது நீண்ட அனுபவம் குறித்து கிக்ஸ் கூறியதாவது.

சிறந்த உதைபந்தாட்ட அணி கிடைத்தது எனது அதிர்ஷ்டமே. எனது அணியில் உள்ள வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் சிறந்தவர்கள். சில நேரங்களில் விளையாடுவது கடினமாக இருக்கும். இருப்பினும் அனுபவித்து விளையாடி வருகிறேன். என்னால் முடியும் வரை உதைபந்து விளையாட்டைத் தொடர்வேன். ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக விளையாட வேண்டும்; அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுத் தர வேண்டும் என்று விரும்புகிறேன். ஒவ்வொரு ஆட்டத்திலும் விளையாடும் வாய்ப்பைப் பெற கடினமாக பயிற்சி மேற்கொண்டு வருகிறேன் என்று தெரிவித்தார்.

## தேவை

நல்ல நிலையிலுள்ள வொக்ஸ் வகன் (Volks Wagon) 1300cc கார் தேவை.
தொடர்பு:- 0786155929, 021 320 5939


## 7 ஆவது ஐ.பி.எல். போட்டி அடுத்த வருடம் வெளிநாட்டில்

இந்த ஐ.பி.எல். போட்டி வெளிநாட்டில் நடத்தப் பட அதிகமான வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் அடுத்த ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல் நடக்கிறது. இதனால் ஐ.பி.எல். போட்டிக்கு பாதுகாப்பு வழங்க இயலாது. எனவே ஐ.பி.எல். போட்டியை வெளி நாட்டில் நடத்துவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

இதுகுறித்து ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழு கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. சிங்கப்பூரில் 2 நாட்கள் இந்த ஆலோசனை நடந்தது. இந்த கூட்டத்தில்பங்கேற்ற ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் இந்தியாவில்தான் போட்டியை நடந்த வேண்டும், வேறு நாட்டுக்கு மாற்றாக்கூடாது என்று வலியுறுத்தினார்கள்.

ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ் சாப், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், ரோயல்ஸ் சேலஞ் சர்ஸ் பெங்களூர் ஆகிய 4 அணிகளின் உரிமையாளர்கள் ஐ.பி. எல். போட்டியை வேறு இடத் துக்கு மாற்றக் கூடாது என்று ஏற்கனவே தெரிவித்து இருந்தனர். நாடாளுமன்ற தேர் தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு இது குறித்து முடிவு செய் யப்படும். 2009ம் ஆண்டு நாடாளு மன்ற தேர்தல் கார ணமாக ஐ.பி.எல். போட்டி தென் ஆப்பிரிக்காவில் நடத் தப்பட்டது.

அடுத்த ஆண்டு நடைபெறும்ஐ.பி.எல்போட்டிக்கு வீரர்கள் அனைவரும் புதிதாக ஏலம் விடப்படு கின்றனர். இதற்காக அணிகளின் சம்பள உச்ச வரம்பு ரூ.60 கோடியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(ந-400)


# MBA
## MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT

ALDERSGATE COLLEGE
Accredited and UGC approved

New Batch Starts on 14/12/2013 at 10.00 am.



Duration : 1 year

**Admission Requirements**
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
077 999 2484



## French Classes பிரெஞ் வகுப்புகள்



French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் **Alliance Française de Jaffna** (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



## அன்னை புத்தகசாலை வாடிக்கையாளர்களுக்கு

**பருவகால விற்பனையை முன்னிட்டு**

★ 2014ஆம் ஆண்டுக்கான புதிய பதிப்பு புத்தகங்கள் ந.சந்திரகுமார் (மட்டக்களப்பு) தரம் 1 முதல் 5 வரையா ன பாடப்புத்தகங்கள்.
★ இஸ்லாமிக் புத்தகசாலையின் வெளியீடான ஏ.எஸ்.ஜெளபர் ஆசிரியரின் தரம் 1முதல் 5வரை சகல பாடப்புத்தககங்கள்
★ கொழும்பில் உள்ள பிரபல வெளியீட்டுப் பிரிவுகளின் புத்தகங்கள்
★ English Medium Books-Grade - 6-11 All Subject and Question Paper (model)
★ சகல விதமான கொப்பிகள் மற்றும் காகிதாதிகள்
★ கலண்டர், டயரிகள் மற்றும் சகல பாடசாலை உபகரணங்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு புத்தகம் வாங்கினாலும் விலைக்கழிவு உண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்.

குறிப்பு:- வாடிக்கையாளரின் வசதி கருதி விசாலமான இடவசதி செய்யப்பட்டுள்ளது.

**மொத்தமாக கொள்வனவு செய்யும் பாடசாலைகள், கல்விக் கூடங்கள், கடைகள் என்பனவற்றுக்கு அதி விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.**

**அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**
**021 222 9881**



வீழ்ச்சி கண்ட யாழ்ப்பாண கலை இலக்கியத்துறை எழுச்சி காண உதயமாகியது

## திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்

★ எங்கள் ஊர் இலக்கியம் தற்போது அடையாளம் இழந்து போகின்றது.
★ இலக்கிய ஒன்று கூடல்கள் நூல் வெளியீடுகள் கலாசார சந்திப்புக்கள் அறவே இல்லை என்கின்ற நிலை
★ ஈழத்து எழுத்தாளர்கள் தமது புத்தகங்களை வெளியிடுவதென்பது தற்கொலைக்கொப்பான செயலாக மாறியுள்ளது.
★ வாசிப்பு பழக்கம் தற்போது மறைந்து வருகின்றது.

இந்நிலை மாற்றம் காண முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி சமூகப் பொறுப்புடன் தனது நிதி ஊட்டத்தில் உருவாக்கிய சுதந்தி ரமான செயற்பாட்டிற்குரிய சமூக தனி அலகே திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்.

★ வருடம் தோறும் இரண்டு லட்சம் நிதி ஊட்டம் திசைகாட்டியிடம் இருந்துகிடைக்கும்
★ யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எவரும் இதன் உருப்புரிமை பெறலாம்.
★ இதன் உறுப்புமையில் திசைகாட்டி பங்கு பெறாது சுயாதீனமாக இயங்கும்.
★ திசைகாட்டி இயக்குநர் சபை இதற்காக இணைப்பாளர் ஒருவரை நியமிக்கும்
★ உறுப்பினர்கள் தாம் தமது செயற்குழுவைத் தேர்வு செய்து நடத்திச் செல்லலாம்.

எழுத்தாளர்கள் ஆர்வலர்கள் ஊடகவியலாளர்கள் உட்பட அனைவரையும் எதிர் வரும் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு எமது அலுவலகத்தில் நடை பெறவுள்ள

ஆரம்ப ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கருத்தாய்ந்து எம்மை வழிநடத்தி ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தயவுகூர்ந்து தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யவும்.

பொது முகாமையாளர்,
திசைகாட்டி பிறைவேற் லிமிட்,
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com



(14219.17.14)


## நினைவலையில் 31ஆம் நாள்..........



### திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்

(ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் தெல்லிப்பழை, சங்கானை)

எண்ணரு கலைகளும் வாய்க்கப்பெற்றவரே!
திறனுடன் செயல்பல ஆற்றிட வல்லவரே!
மாகாணம் மாவட்டம் எங்கும் தடம் பதித்தீரே!
புதுமைப் பெண்ணாக சாதித்து வென்றீரே!
எழுத்துரு ஆக்ககங்கள் பலயாத்துத் தந்தீரே!
ஈசன்பால் அன்பொடு- உருகியே நின்றீரே!
எந்தையின் பதமதில் நற்கதி அடைவீரே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய அன்னபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குருசுமதவடி,
A.M. பாடசாலையடி, ஆனைக்கோட்டை (14219.17.14) குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.